553

காவேரி



CAUVERI Oct. 1943 6 அணா

நறுமணம் வீசும்

கிட்டப்பா மார்க்

ரிஜிஸ்டர் நெ. 61

புகையிலை & சீவல்

உயர்ந்த சிவபுரி புகையிலையின் தயாரிப்பு. செயற்கை வஸ்துக்கள் இல்லா
இயற்கைச் சுவை, மணம், குணம் இவைகளடங்கியது.

ஒருதரம் உபயோகித்தால் அதையே விரும்பி உபயோகிப்பீர்கள். ‘கிட்டப்பா
சீவலும் அப்படியே. அப்புகையிலைக்கு இணைபிரியாத நண்பன்.

எப்பொழுதும் இவைகளையே உபயோகியுங்கள்.

சென்னை ஸிட்டிக்கும் பிரநிதிகளில்லாத மற்ற நகரங்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

சென்னை பிராஞ்சு:-
16, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

A. D. சுல்தான் & Co.,
கும்பகோணம்

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர் மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கை தேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— **வி. எஸ். & ஸன்ஸ்**

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:— V. S. & Sons,

KUMBAKONAM.

...OF THE REGISTRAR O...
2 DEC 1943
MADRAS

★ பொருளடக்கம் ★

சுபானு மலர் 3
ஐப்பசி இதழ் 3

248543

விம்புக்கு வேதாந்தம்	... ...	3
இவருக்கேது தீபாவளி?	... ...	5
கதம்பம்	... ...	8
பிருந்தாவனத்திலே	... ரா. ஸ்ரீ தேசிகன்	10
புத்தகவிமர்சனம்	... ...	15
முதல் தீபாவளி	... எம். எஸ். கமலா	17
ஸுஜாதா	... கமலா பத்மநாபன்	25
என்று வருவானோ?	... எம் எல். சபரிராஜன்	30
லலிதாவின் வெற்றி	... கே. சுந்தரம்மாள்	35
புண்ணும், பெண்ணும்	... "ஸ்ரீரா"	47
அக்குழந்தைகள்	... ரா. வீழிநாதன்	51
தைரியசாலி	... கௌசீ	55

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினாப்பள்ளி.

N.B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

1776

காவேரி

சுபானு | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஐப்பசி

மலர் 3 | | இதழ் 3

விம்புக்கு வேதாந்தம்

பிலிப்பைன்ஸ் தீவிற்கு இவ் வருடமே பூரண சுதந்திரம் அளித்துவிடவேண்டும் என ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பிரபு அமெரிக்க காங்கிரஸில் ஓர் பிரேரபணை செய்திருக்கிறார். இச் செய்தி அடிமை நாட்டினர் எல்லோரையும் மகிழ்விக்கச் செய்யுமென்பதில் சந்தேகமில்லை.

இன்று அத் தீவுகள் ஜப்பான் வசமிருப்பதினால்தான் ரூஸ்வெல்ட் இவ்வாறு வாக்குறுதி அளித்திருக்கிறார் என்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் அது முற்றிலும் உண்மையாகாது. அமெரிக்கா முன்பே கொடுத்த வாக்குப்படி 1946ல் அத்தீவுகள் பூரண சுதந்திரம் அடைந்துவிடவேண்டியது. அதை இன்று சீக்கிரத்திலேயே அடையும்படி செய்ய முயலுகிறார் ரூஸ்வெல்ட் பிரபு. அமெரிக்கர்கள் அத்தீவுகளை எதிரிவசமிருந்து மீட்டுக்கொடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளார்கள். ஆகையால் இச் சுதந்திர சாசனம் பிலிப்பைன்ஸ் தீவினர்களை அமெரிக்கப் படைகளுக்கு உதவி புரியுமாறு தூண்டுமென்பதில் சந்தேகமில்லை.

அமெரிக்க மக்களின் மனப்பான்மை இவ்வாறிருக்க, அவர்களுடன் கூட நின்று உலக சுதந்திரத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று கூறும் பிரிட்டிஷாரின் மனப்பான்மை எவ்வாறிருக்கிறதென்று பரிசீலனை செய்வது நியாயமாகும்.

முதலில் பர்மாவை எடுத்துக்கொள்வோம். அந்நாட்டு மக்கள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் உள்ள பொழுது சுதந்திரம் தங்களுக்கு அளிக்க வேண்டுமென்று மன்றாடினார்கள். அதன் பிரதம மந்திரி சீமைக்குச் சென்று பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் நேராக வாதாடினார். ஆனால் இன்று அவர் தம் நாட்டிற்குத் திரும்பக் கூடாமல் சிறையில் வதங்குகிறார். பிறகு நடந்த விஷயங்களை நேயர்களுக்கு ஞாபகமூட்டுவது அனாவசியம். இன்று பர்மா ஜப்பானியர் வசமிருக்கிறது. அந்நாட்டிற்கு அவர்கள் சுதந்திரம் அளித்துவிட்டதாகவும் பறைசாற்றி வருகிறார்கள்.

நேசதேசப் படைகள் பர்மாவை முதலில் பெறவேண்டுமெனச் சீக்கிரத்தில் ஓர் தாக்குதல் ஆரம்பிக்கப் போவதாயும், அதற்காகப் பிரமாத ஆர்ப்பாட்டங்கள் நடந்து வருவதாயும், நாம் பத்திரிகைகளில் படிக்கிறோம். ஆனால் பர்மியர்கள் நெடுநாளாகக் கேட்டுவரும் சுதந்திர சாசனத்தை அவர்களுக்கு அளிப்பதாக வாக்குறுதி ஒன்றும் காணவில்லை.

'ஜப்பானியர்கள் செய்த பிரகடனம் நம்பத் தகுந்ததல்ல. பர்மியர்களை ஏமாற்றுவதற்காகச் செய்யப்பட்டது' என்று மட்டும் பிரிட்டிஷ் பிரசாரம் கூறுகிறதே ஒழிய, பர்மியர்களை உற்சாகமூட்டத்தக்க ஒரு வார்த்தை கூடச் சொல்லப்படவில்லை. நாளைக்கு நேசதேசப் படைகள் பர்மாவில் தாக்குதலை ஆரம்பித்து முன்னேறும்பொழுது அங்குள்ள பர்மியர்கள் இவர்களுக்கு உதவி புரிவார்களென எவ்வாறு எதிர்பார்க்கக்கூடும்? ஜப்பானியர்கள் அளித்த சுதந்திர சாஸனம் சூழ்ச்சியாயிருந்தாலும் அதைத்தான் அவர்கள் நம்ப நேரிடும். அப்படி நம்பினார்களானால் நேசதேசப் படைகளுக்கு ஏன் உதவி புரிவார்கள்? மறுபடியும் அடிமைத் தளையை விரும்பினாலொழிய அப்படிச் செய்ய நியாயமில்லை. எனவே பர்மியர்களின் நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் பெறாமல், ஆயுத பலத்தையே முழுதும் நம்பி, பர்மாவில் ஆயத்தமாயிருக்கும் ஜப்பானியர்களை முறியடிக்கத் தலைப்படுவது அபாயகரமான செய்கை.

ரூஸ்வெல்ட் பிரபுவைப் பின்பற்றி ஏன் பிரிட்டிஷாரும் பர்மாவுக்குச் சுதந்திரமளிப்பதாக வாக்குக் கொடுக்கக்கூடாது?

இந்தியாவிலும் ஓர் பெருந்தன்மையான மனப்பான்மையை ஏன் காட்டக்கூடாது? எதிரி தாக்குதல் ஏற்பட்டால் அப்பொழுது இந்திய மக்கள் பிரிட்டிஷாருடன் ஒன்றுபட்டு எதிரியைத் துரத்த உதவுவார்களல்லவா?

ஆனால் இதெல்லாம் எங்கே சர்ச்சில் மூளையில் ஏறப்போகிறது. வெற்றி வெறியினால்

மதிமயங்கிக்கிடக்கிறார் அவர். இந்தியாவில் பஞ்சம் மக்களை த்வம்சம் செய்கிறது. ஆனால் பிரிட்டிஷ் கவர்மெண்டாருக்குக் கவலையில்லை. இது மாகாண கவர்மெண்டாரின் பொறுப்பாம்! யுத்தத்திற்குப் பொருள் திரட்டுவது, சகாயம் செய்வது இவை மட்டும் நம்முடைய கடமை. இதிலெல்லாம் மத்திய சர்க்கார், இந்தியா மந்திரி இவர்கள் மாகாண சுயஆட்சியில் தலையிட்டு வற்புறுத்தலாமாம்! ஆனால் இந்திய மக்கள் ஆயிரக்கணக்கில் உணவுப் பஞ்சத்தில் மடிந்தால் அதில் தலையிடமாட்டார்களாம் சர்ச்சிலும் அமெரிதுரையும்.

இது வீம்புக்கு வேதாந்தம் பேசுவதுபோலிருக்கிறது.

பிரிட்டிஷார் நம்மை ஜப்பானிய எதிரியினிடமிருந்து காப்பாற்றப்போகிறார்களாம். அதற்காக நாம் சேமித்து வைத்திருக்கும் பணத்தையும் ஆகாரத்தையும் அவர்களின் யுத்த சேவைக்காகக் கொடுத்துவிடவேண்டும். ஆனால் நாம், 'உயிருடனிருந்தால்தானே எங்களைக் காப்பாற்றுவது, பஞ்சத்தினால் மடியும் மக்களை முதலில் காப்பாற்றுங்கள்' என்று கூறினால், 'அது எங்கள் பொறுப்பல்ல' என்கிறார் அமெரிதுரை. இதிலிருந்து நமக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. இந்தியாவைக் காக்கவே யுத்தம் என்று பிரிட்டிஷார் பிரசாரம் செய்கிறார்கள். அது இந்திய நிலப்பரப்பையா அல்லது அதிலுள்ள மக்களையும் சேர்த்தா? அமெரியின் வாதத்தைப்பார்த்தால் மக்களைப்பற்றிக் கவலையில்லை, இந்தியா என்ற நிலப்பரப்பு எதிரிவசம் போகக்கூடாது என்ற கவலைதான் பிரிட்டிஷாருக்கு என்று ஏற்படுகிறது.

ஆகையினால்தான் பர்மியர்களுக்கும்,. இந்தியர்களுக்கும் சுதந்திரமளிக்க ம்றுக்கிறார்களோ? அப்படித்தான் தோன்றுகிறது. பர்மா, இந்தியா, இந்நாடுகள் பிரிட்டிஷார் வசம் இருக்கின்றன என்று பறைசாற்றிக் கொள்ளவும், அங்குள்ள பொருள்களை அனுபவிக்கவும் ஆசைப்படுகிறார்களே ஒழிய, அங்குள்ள மக்கள் பிரிட்டிஷாருடன் நேசமாகவிருக்கிறார்கள் என்று ஏற்படுத்திக்கொள்ள அவா விருப்பதாகக் காணோம். சரித்திரம் இம் மனப்பான்மைக்கு அனேகம்தடவை பாடம் கற்பித்திருக்கிறது. ஆனால் பிரிட்டிஷார் இதை உணரவில்லை. காலம் இதன் தீங்கை அவர்களுக்கு நினைவுறுத்தும் என்பதில் சந்தேகமில்லை.



பண்டித ஜவஹர்லாலின் மருமகளான சந்திரலேகா, நாயந்தர பண்டிட், இவ்விருவரும் நியூயார்க் ஸிடியிலுள்ள உயர்தர கலாசாலையில் படிக்கச் சென்றிருக்கிறார்கள். இது அமெரிக்காவில் எடுத்த படம். இவர்கள் அங்கும் நமது இந்திய ஆடைகளைத் தரிப்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கேது தீபாவளி?

★

எழுபத்து ஐந்து வயது நிரம்பிவிட்டது மஹாத்மாவுக்கு. நாமெல்லாம் அவ்வயதை எட்டிப் பிடித்தாலும் நமது ஸுகபோக ஸௌக்கியத்தை உத்தேசித்து, 'சோம்பேறி' நாற்காலியைத்தேடிப் பொழுதைக் கழிப்போம். இகலோகத்திலே பற்றுதல் தளர்ந்துவிடும். கிழமை கொண்டாடிப்பொதுவாழ்வில் கலந்துகொள்ள மறுப்போம்; அப்படியே அதில் கலந்துகொண்டாலும் பிறருக்கு உபதேசம் செய்வதோடு நின்றுவிடுவோம்.

ஆனால் காந்திமஹான் என்ன செய்கிறார்? நமக்குச் சீக்கிரத்தில் சுதந்திரம்வேண்டுமென்று கிளர்ச்சிசெய்து அதற்காக இன்று சிறையிலடைக்கப்பட்டு வதங்குகிறார்.

நாட்டில் பஞ்சம் தலைதூக்கிவிட்டது. ஆயிரக்கணக்கில் ஜனங்கள் மடிகிறார்கள் என்ற செய்தி அவரைக் கலக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் சிறையிலுங்கூட அவருக்குச் சாந்தி ஏற்படக் காரணமில்லை. ஏன்? பிறருக்காகத்தான் அவர் இன்னும் ஜீவித்திருக்கிறார். இந்திய மக்கள் சுதந்திர வீரர்களாக வாழவேண்டுமென்று அவர் விரும்புகிறார். அதற்காகப் பாடுபடுகிறார். அதன் பயனாக ஏற்பட்ட இன்னல்களை அநேகம் அனுபவித்திருக்கிறார்; இன்னும் அனுபவித்தும் வருகிறார்.

இத்தகைய நிலையில் இந்திய மக்களின் கடமை என்ன? மஹாத்மாவைப்பற்றிக்கொஞ்சம் சிந்தனை செய்பவர்கள் யார்? சிலர் மஹாத்மாவின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவைப்பற்றிக் கூட்டம்கூடி அதை வைபவமாகக் கொண்டாட யத்தனித்தார்கள். ஆனால் அதிகாரிகள் இதைத் தடைசெய்துவிட்டார்கள். இது மிகவும் சரியே. நாம் இத்தருணத்தில் சந்தோஷிப்பது தவறு. மஹாத்மா இன்று வெளியேயிருந்திருந்தால் நாட்டில் இன்று நடந்துவரும் அலங்கோலத்தில் எத்தகைய கொண்டாட்டமும் கூடாது என்று மொழிந்திருப்பார்.

நாட்டில் தலைவர்கள் இல்லாததினால் என்ன நின்றுவிட்டது? நாம் பண்டிகைகளையும், விருந்துகளையும் நிறுத்தவில்லை. வாய்ச்சொல்லில்மட்டும், அதிகாரிகள் செவியில் விழாமலிருக்கும் சமயம் பார்த்து, வருந்துகிறோம். சிறையிலிருக்கும் தலைவர்கள் இதைக்கேள்வியுற்றால் எவ்வளவு வருந்துவார்கள்?

பல மாகாணங்களில் மக்கள் பசியினால் உயிர் துறக்கிறார்கள். இத்தருணத்திலாவது நாம் எல்லோரும் ஏன் ஒரு சபதம் செய்து கொள்ளக்கூடாது? "தீபாவளியன்று புது ஆடை கட்டுவதில்லை. தலைவர்கள் வெளிவரும் வரை இக்கொண்டாட்டமில்லை" என்று தமிழர்களாவது ஏன் ஏற்படுத்திக்கொள்ளக் கூடாது? தலைவர்களைச் சிறையில் வைத்திருப்பதற்கு நாம் இம்முறையிலாவது நமது அதிருப்தியை அதிகாரிகளுக்கு ஏன் தெரிவிக்கக் கூடாது?

பண்டிகைகளைக் கொண்டாடிக் கொண்டும், விருந்துகள் அருந்திக்கொண்டுமிருந்தால், நமக்காகச் சிறை சென்றிருக்கும் தலைவர்களை நாம் என்றுதான் மீட்டுக்கொள்ளுவது?

வங்காளத்தில் ஏழைகள்பால் இரக்கங் கொண்டு தீபாவளியன்று ஏன் ஒவ்வொருவரும் புது ஆடைகளில் செலவழிக்கும் பணத்தில் ஒரு சிறிய பாகத்தை வங்க ஏழைகளின் கஞ்சிக்கென அனுப்பிவைக்கக்கூடாது? இதை நேயர்கள் சற்று ஆலோசித்துப் பார்ப்பார்களென்று நம்புகிறோம்.

மஹாத்மாவோ அல்லது மற்றத் தலைவர்களோ தீபாவளி கொண்டாடப் போகிறார்களா? இல்லவே இல்லை. தலை இல்லாத தீபாவளி இது. இதற்குக் கொண்டாட்டமென்ன?

புதுமைக் காட்சி

தி. ப. பத்மநாபன்

கனவு

வானையளந்ததொரு காலம்—இந்த
மண்ணை வளைத்ததொரு வேகம்.
மானைப் பழித்த விழி நெஞ்சில்
மயக்க வெறிகொடுத்த துண்டு.
மீனக் கொடிபடரும் தெய்வம்—என நான்
விம்மித் திரியலானேன் என்று
கானை நகர்ப் புறத்தைச் சுற்றிக்
காளைப் பகற்கனவு கண்டேன்,

உண்மை

தன்னந் தனிமையென்ப துண்மை—இந்தத்
தரணி முழுவதுமோர் பாலை;
பன்னுங் கலையினொளி யாவும்—பசிமுன்
பாழுங்கொடியகான லோடை.
சின்னஞ் சிறியமாந்த ரெல்லாம்—என்னைச்
சீறிவிழும் பொருளை யறியேன்.
இன்னும் பெரியதொரு வாழ்வை
எண்ணப் புதுமை யொன்று கண்டேன்.

காட்சி

குவிந்த பணம் பொதிந்த துருவும்—உயிரைக்
கொள்ளை யிடும்பசியும் போச்சே.
அவிந்த சிறுமைமன மார்ப்ப
ஆண்மை முடிபுனையக் கண்டேன்.
நிவந்த தலையுடனே யுலகில்—நாம்
நீடு புகழ்படைக்க நின்றோம்.
கவிந்த இருளொழியச் சோதிக்
கவிதைப் பெருக்கெடுக்க லாச்சே.

தீபாவளியை உத்தேசித்து

ஏராளமான புதிய ஜவுளி ரகங்கள் நவீன பார்டர்களிலும், கலர்களிலும், கொள்ளே காலம் முறுக்குப்பட்டில் தயாராகி வந்துள்ள **12, 14, 16, 18, 19** முழங்களில் சேலைகளும், பலவூர் நூல் சேலைகளும், வேண்பட்டு வேஷ்டி வகையராக்களும், விலை நயமாக ஒரே விலையில் கியாரண்டியுடன் கிடைக்கும்.

N. B.—எங்களிடம் பட்டுகளிலும், நூல்களிலும் உடலில் ஜரிகை வேலைப்பாடுள்ளது ஓர் ஸ்பெஷல் ரகம்.

V. N. சுப்பிரமணிய அய்யர்,
பட்டு ஜவுளி வியாபாரம்,
மணிபவனம்,
பெரியதெரு, கும்பகோணம்.

பிராஞ்சு:
227, ராஜவீதி, கோயமுத்தூர்.

காவேரி

தென் இந்தியாவின் உயர்ந்த மாதப் பத்திரிகை

சந்தா விகிதம்

		உள்நாடு			சிலோன்		
வருடச் சந்தா	ரூ.	4	8	0	4	12	0
6 மாதம்	ரூ.	2	4	0	2	8	0
தனிப்பிரதி	ரூ.	0	6	0	40 சதம்		

தபால்மூலம் தனிப்பிரதிவேண்டுவோர் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

பிரதிநிதி இல்லாத இடங்களில் ஏஜண்டுகள் தேவை.

S. Rangaswami,
Managing Proprietor.

காவேரி ஆபீஸ்,
பெஸண்ட் ரோடு,
கும்பகோணம்.

WEST END A1

"A-1" REGULATOR

As impressive as its name implies

இந்த ''ஏ-1'' ரெகுலேட்டர், நடுத்தர ரகத்தைச் சேர்ந்த பாக்கெட் கடிகாரங்களுக்குள்ளேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. இந்தக் கடிகாரம் பலமான யந்திரங்களுடன் இருப்பதோடு பார்வைக்கும் மிகவும் நேர்த்தியா யிருக்கிறது. பல வருஷங்கள் பழுதடையாமல் சரியான மணியைக் காட்டும் உயர்ந்த கருவிகள் அமைக்கப்பட்ட கடிகாரம் இது. எத்தனை அலட்சியமாக உபயோகித்தாலும் ஈடுகொடுக்கும் அளவுக்குப் பலமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விலைக்கு இதை விட நல்ல கடிகாரம் இல்லையென்றே உறுதியாகக் கூறலாம்.



வெஸ்ட் எண்டு
"ஏ-1" ரெகுலேட்டர்

16" பலமுள்ள கிலெஸ் லிவர் கடிகாரம். தூசி — ஈரம் அனுக முடியாத உள்மூடி வாய்ந்தது. நிக்கல் வெள்ளி கேஸ். ரோமன் அல்லது அரபிக் எண்ணுள்ளது
விலை ரூ. 45.

16" அளவு "ஏ-1"
ரெகுலேட்டர்

வெஸ்ட் எண்டு வாட்ச் கம்பெனி, பம்பாய்-கல்கத்தா

WEST END WATCH CO.,

BOMBAY CALCUTTA

W

கதம்பம்

தீபாவளி எதற்கு?

நம் சகோதர சகோதரிகள் பட்டினியால் புழுக்கள்போலத் துடிதுடித்து மடிகின்றனர். தேசபக்த செல்வமணிகள் சிறையில் வாடி வதங்குகின்றனர். பாரதமாதா அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுள்ளாள். துணிமணிகளின் விலையும் இதர அவசியப்பொருள்களின் விலையும் ஆகாயத்தை யளாவி நின்றுள்ளன. வாங்குவதற்குப் பொருளில்லை. கடன் கொடுப்பாருமில்லை. மனதிற்குச் சமாதானமில்லை. சந்தோஷமில்லை. இந்நிலையில் தீபாவளிக்கொண்டாட்டம் எதற்கு?

அன்று நரகாசுரன் தொலைந்தான், மக்களின் கவலை நீங்கிற்று. இன்று பல அசுரர்கள் அட்டகாசம் புரிந்து வருகிறார்கள். ஹிட்லர் அசுரன் ஒருபக்கம், எதேச்சாதிகார அசுரர்கள் வேறு. பஞ்சவசுரன் (பஞ்சம்+அசுரன்) வேறு. கொள்ளை இலாபமடிக்கும் முதலாளி அசுரர்கள் வேறு. எங்கும் பலவித அசுரர்கள் தாண்டவமாடுகிறார்கள். தாய்நாட்டின் தற்போதைய நிலைமையை நிதானித்தால் கடுகளவு தேசபக்தியுள்ளவர்கள்கூட கலங்குவார்கள்.

தீபாவளிக்கொண்டாட்டத்தினால் நாமடையப்போகும் நன்மைதானென்ன? நம்மில் பலர் 'தீபாவளி'யாகிவிடுவார்கள்.

ஸ்நானம் செய்யுங்கள். மடி உடுத்துங்கள். (புது உடைப்பித்தர்கள் கதர்வாங்கட்டும்) கடவுளைத் துதியுங்கள். பாரததேவியின் கதியை நினைத்துக் கண்ணீர்விட்டுக் கதறுங்கள். இதுவே இவ்வருஷத்திய தீபாவளிக்கொண்டாட்டமாகவேண்டும். நினைத்துப்பாருங்கள்!

நல்ல நன்றி!

நெருப்புப்பற்றி வீடு எரிகிறது. தெருவார்கள் மீட்டிங் கூடுகிறார்கள்! நெருப்பு ஏற்பட்ட காரணத்தைப்பற்றிச் சர்ச்சைசெய்கிறார்கள். ஒருவர், நெருப்புப் பிடித்துக்கொண்டதினால் தான் வீடு எரிகிறதென்கிறார். இன்னொருவர் நெருப்புத் தானே பிடித்துக்கொள்ளாதென்றும் யாராவது கொள்ளி வைத்திருக்கவேண்டுமென்றும் காரசாரமாகப் பேசுகிறார். மற்றொருவர் அப்படிக் கொள்ளிவைத்தது ஆணா, பெண்ணா வென்ற பெரிய சந்தேகத்தைக்கிளப்புகிறார். இன்னொரு புத்திசாலி நெருப்புப் பிடித்தாலும் இவ்வளவு தூரம் பற்றி. எரியுமாவென்று வினவுகின்றார். தீ கொழுந்துவிட்டு எரிகிறது. வீடு அனேகமாகத் தீர்ந்துவிட்டது.

ஒவ்வொரு தினமும் பசிக்கொடுமையினால் பரதவித்துமாண்டவர் தொகைக்கணக்கு பத்திரிகையில் வந்துகொண்டிருக்கிறது. . . வங்காளத்தில் அரசாங்கமென்று ஒன்றிருப்பதாகவே அறியமுடியவில்லை. நிலைமை சீர்பட அர்சாங்கம் என்ன செய்கிறதென்றும் அறியமுடியவில்லை. சீமையில்மட்டும் இதைப் பற்றி ரொம்பவும் கவனித்து வருகிறார்கள். பஞ்சம் ஏற்பட்டதற்குப் பொது ஜனங்களின் பேராசை காரணமென்கிறார் ஒருவர். சுய ஆட்சியின் அலங்கோலமென்கிறார் ஒரு முதலாளி வெள்ளையர். தென்னாப்பிரிக்காவிலிருந்து உணவுப் பொருள்கள் இந்தியாவிற்கு அனுப்புவதிலுள்ள கஷ்டநஷ்டங்களைத் தெளிவாகச் சொல்லுகிறது ஒரு பத்திரிகை. வேறு ஏதாவது பொருள் பசிக்கு உகந்ததாவென்று ஒருவர் ஆராய்ச்சியிலிறங்கியுள்ளார். இன்னும் விதவிதமாகப்பேசிக் காலங்கடத்துகிறார்கள். இன்னும் சொற்ப நாளில் நிலைமை மாறாவிடில் வங்காளம் பிணக்காடாகிவிடுமென முக்கர்ஜி அவர்கள் கண்ணீர்விட்டுக் கதறுகிறார்.

சீமையில் குண்டுமழை பெய்தபொழுது இந்தியாவிலிருந்து ஏராளமாகப்பொருள் திரட்டிச் சீமைக்கு அனுப்பப்பட்டன. நகரசபைகள், பொதுஜன சங்கங்கள், நாடகக்கம்பெனியார்கள் இன்னும் எல்லோரும் சீமை மக்களுக்குப் பல உதவிகளையளித்தார்கள். ஒரு ஏழை ஓரணா கொடுத்ததை வெள்ளையர் பத்திரிகை பெருமைகொண்டு பிரசுரித்தது. இந்திய பஞ்சநிலைமையைப்போக்க, சீமைமக்கள் யாது செய்கிறார்கள்?

ஒரு வேடிக்கை கேட்டீர்களா? பொதுஜன சேவைக்குக் காத்துக்கொண்டிருப்பவர்களெனக் கூறிக்கொண்டு பொதுமக்களிடம் பணம் பிச்சையெடுக்கும் செஞ்சிலுவை அதிகாரிகளுக்கு வங்காளப் பஞ்சத்தைப்பற்றி விஷயம் தெரியாதாம்! அதிகாரபூர்வமான யாதாஸ்து ஒன்றும் வரவில்லையாம்! தகவல் கிடைத்திருந்தால் தயங்காமல் உதவிக்கு ஓடிவந்திருப்பார்களாம்! "இந்தியாவிலும் அத்தகைய சங்கங்கள் அனேகம் உள. சேனைகளுடன் அவைகள் உலாவுகின்றன. தலைமை ஆபீஸுக்கு யாதொரு தகவலுமில்லை" யென வாஷிங்டன் செய்தியொன்று கூறுகிறது.

'குதிரை கீழேதள்ளி, குழியும் பறித்த கதை' தெரியுமா? அந்த முறையில் வங்காளப் பஞ்சத்தைப்பற்றித் தகவல் தெரிந்துகொள்ளாத

சங்கம் தனது பெருமையைப் பறைசாற்றிக் கொள்ளும் விந்தையைப் பாருங்கள். "துருக்கியில் பூகம்பம் ஏற்பட்டபொழுது சங்கம் பணம் அனுப்பி உதவிசெய்ததை ஞாபகப் படுத்துகிறோம்." ஒருகால் இந்தியாவில் பூகம்பம் ஏற்படவில்லையேவென செஞ்சிலுவைச் சங்கம் ஏங்கிக்கிடக்கிறதோ?

எலிவேட்டை!

திடீரென்று ஒரு நாள் பம்பாய் வாசிகள் பிரமித்துப்போய்விட்டார்கள்! கொஞ்ச நாளாக எலிகளின் நடமாட்டம் பம்பாய் நகரில் அதிகமாகிவிட்டது. பாவம்! ரேஷன் அதிகாரிகள் எலிகளை மறந்துவிட்டார்கள். முன்பெல்லாம் வீடுகளில் சாமான்கள் நிறைய இருந்தன. எலிகளுக்கும் அதிக அலைச்சலில்லாமலிருந்தது. இப்பொழுது ரேஷன் வந்தவுடன் வீடுகளில் சாமான்கள் இல்லை, எலிகள் அலையவேண்டிவந்தது. இப்படி அதிகமாக எலிகள் வெளிகளில் நடமாட ஆரம்பிக்கவே பம்பாய் மக்கள் பயங்கர நினைவுகொண்டார்கள். 'ப்ளேக்'கை நினைத்துக்கொண்டார்கள். எங்கும் விசேஷ பரபரப்புக் காணப்பட்டது. திடீரென்று ஒரு நாள் பத்திரிகையொன்றில் ஆச்சிரியகரமான ஆராய்ச்சி வெளிவந்தது. "ஒரே ஒருஜோடி எலிகள் ஆணும் பெண்ணுமாயிருந்தால் போதும். அந்தத் தம்பதிகள் மூன்று வருஷகாலத்தில் 625 ஆயிரங்கோடி எலிகளாகப் பெருகிவிடும்." இதைக் கண்ணுற்ற பம்பாய் வாசிகள் திடுக்கிட்டு நடுநடுங்கி, கதி கலங்கிப் போய்விட்டார்களெனச் சொல்லுவதுமிகையாகாது!

முனிசிபாலிடியில் எலிகள் விஷயமாய் ஏகப்பட்ட கூச்சல் கிளம்பியது. எலிவேட்டையின் அவசியத்தை ஏகமனதாக எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்தினார்கள். வேட்டை ஆரம்பம் ஆகிவிட்டதாம்.

சில ஊர்களில் கொசுவேட்டையாடுகிறார்கள். ஆனால் மனிதர்கள்தான் அந்த வேட்டையில் தோற்றுப் போகிறார்கள். எங்கிருந்தோ கொசுக்களும் அதிக பலத்துடன் வந்து மனிதர்களைத் தாக்குகின்றன. உலகமுள்ளவரை கொசு வேட்டையும் நிற்காதெனத் தோன்றுகிறது.

நிற்க, பம்பாய் வாசிகள் உண்மையில் எலிகளை விரட்ட எத்தனித்தால் ஒரேவழிதானுண்டு. கொலைசெய்தல் சாத்யமில்லை. நாகரிக முறையுமன்று. எல்லா எலிகளையும் பிடித்துச் சர்க்காரிடம் ஒப்புவிக்கவேண்டியது. உடனே அவைகளைத் தணிக்கை செய்து அவைகளுக்கும் உடனே ஆகாரப்பங்கீடு வசதியளிக்கவேண்டும். வாயில்லாப் பிராணிகள் வேறு என்ன செய்யும்?

NICO FERRIN

Iron and Vitamin B Tonic.

நிக்கோ-பெரின்

அயர்ன் வைடமின் B டானிக்

———:o:———

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனிமீயா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்குச் சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஓச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

KERMES INDICA

கர்மஸ் இன்டிகா

———:o:———

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையைச் சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாபக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பைக் குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— **K. P. LIMITED,**
40, Hunters Road, VEPERY MADRAS.

பிருந்தாவனத்திலே

ரா. ஸ்ரீ தேசிகன்

●

காலை: கீழ்வானம் வெளிறிக் கொண்டிருந்தது.

பிரமபுரியில் என்றுமில்லாத பரபரப்பு. அவ்வூர்க்காரர்கள் தெருக்களை அலம்பிச் சுத்தஞ்செய்தார்கள். வீதிகள் தோறும் தோரணங்கள் இளங்காற்றில் ஆடிக்கொண்டிருந்தன. பலவித வர்ணக்கோலங்களை வளைக்கையார்கள் பொன் வளைகள் குலுங்கக்குலுங்க வரைந்துகொண்டிருந்தார்கள். ஆடவர்கள் தங்களுக்குரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டு, தூய ஆடைகள் விளங்க அங்கும் இங்கும் திரிந்தார்கள். காலைத்தூக்க மந்திரப்பட்டு எழாத சிறுவர்களும், சிறுமியர்களும்கூடப் படுக்கை விட்டெழுந்து, குளித்துப் புது அங்கிகள் அணிந்து தெருக்கோலங்களைச் சூழ்ந்து நின்றார்கள். ஒவ்வொரு முகமும் ஒரு தனி உவகையொளிச்சிறப்பைக் காட்டிற்று.

பிரமபுரி எல்லைப்புறத்தில் இரவில் வௌவால் அடைகிற ஒரு மண்டபம், ஒரு கவின் பெற்றுக் காட்சி அளித்தது. சாம்பிராணியின் நறுமணம் எங்கும் அடித்தது. மண்டபத்தின் வாசலில் ஒரு கொட்டகை போடப்பட்டிருந்தது. வாழை மரங்கள் கட்டப்பட்டிருந்தன. பனங்காய்கள் தொங்கின. அப்பந்தலடியில் அநேக சிஷ்யர்கள் ஆசாரியன் வரவை மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். அங்கிருந்து அவரை ஊருக்குள்ளே அழைத்துப் போவதற்காகக் கூடிய கூட்டந்தான் அது.

பிரமபுரியின் மத்தியிலுள்ள மண்டபத்திற்கு வேண்டிய சிங்காரங்களைச் செய்தார்கள். மடத்திற்குப் புதியதாய் வெள்ளை அடிக்கப்பட்டிருந்தது, பொம்மைகளுக்கெல்லாம் வர்ணங்கள் தீட்டப்பட்டிருந்தன. வாசலில் தூண்கள் நாட்டி விதானம் அமைக்கப்பட்டிருந்தது.

பாளை கமுகு விளங்குகிற பந்தலும் தோன்றிற்று. அங்கேயும் ஊரிலுள்ளோர்கள் திரண்டு நின்றார்கள்.

“அடிக்கடி அதிர்வேட்டுகேட்கிறதே இன்னிக்கு என்ன விசேஷம்” என்று ஒரு கிழவி கேட்டாள்.

“போன வருஷம் திருநாட்டுக்குப்போனாரே அந்தச் சுவாமிக்கு இன்னைக்குத் திருநக்ஷத்திரமாம்” என்றான் பெயரப்பையன்.

இப்படிச் சொல்லிக்கொண்டே மடத்தை நோக்கி ஓடினான் அவன்.

இப்படி ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கிளர்ச்சி எழுந்தது. ஆசாரியன் வரும் திசை நோக்கிப் பல்லாயிரங்கண்கள் குவிந்தன.

தூரத்தில் திருச்சின்னத்தின் ஒலி கேட்டது. சங்கங்கள் முழங்கின. பேரிகைகள் விண்ணைப் பிளந்தன. யானையின் மணியோசை கேட்டது. யானையின் உருவம் தென்பட்டது. யானையைச் சுற்றிச் சிறுவர்கள் சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தார்கள். யானையும் அடிபெயர்த்தது. ஒட்டகம் தன் கழுத்தை நீட்டிக்கொண்டு அவலக்ஷண நடைபோட்டது. அதற்குப்பின் குதிரைகள், காளைகள் நகராக்கள் ஒலிக்க நடந்து வந்தன.

தங்க முலாம் பூசிய மூடுபல்லக்கில் கண்ணனுடைய விக்கிரகத்தைப் போகிகள் தூக்கிச் சென்றனர். வேத கோஷம் முழங்க வாசுதேவ தீனரக்ஷக ஆசாரியர் முத்துப்பல்லக்

JABCO

is a brand of famous Indian products and one of the best six groups of products made — in India —

They have served you well during the war. They will serve you increasingly — after it —

கில் வந்தார். பூர்ண கும்பங்களை எடுத்துக் கொண்டு சிஷ்யர்கள் முன் சென்றனர். பிரமபுரி எல்லை மண்டபத்தில் சிறிதுநேரம் தங்கினார் சுவாமிகள். சில பேர்களுக்குத் தலையை அசைத்தல், சில பேர்களுக்கு மந்தஹாசம், சில பேர்களுக்கு அருள் நோக்கு, மற்றுஞ்சில பேர்களுக்கு ஸல்லாபம் முதலியவைகளைச் செய்துகொண்டு சுவாமிகள் கம்பீரமாய் வீற்றிருந்தார். இதற்குள் பிரமபுரிக்கோயில் அர்ச்சகர்கள் வேண்டிய மரியாதைகளுடன் வந்தனர். அவர்களுடன் பல்லக்கில் சுவாமிகள் ஊர்வலம் போனார். போகிறபோக்கில் ஒரு மேகம் தூற்றலைப் போட்டது.

"மஹான்கள்வந்தால் ஊரில் மழைபெய்யும் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அதுகண் முன் நடக்கிறதுபார்" என்று ஒரு கிழவர் தடியின் மீது சற்றுச் சாய்ந்துகொண்டுபேசினார்.

கோயில் மரியாதைகளைப்பெற்றுக்கொண்டு வாசுதேவ மடத்திற்கு எழுந்தருளினார் ஆசாரியர்.

பிரமபுரிக்கருகிலுள்ள பாகீரதி நதிக்கரை மீதுள்ள பிருந்தாவனத்தை நான்குநாள் முன்னதாகவே அழகுபடுத்தினார்கள். வாசலில் பந்தல் நாட்டினார்கள். தோட்டத்திலுள்ள புல் பூண்டுகளைக் களைந்து சுத்தஞ்செய்தார்கள். விதவிதமான புஷ்பச்செடிகளை வைத்தார்கள். விதானம் அமைத்து மின்சார விளக்குக்களைத் தொங்கவிட்டார்கள். நறுமணப் புகை எங்கும் சூழ்ந்தது. சங்கிலியில் தொங்குகிற விளக்குக்களில் நெய்ச்சுடர்கள் எழுந்தன.

காலையில் பிருந்தாவனத்திலே அர்ச்சையில் எழுந்தருளியிருக்கிற வாசுதேவ தீனதயாளுவுக்குத் திருமஞ்சனம் நடந்தது. அவருக்குச் சாயந்திரம் வாசுதேவ தீனரக்ஷகர் செய்ய வேண்டிய மரியாதைக்குரிய ஏற்பாடுகள் நடந்தன.

சாயந்திரம் சுமார் ஐந்து மணியிருக்கும். சாயங்கால மஞ்சள் வெயிலில் பாகீரதி நதி மின்னி ஓடிக்கொண்டிருந்தது. வாசுதேவ தீனதயாளு அடக்கமான பிருந்தாவனம் மாலைவெளிச்சத்தில் பொன் மயமாய் நின்றது. பக்கத்திலுள்ள தோப்புக்களின்மீது ஒரு புதிய எழில் விளையாடிற்று.

அதிக ஆடம்பரத்துடன் புதிய ஆசாரியன் வந்தார். பலவித உபசாரங்கள் தீனதயாளுவுக்கு நடந்தன. சங்கங்கள் முழங்கின. நானுவித வாத்தியங்கள் ஒலித்தன. மங்கல தீபங்கள் காட்டினார்கள். அநேக ஸ்திரீகள்

தீபாவளிக் கொண்டாட்டம்

வெற்றிகரமாக இருக்கவேண்டுமானால்

உங்கள் குடும்பத்திற்கு வேண்டிய நல்ல ஜவுளிகளைப்
— பொறுக்கி வாங்கவேண்டும். —

இப்படிப் பொறுக்க ஏராளமான ரகங்கள் அடங்கிய
— கடையில் வாங்கவேண்டும். —

★

இதற்குச் சிறந்த இடம்:

R. S. & CO.,

பெரியதெரு, கும்பகோணம்.

சீமான்கள், சீமாட்டிகள், குழந்தைகள் எல்லோர் உபயோகத்திற்கும்
உகந்த பலவித ஆடைகள் உள்ளன.

ஏராளமான தினுசுகள்! **விலையும் நயம்!**

கடையை ஒருமுறை வந்து பாருங்கள். நீங்கள் திருப்தி அடைவது நிச்சயம்.

யாழொத்த குரலில் பாடினார்கள். பிறகு ஆசாரியர் பிரசாதம் வழங்கினார்.

சுமார் எட்டுமணிக்கு ஆசாரியர் தம் மடத்திற்குப்போனார். ஆரவாரங்கள் அடங்கின. இதுகாறும் ஆரவாரங்களில் அமிழ்ந்துகிடந்த பாகீரதி நதியின் ஒலி கேட்டது. மத்தாப்பு வாணவேடிக்கைகளின் புகைப்படலம் நீங்கவே ஆகாயத்திலே நக்ஷத்திரங்களின் ஒளி நன்றாய்த்தெரிந்தது.

கூட்டம் கரையவே, எங்கேயோ மறைந்திருந்த என் நண்பர் தென் பட்டார். படித்துறையில் நாங்கள் உட்கார்ந்தோம். படித்துறை மீது சலசலவெனத் தண்ணீர் மோதி ஓடிக் கொண்டிருந்தது.

“எத்தனைச்சிறப்பாக இந்தத் திருநக்ஷத்திரத்தை நடத்தினார்கள்” என்றார் என் நண்பர்.

“சிறப்பில் ஒன்றும் குறைவில்லை. ஆனால் திருநாட்டை அலங்கரித்த அந்தச்சுவாமிகளுக்குச் சாந்தி ஏற்பட்டிருக்குமோ? அதுதான் தெரியவில்லை”

“அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்.”

“எப்படி இந்தச்சுவாமி திருநாட்டிற்கெழுந்தருளினார் தெரியுமா?”

“ஏதோ சொல்லிக்கொள்ளுகிறார்களே! அது உண்மைதானா?”

“ஆமாம், உண்மைதான். அவர் பட்டத்திற்கு வந்ததும் அநேக சீர்திருத்தங்களைச் செய்ய ஆரம்பித்தார். தேச சஞ்சாரம் செய்கிறபொழுது, தாம் கால்நடையாக நடந்தார். மனிதன் மனிதனைத் தூக்குவது தர்மமில்லை என்றார். ஏழைகளோடு தாமொரு ஏழையாக நிற்கவேண்டுமென்று அவர் பாடுபட்டார்.”

“அப்படியா, அவருக்கா அப்படி நேர்ந்தது?”

“பெரிய மஹான்களுக்கு அப்படித்தான் ஏற்படும். அவர் செய்த உபதேசங்களை உலகம் எப்பொழுது ஏற்கப்போகிறதோ தெரியவில்லை. 'பசித்தோர் முகம் பார்; மோக்ஷம் தனித்த சுகமில்லை; ஒருவர் துன்புற்றாலும், அமிர்தமும் கசந்துவிடும்; ஒக்கத்தொழுதால் கலியுகமில்லை; பிறர் வறுமை நம் வறுமைதான்; பிறர் அஞ்ஞானம் நம் அஞ்ஞானந்தான்! மோக்ஷம் அங்கேயில்லை; இங்கே இப்பொழுதே நாட்டவேண்டும்” என்றார். “தொட்டிலில் கண்ணன் விக்கிரகத்தைவைத்து ஆட்டவேண்டாம். ஒவ்வொரு ஏழை மண் குடிசையில் பிறக்கிற குழந்தையும் கண்ணனின் அவதாரம். அதற்கோர் தொட்டிலும், ஒரு கிண்ணம் பாலும் கொடுங்கள்” என்பார்.

“ஜனங்களுக்குப் புரியுமா?”

“புரியுமா? எல்லாம் அவர்களுக்குப் பெரும் பிதற்றலாகப்பட்டன. மடத்திற்கு வருமானம் போய்விட்டது. இவருக்கொரு வழி வைக்காது போனால் கேடு வந்துவிடும்” என்று அவரைக் கொல்ல ஓர் உபாயத்தை நாடினார்கள்.

“உங்கள் ஆசாரியருக்கு நந்தவனம் கட்டியிருக்கிறோம் வாருங்கள்” என்று ஒரு நாள் சிஷ்யர்கள் அவரை அழைத்தனர். இவர் நம்பி அங்கே போனார்.

குழியை வெட்டி உப்பைப்பரப்பி வைத்திருந்தார்கள்.

“இது யாருக்கு?”

“எல்லாம் தேவரீருக்குத்தான்.”

“அப்படியா; நீங்கள் க்ஷேமமாயிருங்கள்; எனக்கு அவன் அருள் காட்டுகிறது உண்மையானால், நான் பெறுகிற பேற்றை நீங்களும் பெறுங்கள்; எல்லாம் உன் விளையாட்டுத்தான்” என்று புன்சிரிப்பு முகத்தில் தோன்ற அந்தக் குழியில் இறங்கிவிட்டார்.

அந்த இரக்கமற்ற சிஷ்யர்கள் அவரை உயிரோடு வைத்துக் குழியில் மூடிவிட்டார்கள்.

“இப்பொழுது பெரிய மரியாதை எல்லாம் நடக்கிறதே!”

“அப்படித்தான் உலகத்தில் உயிரோடு இருக்கிறபொழுது ஒரு கவியைப் பட்டினிபோட்டுக் கொன்று அவருடைய நாளை நாடெங்கும் கொண்டாடவில்லையா?”

“ஆமாம் அப்படித்தான் நடக்கிறது.”

“தாய் தகப்பன்மார்களுக்கு உயிரோடு இருக்கிறபொழுது அவர்களுக்கு அன்னவஸ்திரங்கிடையா.து. இறந்தபிறகு எத்தனை பெரிய சிராத்தங்கள் நடக்கின்றன. நாட்டுப் பெண்ணுக்கு வயறுநிறையச் சோறில்லை. செத்துப்போனால், பிள்ளையின் மறு கலியாணத்திற்குச் சுமங்கலிப் பிரார்த்தனை நடக்கிறது.

பூனை எலி வாழ்வு நடத்திய ஒரு ஸ்திரீ இறந்த கணவனுக்கு எத்தனை லட்டுக்கள் பிடித்தாள், எத்தனை சோமாசிகளைச் செய்தாள் தெரியுமா?

“இந்த ஊர் வாய்ப்பட்டி ஜனகத்தைச் சொல்லுகிறீர்களா.”

“ஆமாம்”

இந்த ஆடம்பரங்களையெல்லாம் கண்ணுக்குத் தெரியாமல் பார்க்கிற அம்மஹானுக்குத் திருப்தியிருக்குமா?”

“திருப்தியா?—துக்கந்தான்.”

"அவர் மறுபடியும் இங்கே வந்தால் என்ன ஆகும்?"

"உப்புக்குழிக்குக் குறைவு இருக்காது"

"அதுதானா அவர் காண்கிற பாக்கியம்"

"ஆமாம்" என்று தலையை அசைத்தேன்

இப்படிப் பேசிக்கொண்டே போனோம். "நாழி ஆகிவிட்டது நான் போய்வருகிறேன்" என்று அவர் சென்றுவிட்டார். நானும் மனக்குழப் பத்தோடு வீடு சென்றேன்.

காலை நாலுமணி. அரைத் தூக்கமயக்கம். ஒருவர் என்முன் நின்றார். தலையில் முள்ளினால் ஆன கிரீடம். விழிகளில் சோகம் நிறைந்த அன்பு ததும்புகிறது. "நான் அப்பொழுது மட்டும் சிலுவையில் ஏறினேனா? ஒவ்வொரு கணமும் ஏறுகின்றேன். எனக்குத் திருவிழாக் கள் செய்கிறார்கள்; ஆனால் வாழ்விலே ஒவ்வொரு பொழுதும் என்னைத்தள்ளி மிதிக் கிறார்கள்" என்றது அத்திவ்ய ரூபம்.

இக்காட்சி மறைகின்றது. மற்றொரு உருவம் தோன்றுகிறது. "உண்மைக்காகப் பாடுபட்ட எனக்கென்ன உபசாரம் தெரியுமா? இதுதான். இந்த விஷக் கிண்ணத்தைப் பருகுகின்றேன். அப்பொழுது மட்டுமா? எப்பொழுதுந்தான். உண்மை யொளியை அவிக் கிறபொழுதெல்லாம் எனக்கு விஷம் கொடுக் கிறார்கள். எத்தனை படித்தாலும் உண்மை நிலை தெரியவில்லை யென்றேன். ஒன்றும் விளங்கவில்லை என்றேன். மின் மினி அறிவைக் கொண்டு எல்லாம் விளங்குகின்றன என்று மார்தட்டுகிறார்கள். அப்பொழுதே என் செவி யில் விஷம் மறுபடியும் பாய்கின்றது."

இவ்வுருவம் மறைகிறது. "எனக்குத் திருவிழாக் கொண்டாடுகிறார்களே. எனக்குத் திருவிழாவா வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு சோகம் படர்ந்த ஒரு முகம் வருகிறது.

"நெஞ்சகமே கோயில்; நினைவே சுகந்தம்; அன்பே
மஞ்சன நீர்; பூசைகொள்ள வாராய் பராபரமே"

என்ற உபதேசம் செய்தேன், இதுதான் பலன்" என்று சொல்லி அவ்வுருவமும் கரைகிறது.

விடியற்காலம் பேரிகை கேட்கிறது. சங்க திருச் சின்ன ஒலிகள் எழுகின்றன. பாகீரதி தீரத்திற்குப் புதிய ஆசாரியார் பல்லக்கில் போகிறார். மறுபடியும் பழைய கொட்டும் முழக்குமுந்தான். உலகச்சந்தடிகளிலும், ஆடம் பரங்களிலும், அமர உருவங்கள் மறைகின் றன. தெய்வப் பேச்சுக்களின் கானங்களும் அவிகின்றன, உலக யாத்திரை ஊர்வலம் நடந்துகொண்டே இருக்கிறது.

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து.)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து.

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.



'நந்தனார்,' 'ரிஷ்ய சிருங்கர்' படங்களில் நடித்து, தனது இனிய பாடல், சிறந்த நடனம், உயரிய நடிப்பு முதலியவைகளால் ஜனங்களின் மனதைக் கவர்ந்த பிரபல தென்னிந்திய சினிமா நக்ஷத்திரம் ரஞ்சன் சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் நரஸுஸ் காபி, டீயையே உபயோகிக்கிறேன். ஏனெனில் அவைகள் மிகச் சிறந்தவை என்பது எனக்குத் தெரியும்."

Ranjan

புகழ்பெற்ற சினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது

நரஸுஸ் டீ

M. N. K.—15 TM.

புத்தக விமர்சனம்

கூளப்பநாயக்கன் காதல்

[ஆசிரியர் — சுப்ரதீபக்கவிராயர்; பதிப்பாசிரியர்—மு. அருணாசலம், எம். ஏ; வெளியிட்டோர்—சக்திகாரியாலயத்தார்; விலை ராப்பர் ரூ 1—4—0; காலிகோ ரூ 1—12—0.]

இந்நூலாசிரியர் தம் அழகிய கருத்துக்களைக் கற்போரும் கேட்போரும் உணர்ந்து சுவைத்தற் பொருட்டு வட சொற்களையும் சொற்றொடர்களையும் இந்நூலிலே திறம்பட அமைத்துள்ளார். இதனுள் சிருங்காரச்சுவை மிக்குளதாயினும் எல்லோரும் இதனை அடிமுதல் முடியின்காறும் ஓதி இதன் நயத்தை நுகரவேண்டுகிறோம்.

பதிப்பாசிரியர் தம் முன்னுரையிலே தம் ஆராய்ச்சித் திறமை தோன்றக் களவொழுக்கம் முதலாகப் பல பொருள்களை நன்கு விளக்கியிருக்கிறார்.

இந்நூல், தமிழ்மொழியும் தமிழரும் பெருமையுறத் தொண்டாற்றிவரும் திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு உரிமைசெய்யப் பெற்றிருப்பது மிகவும் ஏற்ற செயலாகும்

சக்திகாரியாலயத்தார் தம் மதிப்புரையிற் கூறியவாறு நம் தமிழ் மக்கள் இந்நூலை விரும்பிக் கற்று, பழந்தமிழிலக்கியங்களையும் விரும்பிப் பயில்வோராதலை நாமும் பெரிதும் விரும்புகின்றோம்.

முத்துத்தாண்டவர்

[நூலாசிரியர்—யோகி சுத்தாநந்தபாரதியார். பதிப்பித்தோர் — இராமச்சந்திரபுரம் அன்புநிலயத்தார். தனிப்பிரதி விலை ரூ. 0—2—0, 10 பிரதிகள் விலை ரூ. 1.]

இந்நூலைப் பதிப்பித்தோர் இதனைக் குறுஞ்சுவடி எனச் சுட்டியுள்ளனர்; ஆயினும், யாம், இதனைப் பெருநூல் எனக்கொண்டுளோம். முத்துத்தாண்டவர் வரலாறு முதறிஞராகிய சுத்தாநந்தபாரதியாரால் வனப்பொழுக வரையப்பெற்றுளது. இதனுட் கூறப்பெற்றுள்ள செய்திகளுள் ஒரு சிலவற்றை, "இதென்ன அதிசயம்......! இதை நம்பமுடியுமா?" என்று இக்கால ஆராய்ச்சி மூளைகள் அலசிப் பிழிந்து, நாத்திக முடிவுகூறும். 'கடவுள் உண்டு' என்று உண்மையாய்நம்பியவருக்கு, இம்முடிவு வெறுப்பை விளைப்பதாகும்,

அன்புநிலயத்தார், நறுஞ்சுவைதரும் குறுஞ்சுவடிகளை இன்னும் வெளியிடப்போகிறார்கள் என்று அவர்கள் பதிப்புரையால் அறிந்து மகிழ்ச்சியுறுகின்றோம்.

உண்மையான பெருமைவாய்ந்த தமிழ்ப் பெரியார் வரலாறுகள் வெளிவருதலையும் அவற்றைத் தமிழ் மக்கள் பெற்றுக் கற்றுணர்ந்து உண்மையறிவுடையவராதலையும் மிகப் பெரிதும் விரும்புகின்றோம்.

"நீர்க்குமிழி"

[எப். டப்ள்யு. பெயின் ஆங்கிலத்தில் எழுதியதை கி. சாவித்திரி அம்மாள் மொழிபெயர்த்தது—கலைமகள் பிரசுரம்—விலை ரூ 1—8—0.]

படிக்கப்படிக்க ஆனந்தமளிக்கும் கவிதை. மன்மதனும் சாபத்தால் பூமியில் ஜனித்த கலைமகளும் ஒருவருக்கொருவர் காதல்கொண்டு தத்தளித்தகதை. ஸ்ரீ பரமசிவனார் தேவிக்குச் சொல்லிய கதையாம், காதல், வாழ்க்கை இவைகளெல்லாம் கனவுகள், நிழல்கள், பாலைவனத்தில் தோன்றும் கானல்நீர், நீர்க்குமிழி.

மன்மதனுக்குப் போட்டியாகப் பப்கு என்பவனும் காதல் கொள்ளுகிறான். முடிவில் காதலியாகிய கலைமகளும் காதலனாகிய மன்மதனும் பப்ருவால் குத்திக் கொல்லப்படுகிறார்கள்.

இந்தக் கதைக்கு நமது புராணங்களில் ஆதாரம்கிடைப்பது அரிது என்பதை மொழிபெயர்ப்பாளர் முகவுரையில் கூறியுள்ளார். மொழிபெயர்ப்பு முதல்தரம். இனிய எளிய நடை. சுவாரஸ்யமான, கற்பனாசக்தி மிகுந்தகதை.

"கூட்டுக்கு வெளியே"

[வி. ஸ. காண்டேகர் மராட்டியில் எழுதியது—கா-ஸ்ரீ-ஸ்ரீ மொழிபெயர்த்தது—கலைமகள் பிரசுரம்—விலை ரூ. 1—4—0.]

ஆறு சிறுகதைகளைக் கொண்டது. மணியான கதைகள். கதைகள் என்பதைவிட உயரிய கற்பனைச்சித்திரங்களெனக் கூறலாம். உள்ள உணர்ச்சிகளை தூண்டிவிடக்கூடிய கதைகள். கம்பீரமான நடை. மொழிபெயர்ப்பாகவே தோன்றாது. தமிழ் அன்பர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் விருந்து. படிக்கப் படிக்கத் தெவிட்டாது. 'கூட்டுக்கு வெளியே' என்பது முதல் கதை. எல்லாக் கதைகளும் ரஸமாயிருக்கின்றன. விலை அதிகமில்லை.

"யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?"

[ஆசிரியர்: நாராயணதுரைக்கண்ணன் — ஆனந்தபோதினி காரியாலயப் பிரசுரம். விலை ரூ. 1—0—0.]

ஹிந்து சமூகத்தில் விதவைகள் படும் கஷ்டங்களைக் கதையில் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். . கதையின் போக்கு நமது உள்ள உணர்ச்சிகளை அபாரமாகத் தூண்டிவிடுகிறது. சமூகத்தின் சீர்கேட்டைக் காட்டக்கூடிய கதை. கதையின் கருத்தும் நடையும் மேன்மை பொருந்தியதாயுள்ளது. தமிழ் நாட்டு அறிவாளிகள் பலர் போற்றியுள்ளார்கள். சமூக ஊழல்களை விலக்க ஆவல்கொள்ளும ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் இக்கதையை வாசித்துப் பயன் பெறலாம்.

வசீகரமான ஆடைகளுக்கும்

ரெடி-மேட் ஜம்பர், ஷர்ட், ஜாகட்

முதலிய உடைகளுக்கும்

ஸ்ரீநிவாஸ் & கம்பெனி

பெரிய கடைத்தெரு,

கும்பகோணம்

தான்

உங்கள் சிறந்த ஜவுளிக்கடை

தீபாவளித் தேவைகளுக்கு

இங்கு விஜயம்

செய்யுங்கள்

தீபாவளிப் பண்டிகை என்றைக்குமே

தீபாவளி-பெரும் கொண்டாட்டநாள். தீப மகோற்சவம்-பாரதநாடு பூராவுமே இலக்ஷக்கணக்கான ஜனங்கள் உவந்து கொண்டாடும் பண்டிகை! இந்த சந்தோஷாவசரத்தில் **டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியார்** தங்கள் நேயர்களுக்கு மங்கள வாழ்த்து கூறுவதுடன் தேச சேவையே எப்பொழுதும் கம்பெனியின் நோக்கமென்பதையும் திரும்பவும் உறுதியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

தி டாடா ஆயில் மில்ஸ்
கம்பெனி லிமிடெட்.

முதல் தீபாவளி

எம். எஸ். கமலா

"இந்திரா! ஆசிர்வாதம்.

உன் அன்புள்ள கடிதம் கிடைத்தது. தீபாவளிக்கு வருகிறேன். ஒருவாரம் லீவ். மற்றோர் நற்செய்தி, வேலை காயமானதாக இன்று தெரிகிறது. மீதி விஷயங்கள் நேரில்.........

இப்படிக்கு,
உன் சந்திரசேகரன்.

இக்கடிதத்தை எத்தனை முறை படித்தாளோ... அவள் துன்பப்பட்ட நெஞ்சில் எவ்வளவு ஆனந்தம் துளிர்த்து......... எத்தனை மதுர பாவங்கள் தோன்றினவோ? புஷ்பம் போன்ற கண்களில் எவ்வித நீர்த்துளிகள் துளித்தனவோ சொல்லத் தரமல்ல. அனுபவிப்பவர்கள் தாம் அறியவல்லார். அவளுக்குப் பசிதாஹம் ஒன்றுமில்லை. சமைத்துக் கொண்டிருக்கும் தாயிடம் சென்று "அம்மா தீபாவளி எப்பொழுது?" என்று கேட்டாள்.

"இன்னும் பத்துநாள் இருக்குடீ அம்மா!" என்று "எப்பொழுது வந்தால் என்ன? ஹூம்........" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். கண்ணாடிகள் போன்ற அக் கன்னங்கள் சிறிது சிவந்தன. ஆனால் உதட்டிற்குமேல் வரும் பேச்சை எப்படித்தான் அடக்கிக்கொண்டாளோ அவளுக்கே தெரியாது. சடக்கென்று தன் அறைக்குச் சென்றாள். பெட்டியினடியில் இருக்கும் ஓர் புகைப்படத்தை எடுத்தாள். அது அவள் விவாஹத்திற்குமுன் எடுக்கப்பட்டது. அப்படம் அவள் பெட்டியினடியில் சிறை புகுந்து ஐந்தாண்டுகள் ஆயின.

"ஏன்: உங்களைத்தான்! நீங்கள் வரப்போவதைச் சொல்லிவிடட்டுமா? ஊஹூம், சொல்லவேமாட்டேன். ஐந்தாண்டுகளாய் என்னைப் படுத்திய பாட்டுக்கு உங்களை...... ஆமாம், ஏமாற்றத்தான் வேண்டும். வந்துதான் பாருங்களேன். 'மாப்பிள்ளை வராததால் இந்திரா வீட்டுத் தீபாவளி என்றைக்கும் இப்படித்தான்' என்று ஊரார் சொல்வதை நீங்களும் தான் கொஞ்சம் கண் கொண்டு பாருங்களேன். உங்களுக்கு ஒரு பெண் இருந்து, மாப்பிள்ளை இப்படியாட்டினால் தெரியும் சேதி" அதுவரை...... அவளையும் அறியாமல் அவள் முகம் சிவந்து ரோஜாவைப்போன்ற உதட்டில் முல்லை நகைப்பு விரிந்து மறைந்தது. புகைப்படத்தை மார்புடன் தழுவிக்கொண்டாள்.

"அக்கா! அக்கா! அத்திம்பேர் வராராடி இந்தத் தீபாவளிக்காகிலும்? இத்துடன் அவள் எத்தனை தீபாவளிக்குக் கேட்டாய் விட்டது. நான் நம்பிக்கையுடன் சொன்னபோதெல்லாம் அவர் வந்தாரா? இல்லை. இம்முறையும் அப்படிச் சொல்லி ஏமாறுவதைவிட ஜாக்கிறதையாய் இருப்பது நலம்" என்று உதட்டை இடதுபுறம் மென்றுக்கொண்டே பதினைந்து வயது தங்கையைக் கூர்ந்து பார்த்தாள். "அக்கா! நான் சொன்னது காதில் பட்டதோ இல்லையோ?"

"எதற்கடீ! அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறையா என்ன?" என்று கோபத்துடன் கேட்டாள்.

"ஆம்: அகமுடையான் வாராதமட்டும் அக்காள் அகமுடையானை"—என்று அவளும் கண்ணடித்துக் குறும்பு செய்தாள். அவள் தங்கையை அடிக்கக் கையை ஓங்கினாள். அவள் சிட்டுக்குருவியாய்ப் பறந்தோடிப் போனாள்.

இந்திராவின் முன் ஓர் மெல்லிய திரை. அதன் மேல் அவள் கல்யாணத்திற்குப் பின் நடந்த—அமளி. ஒவ்வொன்றாய்த் தெரிந்தது. தன் கணவருக்கு கல்யாணத்தின்போது போடுகிறேன் என்ற வைரமோதிரம் போடாததால் தன் மாமனார் தன் தந்தையை கண்டபடி பேசியதும், தந்தையோ எல்லாவற்றையும் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, ஆடி, ஆறும் மாசம் மாப்பிள்ளை வந்தால் வைரமோதிரம் போட்டனுப்புவதாக வினயமுடன் சொன்னதும், விதி குறுக்கிட்டு ஆடிக்கு மாப்பிள்ளை வரும்போது கொயிலன் பாங்க் முறிவு ஏற்பட்டதும், தன் தந்தை சொல்லைக் காப்பாற்றச் சக்தியற்றுப் போனதும், அதனால் தன் கணவனை மாமனார் கலியாணமாகி நான்காண்டுகளாகியும் தீபாவளிக்கு அனுப்பாமலும், தன்னையும் அழைத்துக்கொள்ளாமலும் இருப்பதும், இவ்வருடம் தான் எம். பி. பி. எஸ். பரீக்ஷையில் தேறியதைப்பற்றி எழுதினாலும் பதில் போடாமல் இருப்பதும் அவளுக்கு வெகு வெறுப்பையளித்தன.

நான்காண்டுகளாய் அவள் தந்தை மாப்பிள்ளையைத் தீபாவளிக்கு வரச்சொல்லி எழுதுவதும் தை பிறந்தால் பெண்ணை எப்பொழுது அழைத்துக்கொண்டு வருவது என்று எழுதுவதும் அதற்கு அவர்கள் பதில் போடாமல் "உன் வாக்கை நிறைவேற்றினாலொழிய வேறு விஷயத்தை நான் பேசத் தயாராயில்லை",

என்று கடிதம் எழுதுவதும் வழக்கத்தில் வந்துவிட்டது. அவள் மனம் இடிந்து போயிற்று. 'இந்த ஸ்ரிஷ்டியின் ஆபத்துத்தான் என்ன விசித்திரம்? ஆணுடன் கூடி இருந்த பெண்தான் சோபிப்பாள். ஜோடிப் பறவைகள்தான் பார்ப்பதற்கழகு. இந்த நியதி எப்படி ஏற்பட்டது? கிறிஸ்துவ வேதங்களிலாவது ஆதாம், ஈவாள் இவர்களால் வந்ததென்ற உபமானம். நம் சாஸ்திரங்கள்.........' என்று இப்படி உதவாக்கரை யோசனை பற்பல செய்வாள். இவ் வருடம் யோசனைகளை ஒதுக்கித் தைரியமாய் அவனுக்குக் கடிதம் எழுதினாள்.

அன்பரே! நமஸ்காரங்கள்

இந்தத் தீபாவளிக்காயினும் தங்கள் தரிசனம் கிடைத்தால் தன்யை ஆவேன். இவ்வைந்தாண்டுகள் ஐந்து யுகங்களென்றால் நம்புவீர்களா? உலகத்தில் இப்பிரிவு...... என்னவென்றெழுதுவேன்? எப்படியாயினும் வழி செய்துகொண்டு வரவேண்டுமென்று.........

உங்கள் பததாஸி,
அபாக்கியவதி,
இந்திரா.

இதற்குத்தான் அவனிடமிருந்து அக் கடிதம் வந்தது.

2

சந்திரசேகரன் ஸூட்கேஸில் வேண்டிய உடைகளை வைத்துக்கொண்டிருக்கிறான். எதிர் வீட்டு ரேடியோவில் 'சுகுமாரா! என் தாபம் தனை நீ யறியாயோ மாரா!' என்று பாடியது. அவன் மனம் திடுக்கிட்டது. அதேசமயம்தான் இந்திராவின் கடிதமும் கிடைத்தது. முதலில் சகுந்தலையின் சித்திரம். அதற்குப்பின்பே இந்திராவின் இந்திர நீலக்கண்கள் நீர்சோர நிற்கும் காட்சி, தன் கல்யாண நினைவுகள், தான் தன் தோழன் ஒருவன் விவாஹத்திற்குச் சென்றிருந்தபோது இந்திராவின் தந்தை இந்திராவுடன் வந்து தன் பெற்றோர்களுக்கு அவளைக்காட்டி அவர்கள் பரிபூர்ண சம்மதத்தால் விவாஹத்தை நிச்சயித்ததும், தன்னைத் தன் தந்தை தந்தியடித்து வரவழைத்தும், தான் என்றும் பெற்றோர்களின் சொல்லுக்குக் குறுக்காய்ப் போகாமல் நல்லவனாய் இருக்க நினைத்ததைக் கொள்கையில் காண்பிக்க முன் வந்ததையும், ஆனால் இந்திராவை விவாஹ வேதிகைமேல் பார்த்ததும் தான் நினைத்ததைவிட அவள் அழகுள்ளவளாயும், இண்டர் பரீக்ஷைக்கு அப்பியராய் இருப்பதையறிந்ததும் தன் மனம் குளிர்ந்ததும், விவாஹமானதும் நவீன காதலர்களைப்போல் தானும் இந்திராவும் உல்லாசப் பிரயாணம் (ஹனிமூன்) செல்லக் கோட்டைகட்டிக்கொண்டிருந்ததும், ஆனால் முகூர்த்தத்தன்றையதினம் மாலையே தன் தந்தைக்கு வைரமோதிரச்சாக்காய் வாயில் சனியாட்டம் ஆடியதும், அன்றையிலிருந்து இன்றையவரை பொறுத்ததற்கு அவர்களுக்கும் பணம் சேரவில்லை, இவன் தந்தைக்கும் மனம் இரங்கவில்லை. நடுவில் தானும் தன் மனைவியும் எத்தனையோ தூரத்தில் ஒருவரை ஒருவர் நினைத்து வேதனைப்படுவதுதான் மீதி. ஆனால் பெற்றோர் சொல்லை மீறி நடக்கவும் மனம் துணியவில்லை. கடமையின் மறைவில் தூங்கிக்கொண்டிருந்த அன்பை இன்றையதினக் கடிதம் எழுப்பிவிட்டது. இவ்வருடம் அவள் டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறாள் என்று தெரிகிறது. அவளையோ கல்யாண மனையில் பார்த்தது. அவள் புகைப்படம்கூட வீட்டிலில்லை. முகூர்த்தத்தன்றையதினம் மாலையே தான் முறுக்கிக்கொண்டு வந்தாய்விட்டதே! இத்தனைக்கும் அவள் கல்விக்காகிலும் இடைஞ்சலில்லாமல் கற்க மைசூர் ராஜாங்கமாயிருந்ததால் ராஜாங்கச் செலவில் கற்றாள். நடராஜய்யர் பெரிய சம்சாரியாதலால் வரவும் செலவும் சரியாயிருந்தது. சம்பந்தியின் அதிக ஆசையை நிறைவேற்ற வகையறியாது திகைத்தார். இத்தனையும் ஒரு நிமிஷத்தில் சந்திரசேகரனின் மூளையில் சுழன்று மறைந்தன. சற்றுநேரம் நெற்றியைச் சுளித்துக்கொண்டு யோசனையிலாழ்ந்தான். அவன் புத்தி நிலைக்கு வரவில்லை.

"இறைவா நானோர் பேதை அந்தோ!
ஏதும் அறியேனே!"

என்னும் பரிதாப கீதம் அவன் பகுத்தறிவைக் கிளறிவிட்டது. உதறிக்கொண்டெழுந்தான். ஆபீஸிலிருந்து மாலை வீட்டிற்கு வரும்போது கடைத்தெருப் பக்கம் சென்று வந்தான். அழகிய கரைதைத்த 'ஜார்ஜெட் புடவை, அதற்கேற்ற ப்ளௌஸ், பெரிய பெரிய லோலாக்குக்கள், ஓர் மோதிரம், தோன்றியதெல்லா வற்றையும் பெட்டியில் வைத்தான். மோதிரத்தைவைக்கும்போது 'உங்கப்பா போடாததால்தானே இத்தனைநாள் பிரிவு; நான் போட்டுவிட்டேன், நம்மிருவரின் சேர்க்கைக்கு அடையாளமாய்" என்பேன். அவள் முகம் வெட்கத்தால் சிவக்கும், சிவக்கும் கன்னங்களில்...... இடுவேன்'.

இவன் ஆனந்தக் கோட்டையைத் தகர்க்க வந்தாரப்பா அவன் தந்தை.

"எங்கேடா பிரயாணம் சந்திரா?"

முகம் அசடு வழிந்தது. மனதின் ஏமாற்றம் கண்களில் வெளிப்பட்டது. "எங்கேயும் இல்லையப்பா; பெட்டி ரொம்ப நாளாய்ச் சுத்தம் செய்யாததால் தூசி படர்ந்திருக்கிறது;" என்று சொல்லி, 'என்ன இப்போது அகாரணமாய் வந்தது?' என்பதைப்போல் பார்த்தான்.

"சந்திரா! நேத்து காத்தாலே டௌனுக்கு போயிக்கொண்டிருந்தேன். ஸெண்ட்ரலில் உங்க ஆபீஸ் ஹெட்கிளார்க்கைப் பார்த்தேன். அவனும் 'ட்ராமில்' ஏறினான்; அவன் சொன்னான், "உனக்கு வேலை காயமாச்சுன்னு, நேத்து

உத்திரவு வந்ததுன்னும், நீயும் ஒரு வாரம் லீவ் எடுத்திருக்கேன்னும் சொன்னான். உடனே புறப்பட்டேன். உங்க அத்தைக்கு ஷஷ்டியப்த பூர்த்தியாம் மேட்டுப்பாளையத்தில். அதுக்குப் போயிட்டுஅப்படியே 'வாலாஜாவுக்குப்போய் ருக்மணியைப் பிரசவத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்விடலாம். உனக்கும் லீவா இருக்கு. உங்கத்தையும் உன்னைப் பார்க்கணும்னு கடுதாசுமேல் கடுதாசு போடறாள்'' என்றார்.

“இதேதடா பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது; அந்தச் சனிப்பிடித்த சங்கரனை சும்மாவிடக்கூடாது” என்று மனதிற்குள் கருவிக்கொண்டான். சந்திரனுக்குத் தந்தையிடம் மரியாதையும் நன்மதிப்பும் உண்டு. தன் மாமனார் வைரமோதிரம் போடச் சக்தியற்றதினால் அவரைத் துன்புறுத்தினார். அவர் நிலைமையைத் தாமேயறிந்து இந்திராவை அழைத்து வந்துவிடுவார் என்று தைரியத்துடனிருந்தான், அவன் நம்பிக்கை வெற்றி கொள்ளவில்லை. தைரியம் அதைரியத்தில் கொண்டுவந்து ஆழ்த்தியதுதான் மீதி. என்ன செய்வான்?

— 3 —

டாக்டர் ஸ்ரீதர் நடத்தும் 'நர்ஸிங் ஹோமில்' வடக்கத்திப் பெண் டாக்டர் ஒருவர் வந்திருப்பதாயும், அவள் வெகு அன்புடன் நோயாளிகளை உபசரிப்பதாகவும் வதந்தி பிரபலமாய்க்கொண்டிருந்தது. அவள் சகோதரி சில பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்களுக்குச் சங்கீதமும் ஆங்கிலமும் சொல்லிக் கொடுப்பதாகவும் எங்கே கண்டாலும் இதே பேச்சு.

ஹாலாஸ்யமய்யர் (அதுதான் சந்திரசேகரின் தந்தை பேர்) மாப்பிள்ளை 'மெகானிக்கல் ட்ரெயினிங்' பெற அமெரிக்காவிற்குச் சென்றவன் தான் வருவதற்குள் தன் மனைவிக்கு நன்றாய் ஆங்கிலமும், கர்னாடக சங்கீதமும் கற்பித்திருக்கவேண்டுமென்று எழுதிவிட்டான். அவரும் பராபரியாய் இதைக் கேள்விப்பட்டிருப்பதால் டாக்டர் சகோதரியைத் தன் பெண் சாவித்திரிக்கு ஆங்கிலமும் சங்கீதமும் கற்பிக்க நியமித்தார். ஹாலாஸ்யமய்யருக்குக் கடைக்குட்டி சாவித்திரி. 'சாகு சாவித்திரி பேகு பெண்ணை கிருஷ்ணா' என்பதைப்போல் பெண்கள் போதும் என்ற உணர்ச்சியுடன் சாவித்திரி என்று பெயரிட்டார். அவள் அதிர்ஷ்டமோ இவர் திருட உணர்ச்சியோ அவளுக்குப்பின் அவருக்குச் சந்தானங்களில்லை. சாவித்திரி செல்லக்குழந்தை. அவள் அகமுடையான் அவள் செல்லத்திற்குமேம்பட்ட சலுகையை மாமனாரிடம் அடைபவன், இனிச்சொல்வானேன்!

சந்திரசேகரன் வேலையின் நிமித்தம் வெளியூர்களில் சுற்றிக்கொண்டிருக்கிறான். டாக்டர் இந்துமதி, அவள் சகோதரி சந்திரமுகி, இருவரும் வெகு நேர்மையுடன் அவர்கள் விடுதியில் வஸிக்கிறார்கள். அச்சகோதரிகளின் நேர்மைக்கும் கருணையான குணத்திற்கும் வியக்காதாரில்லை. 'கோஹினூர்' என்னும் பெரிய பங்களா. அதில் ஸ்ரீதர் நர்ஸிங் ஹோம். அக்காம்பௌண்டில் அதைச்சேர்ந்தாற்போலிருக்கும் சிறிய கட்டிடம் டாக்டர் இந்துமதிக்கு ஸ்ரீதரால் அளிக்கப்பட்டது. அங்கிருந்தே மிக அவசியமானபோது நோயாளிகளைக் கவனித்துக்கொள்வாள் இந்துமதி.

அன்று அவள் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஸ்ரீதரன் அவளையழைத்தான். அவள் அவன் முன்வந்து தலை குனிந்து நின்றாள். “ஹாலாஸ்யமய்யர் வீட்டிற்கு ஓர் டாக்டர் வேண்டுமாம். நீ ஒருவர் வீட்டிற்கும் போவதில்லை என்று சொன்னேன் அவர் எப்படியாகிலும் உன்னைத்தான் அனுப்ப வேண்டுமென்று சொன்னார்” என்று சொல்லி அவளைக் கூர்ந்து பார்த்தான்.

“இல்லை. நான் நாளையதினம் எங்கள் ஊருக்கு போகப்போகிறேன். வேறு யாரையாகிலும் பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள். நான்...... தயவுசெய்து மன்னிக்கவும்.”

“நாளை நீ போகிறாயா? அப்படியானால்......” என்று சொல்லும்போதே “நான் உங்களுக்கு நேற்றே கடிதம் அனுப்பிவிட்டேன். எனக்கு அவசரமாய் செல்லவேண்டி இருக்கிறது”

“அப்படியானால் வருவதற்கெத்தனை நாள் பிடிக்கும்?”

“குறைந்தபக்ஷம் பத்துநாட்களாகும்”. அதை ஸ்ரீதரன் ஹாலாஸ்யமய்யருக்குத் தெரிவித்துவிட்டான்.

அன்று அவள் ஊருக்குச் செல்ல மூட்டைகள் கட்டிக்கொண்டிருந்தாள். அச்சமயம் சாவித்திரியும் அவள் அன்னையும் கார் போட்டுக்கொண்டு அவள் வீட்டிற்கு வந்தனர். இந்து திகைத்து நின்றாள். சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்டு கறுப்புக் கண்ணாடிக்குள் இருக்கும் கண்கள் மின்ன, “வாருங்கள்” என்றாள். அவளின் அன்பு ததும்பும் குரல், சாந்தமானமுகம், நிதானமானபேச்சு, அந்தம்மாளின் பரபரப்பையடக்கின.

சாவித்திரியின் அன்னை: “இந்து! எனக்காக இன்று ஊருக்கு போகாதையேன். உங்கம்மா உனக்காக அழுது மன்றாடினால் இப்படி நிராகரித்துச் செல்வாயா? என்னை உங்கம்மாளாய் நினைத்துக்கொண்டு இரண்டு நாள் நின்றுபோயேன். இச் சுற்றுப்புறங்களில் உன் பராமரிப்பைப்பற்றி அதிகமாய்ப் புகழ்கிறார்கள். எப்பேர்ப்பட்ட வியாதியாயினும் உன் கையால்

உபசரணை பெற்றால் குணமாகி விடுகிறதாம். எங்காத்துக்கு வந்து........." என்று சொல்லிக் கண்ணீர் வடித்தாள்.

இந்துவின் மனம் இளகிற்று. டாக்டர்களின் கடமை என்ன? அவர்கள் பிறர் நலத்தைக் கோருவதுதானே. ஒரு நிமிஷத்தில் தன் நிச்சயத்திற்கு வந்தவளாய் "இத்தனைக்கும் உங்கள் வீட்டிற்கு எதற்காக வரவேண்டுமென்று சொல்லாமலேயே இருக்கிறீர்களே!" என்று கனிகரமாய்க் கேட்டாள்.

"என்னத்தைச் சொல்ல இந்து! நாளைக்கு சாவித்திரி அகமுடையான் வருகிறான். அதற்காக வீடு அமளிப்பட்டுண்டிருக்கும்போது..." என்று விக்கி விக்கி அழுதாள். அவள் கண்களிலும் நீர் மல்கிவிட்டது. "என்ன? யாருக்கு? மாமாவிற்கேதாகிலும்........."

"அப்படி அவருக்கு உடம்புக்கு வந்தால் தேவலையே! என் சந்திரனுக்கு நான்கு நாளாய் மூளை சரியாயில்லை என்று இன்று காலை அவன் சிநேகிதர்கள் அழைத்துவந்து விட்டார்கள். நான் என்ன செய்வேன் என்று தலையில் படீர் படீரென்று போட்டுக்கொண்டாள். பெற்ற மனம், அவள் அளவுகடந்த சோகத்தைச் செய்கையில் காண்பித்தது.

அவள் மார்பு இரண்டாய் வெடித்துவிடும் போல் இருந்தது. கண்கள் மடைதிறந்து நீர் சொரியத் தொடங்கிவிட்டன. உதடு துடிக்க உள்ளம் பதைக்க "அய்யோ!" என்று சுவரில் சாய்ந்தாள். இரண்டு கையாலும் மார்பைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்.

தன்னைத்தானே திருடம் செய்துகொண்டு "நீங்கள் அவரை என்ன செய்வதாய் உத்தேசம்?"

"வீட்டிலேயே வைத்துக்கொள்ளலாமென்றால் கட்டுக்கடங்காமல் இம்சைதருகிறான். ஆஸ்பத்திரியில் சேர்க்கலாமென்றால் அனியாயமாய் அடித்துக் கொன்னுடுவாளேன்னு பயமாயிருக்கிறது. நீ அவனைப் பார்த்துக்கொள்வதாயிருந்தால் ஸ்ரீதரன் ஆஸ்பத்திரியில் மாப்பிள்ளை போகும்வரை வைத்திருந்து, பிறகு வீட்டிற்கு அழைத்துச்சென்று நாட்டுவைத்தியமோ செம்பரையோ (மலையாள தேசத்தில் பைத்தியம், செய்வினை, பில்லி, சூன்யம் முதலியவைகளுக்கு வைத்தியம் செய்யும் இடம்) எது செய்தால் குணமாகிறதோ அதைச் செய்வது என்று நிச்சயித்திருக்கிறோம்".

நீங்கள் டாக்டர் அனுமதியைக் கேளுங்கள். அவர் என்ன சொல்லுகிறாரோ பார்க்கலாம். அங்கு அவரை வைத்துக்கொள்ள ஒரு வசதியுமில்லை" என்று யோசித்தவாறே சொன்னாள்.

அதற்குள் ஹாலாஸ்யமய்யர் டாக்டருடன் இவள் இருப்பிடம் வந்தார். இந்துமதி தன் மேலாடையைச் சரிசெய்துகொண்டு இருவருக்கும் அஞ்சலி செய்தாள். ஹாலாஸ்யமய்யர் வெகு பரபரப்புடன் "அம்மா! எங்கள் கஷ்டத்தைக் கொஞ்சம் பார். இந்தத் தீபாவளி முடியட்டும் என் பையனைக் காப்பாற்றிவிடு. பிறகு நான் பார்த்துக்கொள்ளுகிறேன். என் மாப்பிள்ளை மஹா படாடோபக்காரன். நான் செய்த பாவம்......ஆம். சும்மாவிடுமா? நான் அனுபவிக்காமல்! எத்தனை தீபாவளிகள் ஏமாற்றினேன். அவர்களின் மனம் இப்படித்தானே இருந்திருக்கும்? அதையெல்லாம் இப்பொழுது நினைத்து என்ன செய்வது? என் மானத்தை ரக்ஷிப்பாயா?" என்று கண்ணீர் வடித்தார்.

"நான் என்ன செய்வேன். என் தந்தைக்கு வருவதாய்க் கடிதம் எழுதிவிட்டேன். அவர் எனக்காகக் காத்திருப்பார். நியாயமோ அநியாயமோ சொன்ன சொல்லைத் தவறினால் அவர் பொறுக்கமாட்டார். அவரை ஏமாற்ற இயலாது" என்றாள் குரல் தழுதழுக்க.

"இந்துமதி! எனக்கு என் ஒரே மைந்தனை எங்கும் விட மனமில்லை! நான் என்ன செய்வேன்? நாளை மாப்பிள்ளை வந்து, தீபாவளியான மறுதினமே சாவித்திரியை அழைத்துச் சென்றுவிடுகிறார். அவர் ரெயில் ஏறினதும் என் பிள்ளையை நான் பார்த்துக்கொள்கிறேன். உன் தந்தைக்கு ஒரு வாரம் பொறுத்து வருவதாய்எழுதேன்" என்று வெகுவாய்வேண்டினார்.

"இப்பொழுது திடீரென்று சொன்னால்..."

அவர் மனைவி அவள் தோளைப்பிடித்துக் கொண்டு "என் கண்ணேல்லியோ? இச்சமயம் நீதான் எங்கள் தைவமடி அம்மா!" என்று அவள் முகவாய்க்கட்டையைப் பிடித்து வேண்டினாள். சாவித்திரி பரிதாபமாய் இந்துவைப் பார்த்தாள், இந்து தன்னறைக்குள் சென்று கண்களை துடைத்துக்கொண்டு வெளியில்வந்து "உங்கள் பிள்ளையை எவ்விடம் வைப்பதாய் உத்தேசம்?"

"எங்களுக்கு மைலாப்பூரில் ஓர் வீடிருக்கிறது. அங்கு ஒரு வாரத்திற்கு வைக்கிறோம். நர்ஸிங்ஹோமில் வைத்துக்கொள்ள வசதியில்லை என்று ஸ்ரீதரர் சொல்லுகிறார். மாப்பிள்ளை வந்து சென்றதும் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறோம். அதுவரை நானும் என் மனைவியும் காலைமாலை வந்து பார்த்துச் செல்கிறோம்" என்றார்.

அவள் டாக்டரை திரும்பிப் பார்த்து "இவ்விடமே வைத்துக்கொண்டுவிட்டால் என்ன? உங்கள் வீடும் அருகிலிருக்கிறது, எல்லாவற்றிற்கும் வசதியாயிருக்கும், எனக்கும்....."

“மிகவும் சரி, எனக்கும் அலைச்சலில்லை. ‘நர்ஸிங்ஹோமில்’ நோயாளிகள் பயப்படுவார்கள். நீ உன் வீட்டில் வைத்துக்கொள்வதாயிருந்தால் எனக்கு ஆக்ஷேபனை இல்லை” என்றார் டாக்டர்.

4

அவள் கட்டிய மூட்டைகளை ஒருபுறம் எடுத்து வைத்துவிட்டுச் சயன அறையில் கட்டிலைக் காலிசெய்தாள். சற்று நேரத்தில் ஓர் வேலைக்காரன் சில உடைகளையும் படுக்கையையும் கொண்டுவந்து வைத்துச்சென்றான். அவள் பூஜையறையில் ஓர் விளக்கேற்றி “சுவாமி! உன் சோதனை இம்மட்டும்தானா? இன்னும் உண்டா?” என்று கண்ணீர் சோரக் கதறினாள். கார் ‘ஹாரன்’ கேட்டதும் கண்களைத் துடைத்துக்கொண்டு, தெருக்கதவை விசாலமாய்த் திறந்தாள்.

“தீபாவளியாம், பண்டிகையாம். தீபாவளி பண்டிகை என்று யார்சொல்வது? எங்கப்பாவைக் கேளுங்கள், அது பண்டிகையா? இல்லையா? என்று தெரியும். ஓர் அசுரன் செத்த நாள் என்னதான் பண்டிகையாயிருந்தாலும் யாருக்குப்பண்டிகை? ராக்ஷசன் செத்தால் தேவர்களுக்குப் பண்டிகை. தேவர்கள் செத்தால் ராக்ஷசர்களுக்குப் பண்டிகை. ராக்ஷசன்செத்தால் ராக்ஷசர்களுக்குப்பண்டிகையா? துக்கம்தானே! எங்கப்பா ராக்ஷசன், அந்த ராக்ஷசனுக்குப் பண்டிகை இல்லை. தீபாவளின்னா துக்கம். அப்பன் துக்கம்கொண்டாடினால் அவன் வம்சத்தவருக்கும் துக்கம்தானே!” என்று தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு பற்களை நற நறவென்று கடித்துக்கொண்டு மிரள மிரளப்பார்த்தான்.

டாக்டர் ஒருபுறமும் தந்தை ஒரு புறமும் பிடித்துக்கொண்டுவந்தார்கள். தந்தையின் சோகம் சொல்லத்தரமன்று. டாக்டர் மாத்திரம் அவனை ஆச்வாசப்படுத்த, “ஆமாம் அப்பா! ராக்ஷசன் செத்தால் ராக்ஷசர்களுக்குப் பண்டிகை ஏது? உங்கப்பா ராக்ஷசன், அந்த நரகாசுரன் தம்பி” என்றார்.

“வெரிகுட் (very good) ரொம்ப சரி. இல்லாமலா ஒருநாளாவது தீபாவளிக்கு.........” என்று சொல்லிக்கொண்டே தந்தை முகத்தைப்பார்த்தான். தந்தையிடம் எப்பொழுதும் மரியாதையும் பயமும் உள்ளவனாதலால் வாயை மூடிக்கொண்டு “அப்புறம் சொல்றேன் டாக்டர்” என்றான்.

இந்துமதிக்கு இப்பரிதாபக்காட்சியைக்கண்டதும் அடக்கக்கூடாத துக்கம். உதடு துடித்துக்கொண்டிருந்தது. கண்களில் துளிர்க்கும் நீரை அடக்கிக்கொண்டு “டாக்டர்! இவருக்கு என்ன கொடுக்கவேண்டும்?”

“‘ஒரு மார்பியா’ இன்ஜக்ஷன் கொடுத்துச் செல்கிறேன், சற்றுத் தூங்கலாம். அதற்குள் உன் வேலையை முடித்துக்கொண்டு ‘லைம்ஜூஸ்’ கொடு. பலஹீனம் அதிகமாக இருக்கிறது. கூடியமட்டும் ஆஹாரத்தைச்செலுத்து. அதிகமாய்க்கூச்சலிட விடாதே. அப்படி அதிகமாய்க் கூச்சலிட்டு அலட்டிக்கொண்டால் 2 ப்ரோமேட் மிக்சர் கொடு” என்று சொல்லிச் சென்றார்.

இந்துமதி நல்ல புத்திசாலி. தைரியமுள்ள மங்கை. அவன் தூங்கும்போதே அவ்வறையைச் சீர்திருத்தினாள். மேஜைமேல் வெள்ளி ஸ்டாண்டில் இரண்டு போட்டோக்கள். அதனருகில் வாஸில் புஷ்பங்கள். ஓர் தட்டில் சில கனிவர்க்கங்கள். சுவரில் பெரிய நிலைக்கண்ணாடி ஒன்று. அதன் இரு மருங்கினும் அழகிய மங்கையர் புகைப்படத்தை மாட்டினாள். அறையின் வாயிலில் திரைச்சீலை தொங்கவிட்டு ‘டேபிள் பேனை’த் திருப்பிவிட்டுத் தன் வேலையைச் செய்யச்சென்றாள்.

அரை மணி நேரத்தில் எழுந்துவிட்டான் சந்திரன். எழுந்ததும் நாற்புறமும் திறு திறுவென்று பார்த்தான். மல்லிகையின் மணம் சாந்தி முகூர்த்த அறையைப் போன்றிருந்தது. தீபாவளியாம் என்று முகத்தைக் கோரமாய் வைத்துகொண்டு எழுந்தவன் முகத்திற்குமுன் சுவரில் கண்ணாடியில் இவன் விக்ருதமான முகம் தெரியவே வீறிட்டுக் கண்களை மூடிக்கொண்டான் அவள் ஓடோடியும் வந்து திரைக்குப்பின் நின்று அவனைப் பார்த்தாள். சடாரென்று உள் நுழைந்து கண்ணாடியின்மேல் திரையைத் தொங்கவிட்டு “இதோ கண்களைத் திறவுங்கள். நமக்குத் தீபாவளி இல்லை. தேவர்களுக்குத்தான் தீபாவளி” என்று அவன் முகத்தைத் தன் மெல்லிய விரல்களால் தடவினாள்.

“அய்யோ! திறக்கமாட்டேன். நரகாசுரன் வந்திருக்கிறான்”.

“இல்லை, அவனைத் துரத்தியாய்விட்டது. கண்களைத் திறந்துபாருங்களேன்” என்று அன்பொழுகச் சொன்னாள். அவன் பயத்துடன் கண்களைத் திறந்து மிரண்டபடி சுவரைப் பார்த்தான். அவ்விடம் இருக்கும் இளம் மங்கையின் புகைப்படத்தைச் சற்று நேரம் உற்றுப்பார்த்து, “இவளைக்கூட நரகாசுரன் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறானா?” என்று கூச்சலிட்டான்.

“நன்றாய்ப் பாருங்கள். அது வெறும் படம்” என்று அதைக் கழற்றி அவனிடம் கொடுத்தாள். அவன் வெறித்து அவளையும் படத்தையும் மாறி மாறிப் பார்த்தானே தவிர கையில்

1. “மார்பியா” மயக்கம் தரும் மருந்து. 2. “ப்ரோமேட் மிக்சர்” தூங்குவதற்குக் கொடுப்பது.

படத்தை வாங்கவில்லை. தலைமயிரை இரண்டு கைகளாலும் இறுகப் பிடித்துக்கொண்டு புகைப்படத்தை வெறிக்கப் பார்த்தான். "நினைவு இல்லையே! இவளைப் போன ஜன்மத்தில் எனக்கு நன்றாய்த் தெரியுமே!" என்றான் சற்று மெல்லிய குரலில். அவனுக்கு எலுமிச்சம்பழ ரஸத்தைக்கொடுத்து டாக்டர்சொன்ன முறைகளைக் கையாண்டாள்.

மாலை ஹாலாஸ்யமய்யர் தம்பதிகள் அவனைப் பார்க்க வந்தபோது அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவர்கள் சத்தம் செய்யாமல் பார்த்துச் சென்றனர். அவன் கூச்சல் அங்கு வந்ததும் சற்று நிதானப்பட்டது. இரண்டு நாளில் படிப்படியாய்க் குறைந்து இயற்கை ஸ்திதிக்கு வந்தான். டாக்டரும் இரண்டு முறை வந்து பார்த்து மருந்து கொடுத்துச் சென்றார்.

அன்று காலை அவள் எழுந்து பூஜை செய்து கொண்டிருந்தாள். அவள் முகம் எல்லையற்ற சாந்தியுடன் பொலிந்து கொண்டிருந்தது. சந்திரனுக்குக் கட்டிலைவிட்டு எழுந்திருக்க முடியவில்லை. உடம்பு மிகவும் ஓய்ச்சலாய் இருந்தது. யாராகிலும் கைலாகு கொடுத்து எழுப்பினால் தேவலைபோல் தோன்றியது. அன்றுதான் அவன் தன் நிலையடைந்தான் என்றும் சொல்லலாம். தன்னிருக்கையை விட்டெழமுடியாமையால் கண்களைத் திறந்து நாற்புறமும் பார்த்தான். ஒன்றும் விளங்கவில்லை. புது இடமாய் மாத்திரம் தோன்றியது. ஒன்றும் விளங்கவில்லை. சுவரில் மாட்டி இருக்கும் படத்தைப்பார்த்ததும் "இந்திராவினுடையதைப்போலிருக்கிறதே! இவள் படம் இங்கே எப்படி வந்தது? அன்று ஆபீஸில் 'அட்மினிஸ்ரேஷன்' ரிபோர்ட்டைப் பார்த்துக்கொண்டிருந்தது நினைவிற்கு வந்தது. மீதி வரவில்லை. கண்களை மூடிக்கொண்டு யோசனையிலாழ்ந்தான். போர்த்துக்கொண்டிருந்த பிளேங்கெட்டை உதறித்தள்ளினான். இந்துமதி ஓர் கோப்பையில் பால் எடுத்துக்கொண்டு வந்தாள். கீழே கிடக்கும் போர்வையை எடுத்து அவன் உடலில் போர்த்தினாள். அவன் யோசனையில் அது தெரியவில்லை. அவன் முகத்தருகில் வந்து குனிந்து பார்த்தாள். பலஹீனத்தினால் வியர்வை ஆறாய் வடிந்துகொண்டிருந்தது. அவன் கட்டிலுக்குமேல் போட்டிருந்த துவாலையால் வியர்வையைத் துடைத்தாள். அவன் மெல்லக் கண்களைத்திறந்து பார்த்தான். பலஹீனமடைந்த மெல்லிய குரலில் "நான் எங்கிருக்கிறேன்? நீ யார்?" என்றான்.

அவள் மனம் சற்றே சாந்தியடைந்தது, "பிறகு சொல்லுகிறேன், கொஞ்சம் பால் சாப்பிடுங்கள்."

"நான் பல் தேய்த்துக் குளித்துவிட்டுத்தான் சாப்பிடுவேன்."

"உங்களால் எழுந்திருக்கமுடியுமா?" என்று அவன் முகத்தைப்பார்த்தாள். அவன் பலஹீனமோ கண்களில் வெளிப்பட்டது. உதட்டிற்கிடையில் தோன்றும் மின்னல் நகைப்பை அடக்கிக்கொண்டு "நான் இங்கேயே ஜலம் கொண்டுவருகிறேன்" என்று ஒரு பேஸனில் சுத்த ஜலமும் டூத்பேஸ்டும் பிரஷ்ஷும் சோப்பும் எடுத்துக்கொண்டு வந்தாள். அவன் தன்னுள் நினைத்துக்கொண்டான். 'எவ்வளவு உயரிய கனா'

அவன் ஒரு வாரமாய் அலட்டிக்கொண்ட சிரமத்தால் அவன் கைகால்கள் அசைக்கக் கூடச் சக்தியற்று ஓய்ந்து கிடந்தன. அவன் பரிதாபமாய் அவளைப்பார்த்தான். பெண்களே ஸேவாஸக்தைகள். அதிலும் அவர்கள் பங்கிற்கென்று ஒதுக்கிய வேலைகளைத் திறம்படச் செய்து புகழ்பெற இச்சையுள்ள பெண் டாக்டர்களையும், நர்ஸ்களையும்பற்றிக் கேட்கவேண்டுமா அவர்கள் சிரத்தைகொண்ட நோயாளிகளின் உபசரிப்பை நன்குசெய்ய? அவள் அவனை மெள்ள எடுத்து உட்காரவைத்துப் பல்லைக் தேய்த்துவிட்டு, உடம்பை நன்றாய்ப் துடைத்துப் பாலைப்பருகச்செய்து சென்றாள். அவன் பிரமைபிடித்தவன்போல் நாற்புறச்சுவரையும் பார்த்துக்கொண்டிருந்தான். அவனால் படுத்துக்கொண்டிருக்க முடியவில்லை. மெள்ள எழுந்து புகைப்படத்தைப் பார்க்கச்சென்றான். மேஜைமேலிருந்த இரண்டு புகைப்படங்களைப் பார்த்தான். ஒன்று அவனுடையது மற்றொன்று......உற்றுப்பார்த்தான். "இந்திரா?" என்று கூவி அப்படியே கீழே சாய்ந்தான். "தடால்" என்ற சப்தத்தைக்கேட்டு ஓடோடியும் வந்தாள். அவனை அவள் ஒருவளே எப்படி எடுத்துப் படுக்கவைப்பாள்? அவள் துக்கத்துடன் அவனுக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து அவனை எழுப்பிப் படுக்கையில் படுக்க வைத்தாள்.

அவன் அலுப்பாய் படுத்துக்கொண்டிருக்கும் போது புகைப்படங்களை எல்லாம் எடுத்து மறைத்துவிட்டாள். சற்று நேரத்தில் டாக்டர் வந்தார். அவன் சோர்ந்து படுத்திருப்பதையும் பலஹீனமானமுகத்தையும் கண்டு நாடியைப் பரிசோதித்தார். அவன் உடலில் முதல்நாள் இருந்த படபடப்பில்லை. முகம் தெளிந்திருந்தது. "இரவு அதிகத்தொந்தரவு கொடுத்தாரா?" "அப்படியொன்றும் அதிகமாயில்லை" என்னும்போதே ஹாலாஸ்யமய்யர், அவர் மனைவி இருவரும் வந்தனர். சோர்ந்து தூங்கும் தங்கள் பிள்ளையைப் பார்த்து ஆனந்தத்துடன் சென்றனர்.

சுமார் பத்துமணிக்குச் சந்திரன் தூங்கிஎழுந்தான். வாயிலிற்கருகில் இந்து ஓர் நாற்காலியில் அமர்ந்து பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தாள். அறையிலிருந்த படங்களெல்லாம் அகற்றப்பட்டு வெறிச்சென்றிருப்பதைப்

பார்த்த சந்திரன் இந்துவை நோக்கி, "அம்மா! இதற்குமுன் இச்சுவரிலிருந்த படமும் மேஜைமீதிருந்த படங்களும் எங்கே?" என்று ஆவலுடன் கேட்டான்.

தன் மனதிலெழும் வேட்கையை அடக்கிக் கொண்டு "எதைக் கேட்கிறீர்கள்?" என்றாள்.

"இந்திராவினுடையதைப் போலிருந்த ஓர் படம். அதைத்தான் கேட்கிறேன்."

உள்ளத் துடிப்பைத் தடைசெய்துகொண்டு "அவளை உங்களுக்குத் தெரியுமா? அவள்என் ஆத்ம நேசி. நல்ல கெட்டிக்காரி பாபம்" ஹூம்."

"அ...வ...ள்......என்......ம......னை.....வி..."

"என்ன? உண்மையாகவா? அவளுக்கு விவாஹம் ஆயிருக்கிறதா? அவள் என்னிடம் அதை அறிவித்ததில்லையே! நானறிந்து அவள் கணவனிடமிருந்து ஓர் கடிதமோ அல்லது அவரோ வந்ததாகத்தெரியவில்லையே?"

"ஆனால் அவள் உங்கள் ஆத்மநேசி என்றீர்கள். பாபம் என்றீர்கள். எதற்காக? அவள் உங்களிடம் எதையும் சொன்னதில்லையா?"

"நான் பாபம் என்றது அவர்கள் நேர்மையான நடக்கைக்குக் கடவுள் நல்லதிருஷ்டத்தைக் கொடுக்கவில்லையே! என்றுதான். அவள் தந்தையின் பொறுமையும் தாயின் நேர்மையும் அக்குடும்பத்தில் ஒவ்வொருவரும் பெற்ற நிகரில்லாப்பொருள்கள். அதனால்தான் அவள் என் ஆத்மநேசியானாள். ஆனால் நீங்கள் இந்திராவை நன்றாய்ப் படித்துத் தொழில்செய்ய அனுமதியளித்திருக்கிறீர்களா?" என்று கேட்டாள்.

"நான் ஒன்றும் சொன்னதில்லை. என் தந்தை மனதிற்கு விரோதமாய் நடக்க இஷ்டமில்லாமல் அவளை இதுவரை பார்க்காமலிருந்தேன். இம்முறை எப்படியாகிலும் பார்த்துவிடுவதென்றிருந்தேன். அதற்குள் என் தங்கையின் புருஷன் மேல்நாட்டிலிருந்து க்ஷேமமாய் வந்ததை உத்தேசித்து இவ்வருடம் "தலை தீபாவளி" கொண்டாடப்போவதாகவும் அதற்குப் புறப்பட்டுவரவேண்டுமென்றும் என் தந்தையிடமிருந்து கடிதம் வந்தது. பிறகு என்ன நடந்ததென்று தெரியாது. இது எந்த இடம்? நான் எங்கோ புது இடத்தில் இருக்கிறேன். தாங்கள் யார்?" என்று கேட்டான்.

"நான் டாக்டர் இந்துமதி. என்னுடைய வீட்டில் நீங்கள் இருக்கிறீர்கள். இது மாம்பலம். நான் டாக்டர் ஸ்ரீதரனின் அஸிஸ்டெண்ட். உங்களுக்கு ஒரு வாரமாய் நல்ல ஜ்வரம். சுயநினைவில்லை. இன்றுதான் சரியான நினைவு வந்திருக்கிறது. உங்களுக்கு அதிக ஜ்வரமாய் இருந்தபோது கண்டபடி பேசியதால் உங்கள் நண்பர்கள் பயந்து உங்களை உங்கள் தந்தையிடம் ஒப்பித்துச் சென்றார்கள். வீட்டில்வைத்து உங்களுக்குச் சிகிச்சை செய்வது கஷ்டமாகையால் இங்கு வைத்துக்கொண்டோம். ஏதாகிலும் சாப்பிடுகிறீர்களா?"

"அதிகப் பசியாயிருக்கிறது. ஏதாகிலும் கொடுத்தால்......" என்று சொல்லும்போதே எழுந்துசென்று பிஸ்கெட்டுகளும், பழங்களும், பாலும் கொண்டுவந்து அவனை எழுப்பி உட்காரவைத்துக் கொடுத்தாள். அவன் சற்றுத் தெம்புடன் அவள் சஹாயத்தால் தலையணைகளின்மேல் சாய்ந்தவாறு தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்தான். கலைந்த கிராப்பும், வளர்ந்த தாடையும், சோர்ந்த கண்களும், வெளுத்த முகமும் அவனையே திடுக்கிடச் செய்தன.

"இந்திரா எங்கிருக்கிறாள் தெரியுமா? அவளைப் பார்க்கக்கூடுமானால்........."

"அவள் வந்துபார்க்க உங்கள் தந்தை அனுமதியளிப்பாரா? அவள் வந்தது தெரிந்தால்........."

"தெரிந்தால் என்ன மோசம். அவளைத் தருவிக்க உங்களால் முடிந்தால்........."

"முடியும்........ ஆனால்........."

"ஆனால் என்ன?"

"அவளோ என்னிடம் தன் விவாஹத்தைப் பற்றிச் சொல்லியதில்லை. அப்படி இருக்கும்போது நான் எப்படி அவளுக்கு உன் கணவர் உன்னைப் பார்க்க விரும்புகிறார் என்று எழுதுவேன்?" என்றாள் குரல் தடுமாற.

"அப்படியானால் நான் ஓர் கடிதம் எழுதித் தருகிறேன். நீங்கள் அத்துடன் நீங்கள் எழுத வேண்டியதை எழுதி அனுப்பிவிடுங்கள் பார்க்கலாம். நீங்கள் தயவுசெய்து இவ்வுபகாரத்தை........" என்று கண்ணீர் சோரவிட்டான்.

5

இரண்டு நாட்களிருக்கிறது தீபாவளிக்கு. சந்திரசேகரனை வீட்டிற்கு அழைத்துச்சென்றுவிட்டார்கள். தங்கள் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் தீபாவளிக்குவேண்டிய புடவை நகைகளை வாங்க ஹாலாஸ்யமய்யர் தம்பதிகள் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். அச்சமயம் அவர்பேருக்கு ரூபா இரண்டாயிரத்துக்கு இன்ஷ்யூரன்ஸும் ஓர் தந்தியும் கிடைத்தன.

"நீங்கள் விரும்பிய வைர மோதிரத்தை வாங்கி மாப்பிள்ளைக்கு மற்றும் வேண்டியதை வாங்கிக்கொடுத்துத் தீபாவளிக்கு அனுப்பவும்" என்று அவர் சம்பந்தியிடமிருந்து வந்திருந்தது. ஹாலாஸ்யமய்யர் முகமெல்லாம் பல்லாயிற்று. உடனே மறு தந்தி.

"என் பிள்ளை இம்முறை பிழைத்ததே புனர்ஜன்மம். என் பெண்ணிற்கும் இதைத்தான்

'முதல் தீபாவளி'யாய்க் கொண்டாடுவதால் நீங்களே உங்கள் குடும்பத்துடன் இங்குவந்து 'தீபாவளி'யைக் கொண்டாடவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்''

ஹாலாஸ்யம்.

என்று கொடுத்துவிட்டார். எல்லோரும் பண்டிகைக் குஷாலில் ஆழ்ந்திருந்தனர். சந்திரசேகரன் தன்னறையில் படுத்துக்கொண்டு இரண்டாண்டுகளுக்குமுன் இந்திரா தனக்கெழுதிய கடிதத்தைப் படித்துக் கொண்டிருக்கிறான். அவன் கண்கள் நீர் சொரிந்தன. அதை மறக்க எழுந்து வெளியில் வந்தான். போர்டிகோவில் கார் நின்றிருந்தது. ஏறி உட்கார்ந்தான். டாக்டர் இந்துமதி வீட்டிற்கு ஓட்டிச் சென்றான். அங்கு இந்துமதியின் வீடு மிகக் கலகலப்பாய் இருந்தது. ட்ராயிங்ஸ் ரூமில்போய் உட்கார்ந்துகொண்டான். உள்ளே பேசுவது இவனைத் திகைக்கச் செய்தது.

''அக்கா! அத்திம்பேர் வராராடி நிச்சயமாய்?'' என்று ஓர் குரல் கேட்டது. அது ஓர் யுவனின் குரல்.

''என்னவோ அப்பா. அப்பாவைத்தான் கேட்கணும்.''

''அய்யோ பாபம்! பச்சைக் குழந்தை. அவரை ஏமாற்றியதைப்போல் என்னை ஏமாற்ற முடியாது. நான் யாரென்று தெரியுமா?''

''தெரியுமே! அயோத்திராமன் என்று......'

அதற்குள் ''அடே ராம்! அத்திம்பேர்தான் பயங்கொள்ளி. எல்லோராலும் ஏமாற்றப்படுகிறார். அவருக்கு ஒருவரை ஏமாற்றத் தெரியவில்லை. அக்கா! நிச்சயமாய் அத்திம்பேரிடம் என்ன சொல்லப் போறேன் தெரியுமா? எங்கக்கா வயசானவ. என்னை கல்யாணம் பண்ணின்டா நாம் இருவரும் 'தலை தீபாவளியை' ஜோராய் கொண்டாடலாம் என்று. நீதான் முன்பே கேட்டையே ''எதற்காகடீ! அவரைக் கல்யாணம் செய்துக்கவா!'' என்று நினைவிருக்கிறதா?'' என்று இனிய பெண் குரல் எழும்பியது.

''அப்படித்தான் செய்துக்கோயேன். நான் ஹாரதி எடுக்கிறேன். ஆனால் அவர் யாரென்று தெரியுமா?'' என்று கேட்டுக்கொண்டே தலையில் பூவைச்சரிவர வைத்துக்கொண்டு ட்ராயிங் ரூமுக்குள் வந்தாள், வந்ததும் அப்படியே மலைத்து நின்றுவிட்டாள். இயற்கை யழகுடன் நிற்கும் அவளைப் பார்த்ததும் ''நீ....நீ....'' என்று ஏதோ சொல்ல வாயெடுக்கும்போது ''யாரது? மாப்பிள்ளையா?'' என்று கேட்டுக்கொண்டே நடேசய்யர் உள்ளே நுழைந்தார்.

''அப்பா! உங்கள் மாப்பிள்ளைதான்'' என்று சொல்லிக்கொண்டே அவள் அவ்விடம் விட்டு ஓடிவிட்டாள். சந்திரசேகரன் ''டாக்டர் இந்துமதி எங்கே சென்றார்?'' என்று கேட்டதும் எல்லோரும் கொல்லென்று நகைத்துவிட்டனர். அப்பொழுது அவனுக்குத் தான் வேறு வீட்டிற்குள் நுழைந்துவிட்டோமோ என்று திகைப்புத் தோன்றியது. தன் மாமனாரை வெறிக்கப்பார்த்தான். அதற்குள் ஓர் டம்ளரில் பாலும் ஒரு பிளேட்டில் திரட்டுப் பாலும் எடுத்துக்கொண்டு இந்துமதி அவ்விடம் வந்தாள். தந்தை எழுந்து வெளியில் சென்றார்.

எடுத்து வந்ததை மேஜையின்மேல் வைத்துவிட்டு ''என்ன செய்கிறது?'' என்று பரிதாபமாய் அவன் வெறித்த பார்வையைப் பார்த்தவாறே அவன் நெற்றியை வருடினாள். ஹிருதயத்தைத் தொட்டுப் பார்த்தாள்.

''நீ யார்? இந்திரா உனக்கு என்ன ஆகவேண்டும்?'' என்று பதைபதைப்புடன் கேட்டான். அவள் கண்களிலிருந்த கண்ணாடியைக் கழற்றி எறிந்துவிட்டு, ''என்னை மன்னிப்பீர்களா? உங்கள் தந்தை கேட்ட பணத்தைக் கொடுத்து உங்களை அழைப்பதென்ற சபதம் செய்துகொண்டு டாக்டராகிச் சம்பாதித்து...'' என்று முழுதும் சொல்லமுடியாமல் அழுதாள்.

அவன் கனவிலிருந்து விடுபட்டவன்போல் அவளை இறுக அணைத்துக்கொண்டு ''அசடே! அழுவானேன்? நடந்ததெல்லாம் நல்லதிற்குத்தான். இதோபார் இந்திரா!'' என்றான். அதே சமயம் ஹாலாஸ்யமய்யர் தம்பதிகள் இந்துமதியை அழைக்கவந்து ஆச்சரியத்திலாழ்ந்தனர்.

மறுநாள் தீபாவளிச்சீர் ஹாலாஸ்யமய்யர் தம் பெண்ணிற்குக் கொடுத்ததைவிட அதிகமாய் நடேசய்யர் தம் பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் கொடுத்திருந்தார்.

சந்திரன் இந்திராவைப் பார்த்து ''இந்திரா! இதில் என் தவறு ஏதாவது உண்டாகில் நான் அதற்குத் தக்க தண்டனை அடையவேண்டியதுதான்''.

''இதில் உங்களை யாரும் ஒன்றும் சொல்லவில்லையே! சந்திரனில் களங்கம் சஹஜம்தானே! இருங்கள், அப்பா என்னவோ சொல்கிறார் கேட்கலாம்''.

''ஏன் சார்! அவனுக்கும் அவன் தங்கைக்கும் ''முதல் தீபாவளி'' நடக்கவேண்டுமென்றிருக்கும்போது தலை தீபாவளின்னா கல்யாணமான வருஷம் எப்படி நடக்கும்? எல்லாம் பகவத் சங்கல்பம். நம்மால் ஒன்றுமில்லை'' என்று வேதாந்தம் பேசினார்.

''இந்திரா! பகவத் சங்கல்பம் முதல் தீபாவளி'' என்று கண்ணைச் சிமிட்டினான் சந்திரன்.

''எங்கோ இன்னல் பூட்டி இன்ப மூட்டி இந்திரஜால வித்தை காட்டி'' என்று சிவன் சாஹித்தியம் ரேடியோவில் ஒலித்தது.

லலிதாவின் வெற்றி

கே. சுந்தரம்மாள்

"இந்தாடி! அடியே" என்று கூப்பிட்டுக்கொண்டு கையில் ஒரு கடிதத்தைப் பிடித்த வண்ணம் சமையலறைப்பக்கம் வந்தார் நாணுவய்யர்.

"என்ன?" என்று கேட்டுக்கொண்டே (பத்தரைமணி சமயமாதலால்) சமையல் வேலை முடிந்து பெருக்கிக்கொண்டிருந்த வெண் சாமரத்துடன் காட்சியளித்தாள் ஸஹதர்மிணி குஞ்சம்மாள். "உள்ளூர்ப்படிப்பு வேப்பங்காய், பட்டணம்போனால் பிள்ளை படித்துக் கிழித்து, கனகாபிஷேகம் செய்வானென்று, ஒரு காலால் நின்று, அனுப்பிவைத்தாயல்லவா, இந்தா! கைமேல் பலன்" என்று கடிதத்தை அவள்மீது வீசியெறிந்தார்.

பிரித்துப் பார்த்தாள். அதில்,

மாமாவுக்கு அநேக நமஸ்காரம். க்ஷேமம் க்ஷேமத்திற்குக் கடிதம் எழுதவும். ராஜு மூன்று மாதகாலமாக ஜோஸப்புடன் சுற்றித் திரிந்து, பைபில் முதலியவைகளைப் படித்துக்கொண்டிருந்தான். நான் எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. கடைசியில் என்னுடன் பேசுவதையே நிறுத்திவிட்டான். அவன், வருகிற ஞாயிற்றுக்கிழமை ஞானஸ்னானம் பெறப்போவதாகக் கேள்விப்பட்டேன். நான்குநாள் ரஜா வாங்கியிருக்கிறான். ஹாஸ்டலுக்கே வரவில்லை. நீங்கள் உடனே சுந்தரேசனைக் கூட்டிக்கொண்டு வரவும். அதற்குள் நான் அவன் இருப்பிடத்தைக் கண்டு பிடித்துவிடுகிறேன். எவ்வித முயற்சி செய்தேனும், அவனை ஊருக்கு அழைத்துக்கொண்டு போய்விடவேண்டும். என் கடமை முன்னால் உங்களுக்கு அறிவித்துவிட்டேன். வேணும் அநேக நமஸ்காரம்.

உங்கள் பிரியமுள்ள,
வேணுகோபலன்.

என்று எழுதியிருந்தது. "என்ன செய்வது?" என்று கேட்பதைப்போல் அவரைக் கூர்ந்து நோக்கினாள்.

"ராஸ்கல்! ஜோஸப் இவ்விடம் சுற்றும்பொழுதே எனக்குப் பிடிக்கவில்லை. அங்கும்கூடச் சேர்ந்துவிட்டான். என்ன பிள்ளைகள் அணிப்பிள்ளை தென்னம்பிள்ளை!" என்று கூடத்து ஊஞ்சல்பலகையின்மேல் உட்கார்ந்தார்.

"ஐயரைப் பின்தொடர்ந்தே போய், சங்கிலியைப் பிடித்துக்கொண்டு "யார் கண்டார்கள் இவன் புத்தி இப்படிப் போகுமென்று? இப்பொழுது மேலே என்ன செய்வது என்பதைச் சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு ஒரு நமஸ்காரமும் செய்தாள். (ஐயரின் உக்ரமான கோபவேளையில் இந்த உபாயத்தால் தணியச் செய்வது அம்மாளின் தந்திரம்.) வழக்கப்படி உக்ரம் குறைந்தது.

"செய்வது என்ன? சுந்தரேசனுக்குத் தந்தி கொடுத்து வரச்சொல்லிவிட்டு, நானும் போய், படித்தது போதும் என்று இழுத்துக்கொண்டு வரவேண்டியதே. அம்மாவும் பிள்ளையுமாகச் சிபார்சு செய்தீர்கள். உனக்கென்ன? இப்பொழுது என்ன அவஸ்தைகள் படப்போகிறேனோ; சரி, இலையைப் போடு, சாப்பிட்டுவிட்டுத் தந்தி கொடுக்க ஐந்து மைல் போகவேண்டும்; அதனால் ரயிலேறும்பொழுதே தந்தி கொடுக்கிறேன்" என்று சாப்பிட எழுந்தார்.

"நானும் வரட்டுமா?"

'போதுமே உன் உபகாரம். நீயும் வந்தால் இந்தச் "சாணூர்முழவம்பில்" வீண் கதைகளெல்லாம் கிளம்பிவிடும்; நீ இங்கேயே இரு; உன்னுடைய தாயார் பாட்டிகளிடம் குறை சொல்லிக்கொள்ளாமல், கம் என இரு, காரியத்தை ஒருவிதமாக முடித்துவருமட்டும்."

ஸ்ரீபுரமென்பது தென் ஆற்காட்டு ஜில்லாவிலே ஒரு சிறிய கிராமம். பிராமணத்தெரு ஒன்று. குடியானவர் தெரு இரண்டு. அக்கிரஹாரம் இருபுறமும் வாசற்பக்கம், கொல்லம் ஒரு சார்பு. இந்தக் கோடியிலிருந்து, அந்தக் கடைசிவரை ஒரே அளவாக நூல்பிடித்தாற் போல் இருக்கும். அக்கிரஹாரத்துக் கடைசியில், கிழக்குப் பார்த்து, (அக்ரஹாரம் தெற்கு வடக்கு) மாடி காம்பவுண்டுச் சுவருடன் பங்களா பாட்டனாக உள்ளது, நாணுவய்யரின் வீடு. அந்த ஊரில், அந்த வீடுதான் மாடியுடையது ஆனபடியினால் அவருக்கு மாடி வீட்டு நாணுவய்யர்" என்ற பட்டப்பெயர். "மொத்தத்திலேயே மாடிவீட்டார்" என்பது அடையாளம்.

மாடிவீட்டு நாணுவய்யர் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்களில் ஒருவர். பிதிரார்ஜிதமான முப்பது வேலி நிலத்தையும், தமது டம்

பச்செயலில் ஊதிவிட்டு அரைவேலி நிலமும், ஒரு வீடும் மீதியாகும் சமயம், நாணுவய்யர் எஸ். எஸ். எல். ஸி. படித்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயம், அவரது தகப்பனார், நாணுவய்யர், அவரது பத்து வயது தங்கை, மனைவி, இவர்களை நிராதரவாகவிட்டுக் காலம்சென்றுவிட்டார். தாயார் தன்னுடைய தைரியத்தினாலும், பிறந்தகத்துச் சிற்றுதவியினாலும், பல கஷ்டங்களுடன் பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுத்து இவரையும் பி. ஏ. வரை படிக்கவைத்து, எண்பது ரூபாய் சர்க்கார் உத்யோகம் கிடைக்கும்வரை காப்பாற்றினாள். உத்யோகம் ஏற்றபிறகு, குஞ்சம்மாவை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார்.

"நாணு, நீ எப்படியாவது பாடுபட்டு இழந்துபோன நிலங்களை, மறுபடியும் வாங்கவேண்டும். அப்பொழுதுதான் என் குறை நீங்கும்" என்று கேட்டுக்கொண்டாள் தாயார்.

ஐயர் உண்மையாக உழைத்துப் படிப்படியாக உயர்ந்து, நானூறுரூபாய் சம்பளம் வாங்கும்பொழுது, பத்துவேலி, பூர்வார்ஜிதமான நிலம் திரும்பப்பெற்றதையும், இருபேரன்களையும் கண்டு களித்து, பரமனடி சேர்ந்துவிட்டாள் தாயார்.

நாணுவய்யர் தம்பொருட்டுத் தம் தாயார் கஷ்டப்பட்டதை நினைத்து, வாங்கும் சம்பளத்தை அப்படியே அவள் கையில் கொடுத்துவிடுவார். அவள் சொன்னபடியே நடப்பார். ஆனால் முன்கோபம் "அவரது வம்ச குணம்." அதனால், தாயார், மனைவி, இருவரையும் மிகக் கடிந்துகொண்டுவிடுவார். மாமியாருடைய செட்டுக் குடித்தனம். புருஷனுடைய முன்கோபம், இவைகளினால் கஷ்டப்பட்டாள் குஞ்சம்மாள். சகிப்புத் தன்மை பிறவிக் குணமாதலால் அவள் அடக்கமாகவே நடந்து வருவாள். "கோபமுள்ளவிடத்தில் குணம்" என்பதுபோல் அவர் கடிந்துகொண்டாலும், குஞ்சம்மாளிடம் அத்யந்த அன்புகொண்டவர். ஆனால் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ள மாட்டார். மனைவியைக் கேட்காமல் ஒரு காரியமும் செய்யமாட்டார். அவரைச் சேர்ந்தவர்கள்கூடத் தங்கள் காரியம் ஆகவேண்டுமானால், குஞ்சம்மாளிடமே சொல்லுவார்கள்.

இன்றும், அவர் கோபத்தில் திட்டுவது நிற்கவில்லை. சில சமயம் அவர் திட்டும்பொழுது, பண்ணையாளைத் திட்டுகிறாரா? மனைவியைத் திட்டுகிறாரா? என்பதை நிர்ணயிக்க முடியாது.

இவர் பென்ஷன் பெற்று, தற்சமயம் நான்கு வருஷம் ஆய்விட்டது. இப்போது, ஐயர், "அடியே" கூப்பிடும் தொனியால், கோபம் எவ்வளவு டிகிரி என்பதும், சந்தோஷம் எத்தனை என்பதும் அம்மாளுக்குத் தெரிந்துவிடும். உத்யோகம்ஏற்றுக் கொஞ்சம் வருஷம் குழந்தை பிறக்காததினால், அதிவிரைவாக லக்ஷ்மி தேவி அவரை ஆச்ரயித்தாள். பெண் கிடையாது. பென்ஷன் வாங்கியதும், மாதுர் வாக்ய பரிபாலனமாகக் கிராமத்தில், பங்களா கட்டிக்கொண்டு சுக காலக்ஷேபம் செய்து வந்தார். பிச்சைச் சாம்பானுடைய உதவியைக்கொண்டு இழந்த நிலம் எல்லாவற்றையும் மீட்டுக்கொண்டார். இவர் கிராமத்திற்கு வந்த பின்பு அநேக ஸௌகர்யங்கள் ஏற்படுத்தினார். முக்யமாகக் குடி தண்ணீர் வசதி, மின்சார விளக்கு, வாசகசாலை, கோயில் திருப்பணி எல்லாம் உண்டாயின. "நல்ல உபகாரி" என்று யாவரும் போற்றுவார்கள்.

தகப்பனாரும், சென்னை சென்று, வேணுவின் உதவியினால் ராஜுவின் இருப்பிடத்தைக்கண்டுபிடித்து, கூப்பிட்டனுப்பினார்கள். வரமுடியாது என்று உள்ளிருந்தவாறே சொல்லிவிட்டான். தகப்பனும் ராஜுவும் என்ன செய்வது என்பதைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டு, வாசலிலுள்ள வேப்பமரத்தடியில் உட்கார்ந்திருந்தார்கள்.

இவர்கள் போய்விட்டார்களா என்று பார்ப்பதற்காக ராஜு வெளியில் வந்தான். அச்சமயம், "ராஜு யார்?" என்று கேட்டுக்கொண்டே தந்திச் சேவகன் உள் நுழைந்தான். "நான்தான்" என்று சொல்லிக்கொண்டே கையெழுத்திட்டு, தந்தியை வாங்கிப் பிரித்தான். அதற்குள் வேப்பமரத்தடியில் உட்கார்ந்திருந்தவர்களும் அவனிடம் வந்தார்கள்.

"அம்மா ஆபத்தான நிலைமையில் இருக்கிறாள்; உடனே வரவும்; அப்பா அண்ணாவுக்கும் தெரியப்படுத்து.

சங்கரய்யர்."

என்றிருந்தது தந்தி. படித்ததும் தன்னையறியாமலே கண்களில் நீர் தளும்பிவிட்டது ராஜுவிற்கு அன்னையின் அன்பு அனைத்தையும் வென்றது. இவன் கையிலிருந்த தந்தியைவாங்கிப்பார்த்தார் நாணுவய்யர்.

"ஐயோ உடனே புறப்படு, அட பாபி, அவளுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்றிவிட்டு நீ எக்கேடும் கெட்டுப்போ, அவள் வந்தாள். எல்லாம் பொங்கின. அவள் போகுங்காலம் இந்த விபரீதம்" என்று தலையில் படார் படார் என்று நாலு அடி அடித்துக்கொண்டார். இவையெல்லாம் ராஜுவின் மனதைக் கலங்கச் செய்துவிட்டன. தாயாரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் தலையெடுத்தது. "அண்ணா நானும் வருகிறேன்" என்றான் உணர்வில்லாமல்.

ஸ்டேஷனுக்கு வண்டிகொண்டுவந்த சங்கரய்யர் "அம்மாவுக்கு உடம்பு தேவலை" என்ற தகவல் சொன்னார். வீடு வந்ததும், ஓடிப்

போய் படுத்துக்கொண்டிருக்கும் தாயாரிடம் சென்று பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். மைந்தனின் தலையைத் தடவிக்கொண்டே "ராஜு! நான் உள்ளமட்டும் ஓரிடமும் போகாதே, என்மேல் ஆணையிடு" என்றாள்.

"கண்ணீர் நிறைந்த அன்னையின் அன்பான முகமும், சொல்லும் அவனைத் தடுமாறச்செய்தன. சிந்தனைக்கு இடமில்லை. இளகின ஹ்ருதயம், பண்படுத்தப்பட்டது. "அம்மா நீ சொன்னபடி நடக்கிறேன். ஆனால், என்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி சொல்லக் கூடாது. நீ உள்ள வரையில் நான் ஓரிடமும் போகவில்லை. பிறகு பாதிரியாகத்தான்போவேன். இன்னொரு விஷயம். இன்றையிலிருந்து நான் உப்புச்சேர்க்காமல் இருப்பேன், இதற்கு நீ சம்மதிக்கவேண்டும்" என்றான்,

"முள்ளில் சேலையைப்போட்டால், எடுக்கும் விதமாகத்தானே எடுக்கவேண்டும்" என்று நினைத்து அதற்கு ஒப்புக்கொண்டாள்.

"தான் வந்ததினால்தான் தாயார் உடம்பு குணமாயிற்று" என்று" ராஜு சந்தோஷப்பட்டான். (தாயார் உடம்பதிகம் என்று முன்னேற்பாட்டின்படி தந்தியடிக்கப்பட்டது', என்பது ராஜுவுக்கு எப்படித்தெரியும்)

சுந்தரேசன் ஊருக்குச் சென்றுவிட்டான். தகப்பனார் இவனோடு அதிகம் பேசுவது கிடையாது. இவன் எப்பொழுதும் மாடியிலேயே இருப்பான். தாயன்பானது, உப்பில்லாத எந்தப் பதார்த்தங்கள் செய்யமுடியுமோ அவைகளைச்செய்யும்படி செய்தது. தித்திப்புப் பக்ஷணம், பழவகைகள் எல்லாம் கொடுப்பாள். அய்யர் இவையொன்றையும் கவனிக்க மாட்டார். ராஜு, "தாயைத்தவிர வேறு ஸ்திரீகளைப் பார்ப்பதில்லை" என்ற சபதம் ஏற்படுத்திக்கொண்டான். தப்பித்தவறி ஆற்றுப்பக்கத்தில் யாராவது ஸ்த்ரீகளைக் கண்டுவிட்டால் முகத்தை மூடிக்கொள்ளுவான். நாளடைவில் இவன் செய்திகள் ஊரில் பரவிவிட்டன. எவ்வளவு மூடிவைத்தாலும், சங்கரய்யர் (காரியஸ்தர்) மனைவிக்கும்? மோர், காய்கறி வாங்கிப்போகும் பாட்டிமார்களுக்கும் தெரியாமலிருக்கமுடியுமா? ஆக ஊரில் மறைமுகமாக ராஜுவுக்கு "உப்பில்லாப்பைத்தியம்" என்ற நாமகரணம் சூட்டினார்கள்.

இவன் ஸதா மாடியிலேயே இருந்து, கிறிஸ்தவ மதஸம்பந்தமான புஸ்தகங்களையே படித்துக்கொண்டிருப்பான். இரவில் இவன் ஓடிவிடாதபடி, அவனறியமுடியாதபடி காவல்களும் பூட்டுக்களும் உண்டு. இவ்விதமாக ஒருமாதம் சென்றது.

காலை பத்துமணி. குஞ்சம்மாள் சமையலறையில் வேலையாக இருந்தாள்.

"அடியே இந்தா!" என்றார் நாணுவய்யர்.

கூப்பிட்டதோரணை கோபந்தான்; ஆனால் கடுமையில்லை என்றதைரியத்தினால், "என்ன?" என்று வெளியில் வந்தாள்.

"இந்த எழவுக்கென்ன செய்வது?" என்று கடிதத்தைக் கையில் கொடுத்தார்.

கடிதத்தைப் படித்துவிட்டு, "கமலம், பெண்ணுக்குக் கல்யாணம்பண்ண லீவு எடுத்துக்கொண்டு, இவ்வூருக்கு வருகிறேன் என்று எழுதியிருக்கிறாள்; வரட்டுமே?" என்றாள்.

"வரட்டுமா? உன் பிள்ளையாண்டான் வள்ளல் அவர்களுக்குத்தெரியாது. நம்முடைய முன்பேச்சுப்படி, ராஜுவிற்கு லலிதத்தைக் கல்யாணம் செய்துகொடுப்பதற்காக வருகிறார்கள். பெண்ணுக்கு வீணை வேறு சொல்லிக்கொடுக்க வேண்டுமாம். பிள்ளையாண்டான் பெண்கள் முகத்தில் விழிக்கமாட்டான், அந்தப் பெண்ணை, அங்கே நில்லாதே, இங்கே போகாதே என்று சொல்ல முடியுமா? கல்கத்தாவில் வளர்ந்தவள், படித்தவள். சமமாகப் பழகும் தன்மையும், கட்டுப்பாடில்லாமலும் வளர்ந்த பெண். இவன் ஏதாவது சொன்னால் ரசாபாசமாகிவிடும். நான் இவ்விடம் வர வேண்டாம் என்று விஷயத்தைச் சுருக்கமாக எழுதிவிடுகிறேன்" என்றார்.

"கொஞ்சம் யோசித்துச் செய்யுங்கள். அவர்கள் வரட்டும். பிறகு ஸௌகரியமில்லாவிட்டால் பார்ப்போம். ஒரு சமயம் அந்தப் பெண்ணைப் பார்த்தால், இவன் மனம் சற்று மாறலாகாதா? 'வருகிறோம்' என்று சொல்லுபவர்களை 'வேண்டாம்' என்று சொல்லவேண்டாம். நாமும் அவர்களைப் பார்த்து எட்டு வருஷங்கள் ஆகின்றன" என்றாள். மறுநாள் பிள்ளையிடம் அவர்கள் வரும் விஷயத்தைச் சொன்னாள். "அத்தை வருவதைப்பற்றி சந்தோஷமே. ஆனால் அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள் என்று சொல்லக் கூடாது. நான் இருக்குமிடம் அந்தப் பெண் வரவும் கூடாது" என்றான்.

மூன்றாவது நாள் காலை ராஜு பல்தேய்த்துவிட்டு மாடியில் ஏறும்பொழுது வாசலில் வண்டி வந்து நின்றது. அதிலிருந்து, அத்தை, அவள் புருஷன் சுப்பய்யர். பெண் லலிதா மூவரும் இறங்கினார்கள். பார்த்தும் பார்க்காததுபோல் மாடிக்குச் சென்றுவிட்டான்.

எல்லோரும் கூடத்தில் ஊர்ச்சமாசாரங்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அக்கம் பக்கம் உள்ள பெரியவர்கள் பார்க்கவந்தார்கள். லலிதா பின்பக்கம் முற்றத்தில் பல் விளக்கிக்கொண்டிருந்தாள். ராஜு பின்பக்கம் வராந்தாவில் உலாவிக்கொண்டிருந்தான். (அவ்விடமிருந்தால், வயல்கள்தான் தெரியும். ஸ்திரீகள்

நடமாட்டம் இருக்காது. அதனால் அவன் அங்கு உலாவுவது வழக்கம்) அச்சமயம், இவன் முற்றத்தின் சுழிவழியாகக் கீழே பார்த்தான். அவள் முகத்தைத் துடைத்துக்கொண்டே நிமிர்ந்தாள். இருவர் கண்களும் சந்தித்துவிட்டன. ராஜு தீயை மிதித்தவன்போல் சட்டென உள்ளே ஓடிவிட்டான். லலிதா திகைத்துவிட்டாள். இப்பொழுது பரீக்ஷை சமயமல்லவோ, இங்கு எப்படி வந்தான்? என்று எண்ணமிட்டாள். பிறரைக் கேட்கவும் சங்கோசமாக இருந்தது. பேசாமலிருந்துவிட்டாள்.

எல்லோரும் பேசி முடிந்து காப்பி சாப்பிட்டானதும், தங்கையையும் மாப்பிள்ளையையும் தனியே அழைத்துச்சென்று, ராஜுவின் விஷயங்களைச் சொன்னார். பிறகு, "சுப்பய்யர் நானே உனக்கு நல்ல வரனாகப் பார்த்துத்தருகிறேன். தஞ்சாவூரிலிருந்து ஓர் வீணை உபாத்தியாயாரை வருத்தி நமதுவீடுகளில் ஒன்றில் குடியிருக்கச்செய்து, முப்பது ரூபா சம்பளம் கொடுத்தோமானால் நன்றாகச் சொல்லிக்கொடுப்பார். காய்கறி, பால், நெல்லு இவைகள் கொடுப்பது நமக்குப் பெரிதல்ல" என்றார்.

தம்பதிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அவர்கள் தனியே பேசிக்கொள்ளட்டுமென நினைத்து நாணுவய்யர் வெளியே சென்றுவிட்டார். இவர்களின் சம்பாஷணையைப் பக்கத்தில் நின்று மறைவாகக் கேட்டுக்கொண்டிருந்த லலிதா மாமா வெளியிற்போனதும் அவர்களிருக்குமிடம் வந்தாள்.

"என்னடி! கிணறுவெட்டப் பூதம் கிளம்புகிறது? நாம் நினைத்து வந்தது என்ன? இப்பொழுது என்ன செய்வது? நாம் நாளையே திருநெல்வேலிக்குப் போய்விடுவோம். வீணை, கல்யாணம் எல்லாம் அவ்விடம் பார்த்துக்கொள்ளலாம்" என்றார்.

ஐயரின் தங்கையாதலால் முன் கோபமும், படபடப்பும் முன்நின்றன. "இந்தப்பெண்ணை பாழுங்கிணற்றில் தள்ளினாலும் தள்ளுவேன், உங்கள் ராமுவுக்குக் கொடுக்கமாட்டேன். உங்கள் ஊருக்கும், இந்தப்பெண்ணைக் கூட்டிக்கொண்டு வரமாட்டேன். என்னைப் பிச்சுத்தின்றுவிடுவார்கள்" என்றாள்.

இவள் எவ்வளவு கோபக்காரியோ, அவர் அவ்வளவு சாந்தம். "ஏன் அவசரப்பட்டுப் பேசுகிறாய்? உன் அண்ணாவே சொல்லவில்லையா?"

தாய் தந்தை வாக்குவாதத்தைக் கேட்ட லலிதா "அப்பா! நான் அம்மாஞ்சியைத்தான் கல்யாணம் செய்துகொள்ளுவேன். அது இல்லையானால் வைத்தியக் கல்லூரியில் சேரப்போகிறேனே தவிர, வேறு யாரையும் கல்யாணம் செய்துகொள்ளமாட்டேன். மனத்தில் வேரூன்றிய எண்ணத்தை மாற்றமுடியாது. நாம் இங்கேயே இருப்போம். கூடிய வரை அவரைத் திருப்பப் பிரயாசைப்படுகிறேன்"

"உன் மாமா சொல்வதிலிருந்து அவன் குரங்குப்பிடியாக இருப்பதாகவன்றோ தெரிகிறது; நீ என்ன செய்யமுடியும்?" என்றார்.

"எல்லாம் போகப்போகப் பார்ப்போமே" என்றாள் லலிதம்.

"மகளே உன் சமர்த்து" என்றார் தந்தை.

கமலம் மதனியிடம் வந்து விபரங்களைச் சொல்லி, தன் மகள் தீர்மானத்தையும் சொன்னாள்.

"உன் அண்ணா வழக்கப்படி, இங்கு வர வழைக்கக்கூடாது' என்று கூப்பாடு போட்டார். நான் நல்ல வார்த்தை சொல்லித் திருப்பினேன். கமலம்! குழந்தை வளைய வருவதை அடிக்கடிப் பார்ப்பதினால் அவன் மனம் ஒரு சமயம் மாறாதா? ரிஷிகளெல்லாங்கூட" என்று சொல்லும்பொழுதே இருவரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள்.

"என்னம்மா சிரிக்கிறீர்கள்" என்று கேட்டுக்கொண்டே அவ்விடம் வந்தாள் லலிதா.

"எல்லாம் உன் விஷயம்தான். மாமிக்கு நீ நாட்டுப்பெண்ணாக வந்துவிட்டால் கவலையில்லையாம்" என்றாள் கமலம்.

"லலிதா உன் இஷ்டப்படி நீ நடந்துகொள். எனக்காகப் பயப்படாதே. ஆனால் கிராமாந்தரம், இவ்வூர்க்காரர்களிடம் மாத்திரம் ஜாக்கிரதையாக நடந்துகொள்" என்றாள் குஞ்சம்மா.

லலிதா தலைகுனிந்தபடி சிரித்துக்கொண்டாள்.

மாடியறைக்குள் சென்ற ராஜு நாற்காலியில் உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தை எடுத்துப் படிக்கலானான். ஆனால் அவன்மனம் அதில் செல்லவில்லை. அவள் பார்வை கண்முன் நின்றது. "அப்பா! எப்படி வளர்ந்திருக்கிறாள். நாம் அப்பொழுது பார்க்கும்பொழுது ஏழு வயதுச் சிறுமியாகக் குறும்புப் பார்வையுடன் கள்ளங்கபடில்லாமல் விளையாடினாள். (எட்டு வருஷங்களுக்குமுன் சுப்பய்யர் வைத்தியத்திற்காகச் சென்னை வந்து மூன்றுமாதம் நாணுவய்யர் வீட்டில் தங்கியிருந்தார்கள். அந்தச்சமயம், லலிதாவும் ராஜுவும் விளையாடினது ஞாபகம் வந்தது) இப்பொழுது பார்வையே மாறிவிட்டதே" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். பிறகு, "சே, மனம் தளரக்கூடாது. இதென்ன பிரமை?" என்று புஸ்தகத்தைப் படிக்கலானான். ஆனால் மனம் கண்டிப்பாக அதில் செல்ல மறுத்துவிட்டது. எழுந்து குறுக்கும்

நெடுக்குமாக உலாவினுன். அந்தச்சமயம் கமலமும் சுப்பய்யரும் மாடிக்கு வந்தார்கள்.

மருமகனை க்ஷேமம் விசாரித்துப் பலவித மாகப் பேசிப்பார்த்தார்கள்; "உம்" என்ற பதில்தான் கிடைத்தது கடைசியில்.

"ராஜு! லலிதாவை உனக்குக் கல்யாணம் செய்துகொடுக்கத்தான் இவ்விடம் வந்தேன். உனக்குச் சம்மதந்தானே?" என்ருள்.

"அத்தை! நான் வீணுக உலக மாயையில் விழப்போவதில்லை. நான் பாதிரியாராகப் போகிறேன். உன் பெண்ணுக்கு வேறு வரன் கிடைப்பான்; இதுதான் என் முடிவு" என்று கண்டிப்பான குரலில் சொன்னுன். பிறகு எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் பதிலே பேசவில்லை. இருவரும் கீழே இறங்கி வந்து விட்டார்கள்.

பழையபடி நாற்காலியில் உட்கார்ந்து படிக்கத் தொடங்கினுன். மனப் போராட்டம். கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பின்னுல் நின்றுகொண்டு "அம்மாஞ்சி!" என்ருள் லலிதா.

திடுக்கிட்டு நாற்காலிவிட்டு எழுந்து திரும்பிப் பார்த்தான். சட்டெனச் சுவர்ப்புறம் திரும்பி நின்றுகொண்டு உனக்கு என்னவேண்டும்?" என்ருன்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம், தங்களுக்கு இப்பொழுது பரீக்ஷையல்லவா? பரீக்ஷைக்குப் படிப்பதற்காக இவ்வூருக்கு வந்திருக்கிறீர்களா? என்று கேட்க வந்தேன்" என்ருள் குறும்பான சிரிப்புடன்.

"எனக்குப்பரீக்ஷையைப்பற்றிக் கவலையில்லை. விஷயம் உனக்குத் தெரிந்திருக்கலாம். நான் பாதிரியாராகப் போகிறேன். ஸ்திரீகள் முகத்தில் விழிப்பதில்லை என்பது என் சபதம். அதனுல் தயவுசெய்து நான் இருக்கும் இடத்திற்கு நீ வரக்கூடாது" என்ருன்.

"ஓகோ! அதுதான் சுவரைப்பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களோ? சரிதான். நீங்கள் தானே விழிப்பதில்லை. நான் விழிக்கலாமல்லவா" என்று அவன் முகத்தின் எதிரே வந்தாள்.

அவன் சட்டென மறுபக்கம் திரும்பினுன். நேரே நிலைக்கண்ணுடி இருந்தது. அதில் அவள் பிம்பம் தெரிந்தது. தலையைக் குனிந்து கொண்டே "அப்பொழுதுபோலவே இப்பொழுதும் விளையாடுகிருயே. நீ இப்பொழுது பருவமடைந்த பெண்ணல்லவா? இது பிசகு" என்ருன்.

கண்ணுடியில் அவன் முகம் கலவரமடைந்திருப்பது தெரிந்தது. "சரி, நான் உங்கள் முகத்தைப் பார்த்தாய்விட்டது. நீங்களும் என்னைப் பார்த்தாய்விட்டது என்று நினைக்கிறேன்" என்று சிரித்தாள்.

"லலிதா! நான் சொல்வதைக் கேள். இனி இவ்விடம் வராதே. நீ கல்யாணம் செய்து கொண்டு சுகமாக இரு. நான் உன்னை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன்" என்ருன்.

'நிரம்ப ஸந்தோஷம். இப்பொழுது நேரமாய் விட்டது. குளிக்கப்போகிறேன். மத்யானம் சாவகாசமாய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கீழே சென்ருள்.

"நீ வரவேண்டாம்" என்ருன்.

"வருவேன்" என்ருள்.

பிறகு அன்றைக்கு அவ்விடம் வரவில்லை. இயற்கையான பெண்மையின் சங்கோசம், பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று தடுத்து விட்டது.

மாடியில், ஒரு பெரியநீண்ட ஹாலும், அதில் இருபக்கமும் இரண்டு அறைகளுமுண்டு. முன்பக்கம் ஒரு சிறிய வராந்தா. பின்பக்கம் பெரிய வராந்தா. முன்பக்கம், பின்பக்கம் இரண்டிடங்களிலும் படிகளுண்டு.

மறுநாள் காலை ராஜு அறைக்கு எதிர் அறையில் வேலையாள் சாமான்களைக் கொண்டு வைத்தான்; சற்று நேரத்திற்கெல்லாம், அந்த அறையின் வாசற்படியருகில் உட்கார்ந்து, லலிதா, பிடில் வாசிக்கத்தொடங்கினுள்.

ராஜு வெளியே வந்து பார்த்துவிட்டு, "லலிதம், கீழே உனக்குப் பாட இடமில்லையா? இங்கே ஏன் வந்தாய்?" என்ருன்.

"கீழே இடமிருக்கிறது. ஆனுல் உங்கள் ஊர் வானரப்பெண்கள் நான் வாசிக்கும்பொழுதே சுருதியைக் கலைத்துவிடுகிருர்கள். அம்மாமி பாட்டிமார்கள், 'நளிதே! பாடு; கேட்போம்' என்கிருர்கள். பாடினுல் எனக்குமேல் சத்தம் போட்டு ஊர்வம்பு பேசுகிருர்கள். எனக்குப் பாடமுடியவில்லை. அதனுல் இங்கேதான் வாசிப்பேன். ஒருவரும் இவ்விடம் வரமாட்டார்கள். இதுதான் என் ஸௌகரியம். என்னை ஏன் கஷ்டப்படுத்துகிறீர்கள்?

"சங்கீதத்தை வெறுப்பவர்கள் உண்டா? இது என்ன கஷ்டம் உங்களுக்கு? நீங்கள் இப்பொழுது எட்டிப்பிடிக்கும் பரலோக சாம்ராஜ்யத்தை, "தியாகராஜர்" சங்கீதத்தினுலேயே அடைந்தார். நாளைமுதல் வீணை உபாத்தியாயர் வரப்போகிருர். இவ்விடத்தில்தான் சொல்லிக் கொள்ளப்போகிறேன்."

"வீணை உபாத்தியாயரா? இவ்வூரில் ஏது?"

"நாளை உங்கள் ஊரில் அவர் குடும்பம் பிரதிஷ்டை ஆகப்போகிறது" என்று சிரித்தாள்.

"அவன் தன்னையறியாமல் வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டான். அதற்குமேல் அவளிடம் வாதம்பண்ணத் தோன்றவில்லை. அப்படியே அவன் அவ்வறை வாசற்படியில் உட்கார்ந்தான்.

கொஞ்சநேரம் ஸிதாரில், ஹிந்திப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டே வாசித்தாள். சாரீரம் ஜிலுஜிலுவென்று ஸுகமாக இருந்தது. விரல்கள் வேகமாகத் தந்தியை வருடின. தந்தியின் நாதமும், அவள் சாரீரத்தின் இனிமையும் ஒன்றாய் இசைந்தன. ராஜுவுக்கு ஸங்கீதத்தில் பற்றுஉண்டு. தாளக்கட்டும் அறிவான். அதனால் அதை ஆவலுடன் அனுபவித்தான். பிறகு ஸிதாரை வைத்துவிட்டு, பிடிலைஎடுத்து, அடாணா ராகத்தை ஆலாபனைசெய்து, "நீ இரங்காயெனில்" என்ற கீர்த்தனத்தைப் பாடி முடித்தாள். ராஜு மனத்திற்குள் சிரித்துக் கொண்டான்.

பாட்டு முடிந்ததும், "என் பாட்டு எப்படி?" என்றாள்.

"அற்புதமான சாரீரம். அபூர்வமாகப் பாடுகிறாய். ஸ்வர சுத்தமாகவும் தாளக்கட்டுடனும் இருக்கிறது" என்றான். அப்பொழுது அந்த மட்டோடு கீழே வந்துவிட்டாள்.

இரவு பத்துமணி. எல்லோரும் நித்ரா-தேவியின் வசமானார்கள். மாடியில் ராஜுவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. புஸ்தகத்திலும் மனம் செல்லவில்லை. லலிதாவின் ஞாபகமே அடிக்கடி வருகிறது. "ஏது! இந்தப்பெண் நம்மை இப்படி ஆட்டிவைக்கிறாள். அவளைக் கடிந்து பேசவும் மனம் வரமாட்டேனென்கிறதே. சீ, இப்படி மனத்தை அலையவிடக்கூடாது. நாளை முதல் அவளைப் பார்க்கக்கூடாது" என்று எண்ணமிட்டவாறே ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தான். வாசற்பக்கம் வராந்தாவின் ஜன்னல் பக்கம், வளைச்சத்தம் கேட்டது. திரும்பிப்பார்த்தான், ஜன்னலண்டை மறுபுறத்தில், நாற்காலியில் லலிதா உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

"இந்த வேளையில் இங்கு ஏன் வந்தாய்? பயமாக இல்லையா?"

"என்ன பயம்? தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டுகொண்டிருந்தேன். அம்மா முதலியவர்கள் கும்பகர்ணப் படலம் வாசிக்கிறார்கள். வந்தால் பொழுதுபோகும் என்று வந்தேன். தாங்கள் கூட்டிலடைக்கப்பட்ட ஆண் சிங்கம்போல் உலாவுவதைப் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்று விஷமச்சிரிப்புடன் சொன்னாள்.

"ஏன் தூக்கம் வரவில்லை?"

"நீங்கள் ஏன் தூங்கவில்லை?"

தான் தூங்காத விஷயத்தை அவளிடம் எப்படிச் சொல்லுவது?-"நான் அநேக நாள் இப்படி ஆராய்ச்சி செய்வது வழக்கம்" என்றான்.

"நானும் அப்படியே" என்றாள்.

"இப்படி வந்து இந்த வேளையில் இங்கு உட்காரவந்தாயானால் இந்தத் தெரு முழுவதும் தெரியும். நாளை எல்லோரும் வம்பு பேசுவார்கள். உன்னை மணக்க வருபவனும் ஏதாகிலும் சொல்லுவான்."

"அந்தக் கவலை உங்களுக்கு ஏன்? என் பெயரை நானன்றோ காப்பாற்றிக்கொள்ள வேண்டும். என் கற்பிற்கு நான் ஜவாப்தாரி; உலகத்தை வெறுத்த உங்களிடம், மஹானாகிய, பாதிரியாராகிய உங்களிடம் பேசுவது தப்பென்று சொன்னால், அவன் என்ன மனிதன். அவனைக் கட்டிக்கொண்டுதான் என்ன பண்ணுவது?"

இவ்வார்த்தைக்குப் பதில் பேசத் தெரியவில்லை. "சரி உனக்குப் பாதகமில்லை. வீணாக என் விரதத்தைப் பாழ்பண்ணாதே."

"உங்கள் விரதத்திற்கு என்ன பங்கம்? நாளைக்குப் பாதிரியாராக வந்தால் ஒரு ஸ்திரீயானாலும், பல ஸ்திரீயானாலும், உபதேசம், பிரசங்கம், எல்லாம் செய்யவேண்டுமே. ஸ்திரீகளைப் பார்க்காமல் எப்படி முடியும்? உலகமே ஸ்த்ரீகளினாலன்றோ? உங்கள் இயேசுநாதர் கூட ஆகாயத்திலிருந்து குதிக்கவில்லையே. கன்னி மரியாளிடத்தில்தானே பிறந்தார். அவர் மதத்தைக் கடைப்பிடிக்கும் தாங்கள் இப்படி ஸ்த்ரீகளை வெறுத்தால் என்ன அர்த்தம்? எல்லோரையும் சமமாகப் பார்க்கவேண்டும். முதலில் என்னிடம் தாராளமாகப் பேசிப் பழகுங்கள். பிறகு உங்கள் ஊர் வாயாடிப் பெண்களையெல்லாம் கூட்டிவருகிறேன். பிரசங்கம் செய்யுங்கள். பின்னால் உங்களுக்குச் சாதகமாக இருக்கும்."

"அப்பா! உனக்கு என்ன தைரியம்? என்ன சாதுர்யமான பேச்சு" என்று சொல்லிக் கொண்டே ஜன்னலுக்கடுத்துள்ள நாற்காலியில் அவள் எதிரிலியே உட்கார்ந்துகொண்டான்.

"தைரியமில்லாமல் போனால் எப்படிப் பிழைப்பது. அது போகட்டும்; நான் உங்களிடம் ஒன்று கேட்கவே இவ்விடம் வந்தேன். நாளைமுதல் நீங்கள் எனக்கு ஸம்ஸ்கிருதகீதையைப் பாடம் சொல்லவேண்டும். எனக்கு ரொம்பநாளாக அதைப் படிக்கவேண்டுமென்ற ஆவல் உண்டு. அப்பாவோ தமிழ்ப் புலவர். நீங்கள் பிரைஸ்கூட வாங்கியிருக்கிறீர்களாம். உங்களிடமே சொல்லிக்கொள்ளும்படி சொன்னார். நீங்கள் குரு, நான் சிஷ்யை. பாதிரியாரே என்ன சொல்லுகிறீர்?" என்றாள்.

"என்ன செய்வான் பாவம். மாட்டேனென்றால் நீ எப்படிப் பாதிரியாகப் போகிறாய்? என்று கேலிபண்ணுவாள். ஒப்புக்கொண்டால் மனம் இன்னும் சிதறும். அவள் செய்யும் கிண்டலைவிட மனத்தை எப்படியாவது கட்டுப் படுத்தலாம்" என்று நினைத்துச் சரியென ஒத்துக்கொண்டான்.

அத்துடன் அன்று தூங்கச்சென்றுவிட்டாள்.

மறுநாள் காலை ஸ்னானம் செய்து காபி சாப்பிட்டானதும், கீதையுடன் மாடிக்கு வந்தாள். ஒரு மேஜையின் எதிரெதிராக உட்கார்ந்து படித்தார்கள். சாப்பிடும்வரை சுலோகமும் அர்த்தமும் கேட்டுவிட்டு வந்தாள்.

சாப்பாடு ஆனவுடன் சதுரங்கக்காய், கட்டத்துடன் ராஜு இருக்குமிடம் வந்தாள்.

"இது என்ன?"

"சதுரங்கம். உங்களுக்கு விளையாடத் தெரியுமல்லவா?" என்றாள்.

"தெரியும், ஆனால் உன்னுடன் விளையாட முடியாது. கீழே ஒருவருமில்லையா?"

"வாசலில், அப்பா, மாமா, முதலிய ஒரு பெரிய கோஷ்டி சீட்டுக் கச்சேரி. கூஜா கூஜாவாகத் தீர்த்தமும், வெற்றிலை பாக்கும் த்வம்சமாகின்றன. சண்டையோ கேட்கவேண்டாம். கூடத்தில், அம்மா, மாமி, ஊர்மாமி, பாட்டி முதலிய ஓர் வமபர் மஹாசபை கூடியிருக்கிறது. உங்கள் ஊர்ப் பெண்கள் பேசும், பெரிய தோரணை எனக்குப் பிடிக்கவில்லை. எனக்குப் பொழுது போகவில்லை. அதனால் உங்களுடன் விளையாட வந்தேன்" என்று கட்டத்தைப் பிரித்துக் காய்களை வைத்தாள்.

அதற்குமேல் மறுத்துப்பேச மனம் வரவில்லை. விளையாடத் தொடங்கினான்.

தினசரி, காலையில் கீதை படிப்பதும், மத்தியானம் சதுரங்கம் விளையாடுவதும், சாயங்காலம் பாடுவதும் வழக்கமாக நடந்துவந்தன. ஒருநாள், இந்த அயிட்டங்களில், ஒன்றிற்கு வரத் தவறிவிட்டாளானால் "நீ ஏன் வரவில்லை?" என்று கேட்கும் நிலைமைக்கு வந்துவிட்டான் ராஜு. ஆனாலும் பாதிரியாராகப் போகும் எண்ணம் மட்டும் அகலவில்லை. ஒரு மாதமாக ஜெயில் கைதிபோல் அடைபட்டுப் பேச்சுத் துணைக்கு ஆளின்றி இருந்தவனுக்கு, அவனுக்குப் பிடித்தமான சங்கீதம், படிப்பு இவைகளிலும், விளையாட்டிலும் ஓர் தோழிபோல் அவள் இருந்தபடியினால், அவனையறியாதவாறே அவளிடத்தில், தினசரி வாழ்க்கையிலே பிணைக்கப்பட்டான். "அவளில்லாமல் இருப்பது எப்படி?" என்ற எண்ணம்கூடத் தோன்றலாயிற்று.

இப்படியாக அவள் வந்து ஒரு மாதம் ஆயிற்று. அன்று மத்தியானம் இவர்கள் சாப்பிடும்பொழுது, கும்பகோணத்திலிருந்து ஓர் துக்கச் செய்தி வந்தது. கிட்டின பந்துவாதலால், அவர்கள் அவசியம் அப்பொழுதே புறப்படவேண்டியதாயிற்று. மறுநாள்தான் திரும்பமுடியும். அதனால் புருஷர்கள் லலிதாவைக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்றார்கள். கமலம் கண்டிப்பாக, "சாவு வீட்டிற்கு அவளை அழைத்துச் செல்லக்கூடாது" என்று சொல்லிவிட்டாள். கடைசியில் வேலைக்காரி வீரம்மாவைத் துணை வைத்துவிட்டுச் செல்லுவதாகத் தீர்மானித்தார்கள். சமையலுக்கு, சங்கரய்யர் மனைவியை வரச்சொல்லுவதாகச் சொன்னாள் குஞ்சம்மாள். "வேண்டாம் நானே பார்த்துக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டாள் லலிதா. ராஜுவுக்குச் செய்யவேண்டியதைப்பற்றிக் குஞ்சம்மாள் சொன்னாள். சரியெனக் கேட்டுக்கொண்டாள் லலிதா.

யாவரும் சென்றபின், வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு வேலைக்காரனை வாசலில் உட்காரச்செய்து, "யார் வந்தாலும் உள்ளே விடக்கூடாது" என்ற உத்தரவிட்டாள்லலிதா. வீரம்மாவைக் கொல்லைக் கதவைத் தாளிட்டுவிட்டுக் கூடத்தில் உட்காரும்படியும் வேலைகளைப் பார்க்கும்படியும் ஒருவரையும் உள்ளே விடக்கூடாதென்றும் சொன்னாள்.

மத்தியானம் இரண்டு மணிக்குக் காப்பி போட்டு எடுத்துக்கொண்டு ராஜு இருக்குமிடம் வந்தாள். காப்பி சாப்பிட்டானதும், "பாதிரியாரே! இன்று ராத்திரி நான்தான் சமையல் பண்ணவேண்டும். ஆனால் உங்களுக்காக உப்பில்லாமல் செய்யும் வகை என்னால் முடியாது. உப்பில்லாமல் எதற்குச் செய்வார்கள் தெரியுமா? இன்று இவர்கள் போயிருக்கிறார்களே அதற்குத்தான் செய்வார்கள். நான் முதல்முதலாக உங்கள் வீட்டில் அப்படிச் செய்யமாட்டேன். உப்புப்போட்டுத்தான் சமைப்பேன்; இஷ்டமிருந்தால் சாப்பிடுங்கள்; இல்லையேல், நான் சமைக்கவே மாட்டேன். முறுக்கு இருக்கிறது, அதைத் தின்றுவிட்டுப் பாலைக் சாப்பிடுவேன்; நீங்கள் வேண்டுமானால் பாலைச் சாப்பிடுங்கள். நான் சொன்னபடிதான் நடப்பேன் என்பது உங்களுக்குத் தெரியும்" என்றாள்.

"உனக்காக என் விரதத்தை விடமுடியாது. அம்மா வந்தபின் சாப்பிட்டுக்கொள்ளுகிறேன். நீ என்னவேண்டுமானாலும் செய்" என்றான்.

பழையபடி நான்கு மணிக்கு இரண்டு முறுக்கைக் கையில் எடுத்துக்கொண்டு, மாடிக்கு வந்து நிலைக்கண்ணாடிமுன் நின்று, அதைத் தின்றுகொண்டே தலைபின்னிக்கொண்டாள்.

ராஜுவிற்கு அவன் அன்னை இதற்குள், விதம் விதமான பக்ஷணங்கள் பழங்கள் கொடுப்பாள். பத்து மணிக்கு ஏதோ சாப்பிட்டது. பசி வயிற்றைக் கிண்டுகிறது. இவள்வேறு இவன் எதிரில் முறுக்கைக் கடபுடவென்று தின்கிறாள். அவன் நாக்கில் ஜலம் ஊறுகிறது. என்ன செய்வான்? கீழே போய் ஏதாவது தித்திப்புப்பக்ஷணங்கள் இருக்கின்றனவா என்று தேடினான். ஒன்றும் கிடைக்கவில்லை. பிஸ்கட் ரொட்டியிருந்த ஜாடிகள் காலியாக இருந்தன. இரவு ஒன்றும் கிடைக்காதென நிச்சயப்பட்டுவிட்டது. மாடிக்கு வந்தான்; அவள் பின்னிக்கொண்டாய்விட்டது. பாக்கியிருந்த முறுக்கைக் கையில் வைத்துக்கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் சிரித்துவிட்டு, "ஐயோ, பாவம்! அம்மா இல்லை. குழந்தைக்கு வயிற்றுப் பசி கிண்டுகிறது" என்றாள்.

பசி ஒரு பக்கம், அவள் கேலி ஒரு பக்கம், கோபம் வந்துவிட்டது. அவளை அப்படியே ஒரு அறை விடலாமா? என்று தோன்றிற்று. கஷ்டத்துடன் மனத்தை அடக்கிக்கொண்டான். அவளுக்குப் பதில் பேசாமல் தன் அறைக்குள் சென்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்,

பின்னோடுசென்று அவனெதிரில் நின்று, "நான் ஒருவரிடமும் சொல்லவில்லை. இந்த முறுக்கைச் சாப்பிடுங்கள். ஆறுமணிக்குள் சமையல் செய்துவிடுகிறேன்" என்றாள்.

"முகத்தைத் திருப்பிக்கொண்டான்."

"கோபம் யாலரா சாமி நீகு" என்று பாடினாள்.

அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. "ஏது? இவள் நம்மை விடமாட்டாள் போலிருக்கிறதே! இவள் கையில் அகப்பட்டுக்கொண்டோமே" எனச் சிந்தித்தான். "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்றபடி அவனது வைராக்யம் கொஞ்சம் தளர்ந்தது. அவளைப் பார்த்ததும் முறுக்கு வேண்டாம், சமையல் செய், சாப்பிடுகிறேன்" என்றான்.

"உப்புப்போட்டுத்தான்" என்றாள்.

"உம்" என்றான்.

"ரைட்டோ, அப்படி வாருங்கள் வழிக்கு" என்று ஒரே ஓட்டத்தில் கீழே வந்தாள். "வீரம்மா உங்கள் ஐயாவிற்கு, இன்று மத்தியானம் பத்தியம் முறிவு, சீக்கிரம் காய்கறி பறித்து வா" என்றாள்.

"என்ன?" என்று விழித்தாள்.

"அதாண்டி, ஐயர் உப்புப்போட்டுச் சாப்பிடப் போறார்" என்றாள்.

வீரம்மா காய்கறி பறித்துக் கொணர்ந்து, நறுக்கிக்கொண்டே, "கொழுந்தே, நீ அய்யனை உப்புச் சேர்க்கப்பண்ணினமட்டும் போதாது, தாலிகட்டிக்கணும்" என்றாள்.

"ஆறு மணிக்குள், அவரைக்காய் கறி, கத்தரிக்காய்ச் சாம்பார், தக்காளி ரஸம் இவையெல்லாம் செய்து முடித்துவிட்டு, அவனைச் சாப்பிட அழைத்தாள். வந்து உட்கார்ந்தான். தலைவாழை இலையைப் போட்டு, சர்க்கரையைப் பறிமாறினாள்.

"இது என்னத்திற்கு."

"உங்களுக்கு இன்று பத்திய முறிவு அல்லவா? நான் முதலில் பரிமாறுகிறேன்" என்று சிரித்தாள்.

நல்லபசி. இம்மாதிரி சாப்பாடு சாப்பிட்டு இரண்டு மாதங்களாகிவிட்டன. சாப்பாட்டை ஒரு கை பார்த்தான். மோருஞ்சாதம் சாப்பிடும்பொழுது, "உனக்குத் தெரியாத விஷயம் ஒன்றும் கிடையாதுபோலிருக்கிறது; நன்றாகச் சமைக்கிறாயே' என்றான்.

"ஓ! எனக்குச் சமைக்கத் தெரியும்; பாடத் தெரியும்; ஆடத்தெரியும்" என்றாள்.

"ஆடத்தெரியுமா? எங்கே, கொஞ்சம் ஆடு, பார்க்கலாம்" என்றான் சிரித்துக்கொண்டே.

"எனக்குப் பசிக்கிறது. சாப்பிட்ட பிறகு மாடியில் வந்து ஆடுகிறேன்."

கையலம்பிவிட்டு மாடிக்குச் செல்லப் போனான். "பாதிரியரே? நான் தனியாகச் சாப்பிடும் வழக்கம் கிடையாது; எங்க அம்மா இல்லாத சமயம் என் அப்பா நான் சாப்பிட்ட பின்புதான் ஆபீசுக்குச் செல்லுவார். நீங்கள் உட்கார்ந்திருங்கள் போதும்" என்றாள்.

"சரி"யென அவளுக்கெதிரில் உட்கார்ந்தான். பேச்சு வாக்கில், மோர் ரஸம் எல்லாம் பரிமாறினான். சாப்பிட்டானதும், "நான் போகட்டுமா?" என்றான்.

"போங்கள், நான் வேலைகளை முடித்துக்கொண்டு ஆடவருகிறேன்."

அவன் போனதும் "வீரம்மா, நீயும், உன் புருஷனும், சாப்பாட்டைச் சாப்பிட்டுவிட்டு, அடுப்பை மெழுகி, அறையையும் அலம்பிவிடு" என்றாள்.

"என்ன கொழுந்தே. நான் கசாலைக்குள் வரலாமா?" அம்மா சண்டை பிடிப்பாங்க."

"எங்கள் ஊரில் உங்களைப்போலுள்ளவர்களே இவ்வேலைகள் செய்வது. வழக்கம். அம்மாவிடம் சொல்லவேண்டாம். நான் தாலி கட்டிக்கவேண்டுமானால் செய்."

வீரம்மாளுக்கு அம்மா இவ்வளவு நாட்களாகக் காட்டாமல் வைத்திருந்த இரகசிய அறையைப் பார்த்ததும் உண்டான சந்தோஷம் தாங்கவில்லை.

லலிதா மாடிக்கு வந்தாள். துவாதசி பாரணை சாப்பிட்டதுபோன்ற களைப்பு. ராஜு ஈஸிச்சேரில் சாய்ந்துகொண்டிருந்தான். "நான் பரதநாட்டியம்..." என்று நிறுத்தினாள்.

"உம்" என்று எழுந்து உட்கார்ந்தான்.

"தன் அன்றக்குள் சென்று, ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்கும், நாட்டிய உடையை. அணிந்துகொண்டு வெளியே வந்து, எல்லா விளக்குகளையும் போட்டுவிட்டு, கிராமபோன் பிளேட்டை வைத்தாள். "நேற்றந்தி நேரத்திலே" என்ற உசேனிராகப் பதத்தைப் பாடிக்கொண்டே அபிநயம் பிடித்தாள். அது முடிந்ததும், "இதுதானா பாடத் தோன்றிற்று, வேறு கிடையாதா?" என்றான்.

"இதுதான் எனக்கு மிகவும் பிடித்தது" என்றாள்.

பிறகு மேலே மேலே அவன் சொன்ன பாட்டுக்களுக்கெல்லாம் அபிநயம்பி[illegible] நிசப்தமான நேரம். தேஜோமயமான ஆ[illegible]. கண்களைப் பறிக்கும் பிரகாசமான விளக்கு. சுகமான சாரீரத்தில் பாட்டு. இவைகளுக்கிடையில், மோகினி போன்ற ரூபத்துடன் அவள் ஆடுவது, 'தேவகன்னிகைதான் வந்துவிட்டாளோ?', என்று நினைக்கும்படியாக இருந்தது. அந்தக் காட்சியில் தன்னை மறந்து ஈடுபட்டான் ராஜு. ஒரு மணிவரை சளைக்காமல் பாவம் பிடித்தாள். பிறகு அவன் பக்கத்தில் வந்து 'நிறுத்தலாமா' என்றாள்.

அந்தச்சமயம் அவளுடைய தோற்றம் அவனை நிலைகலங்கச்செய்தது. ஏதோ ஓர்விதமான உணர்ச்சி தோன்ற, அவள் கையைப்பற்ற எண்ணினான். ஆனால் மறுநிமிஷம் "சே என்ன காரியம் செய்யத்துணிந்தோம். நம் உறுதி, என்னவாவது? லக்ஷ்யம் சிதைந்துபோகவா?" என்று மனதைத் திடப்படுத்தி, "சரி நாழியாய் விட்டது. உனக்கு மிகச்சிரமம்" என்றான்

"பரவா இல்லை. உஙகள் சந்தோஷமே என் வாழ்க்கையின் லக்ஷ்யம்", என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று உடையைமாற்றி வந்தாள். பிறகு "நீங்கள் கீழே சென்று படுத்துக்கொள்ளுங்கள். நானும் வீரம்மாவும் இவ்விடம் படுத்துக்கொள்ளுகிறோம்" என்றாள்.

"ஏனோ? இது என் இடம். நீதான் கீழே போகவேண்டும்".

"நான் மாட்டேன் எனக்குப் பயமாக இருக்கிறது. உங்கள் இடமானால் எனக்குக் கொஞ்சம் இரவல் கொடுக்கலாம்" என்றாள். அவள்தான் ஜயித்தாள். "ஜயமுண்டு பயமில்லை மனமே" என்று பாடிக்கொண்டே படுக்கையை விரித்தாள்.

மறுநாள் ராஜு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது, கும்பகோணம் போனவர்கள் வந்துவிட்டார்கள். நால்வரும் அவன் சாப்பிடுமிடத்திற்கே வந்து நின்றார்கள். அவன் குனிந்த தலை நிமிரவில்லை. நாணுவய்யர், சுப்பய்யர் காதோடு, "பைத்யம் ஒருசமயம் பாதியில் எழுந்துவிடும். நாம் அந்தப்பக்கம் சென்றுவிடுவோம்" என்றார்.

ராஜு கையலம்பிவிட்டு மாடிப்படி ஏறும்பொழுது, அதனடியில் நின்ற குஞ்சம்மாள், "ராஜு! என்னைத்தான் விரட்டலாம்" என்று சிரித்துக்கொண்டே "இதுதான் எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது" என்றாள்.

"போ! அம்மா! எல்லாம் உன்னால்தான்" என்றுநாலுபடியை ஒன்றாகத்தாண்டிச்சென்றுவிட்டான்.

எல்லோரும் சாப்பிடும்பொழுது, லலிதாவை "அவன் எப்படி உப்புச்சேர்த்துச் சாப்பிடச் சம்மதித்தான்"என்று கேட்டதற்கு, முதல்நாள் தான் ஆடியதைத்தவிர மற்ற விஷயங்களை ஒரு மாதிரியாகச் சொன்னாள்.

"சுப்பையா! உன் பெண் பலே கெட்டிக்காரி" என்று சிரித்தார் நாணுவய்யர்.

சுப்பையருக்கும் பெருமை தாங்கவில்லை.

சாயங்காலம் தலைபின்னிக்கொண்டு நன்றாக உடுத்துக்கொண்டு ராஜு இருக்குமிடம் வந்தாள் லலிதா.

"என்ன? இன்று டிரஸ் பிரமாதமாக இருக்கிறதே" என்றான்.

"இவ்வூருக்கு வந்தநாளாய் ஓரிடமும் போகவில்லை; இன்றுஇப்படி எங்காவது சுற்றிவிட்டு வரலாம் வாருங்கள்" என்றாள்.

"இங்கே எங்கே போவது? உங்கள் ஊர் மாதிரி 'பார்க்' ஒன்றும் கிடையாது" என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

"இல்லை என்பது ஞாபகமிருக்கிறது. தெரிந்ததுதான்; வயற்காட்டைச்சுற்றி வரலாம்"

"நான் தெருவோடு வரமாட்டேன். அப்பா, மாமா, யாரையாவது கூட்டிக்கொண்டுபோகச் சொல்லு".

"கொல்லை வழியாக ஒருவர் கண்களிலும் படாமல் செல்லுவோம். அவர்களுடன் போக எனக்கு இஷ்டமில்லை; நீங்கள்தான் வர வேண்டும்".

அதற்குமேல் மறுத்துப்பேசச் சக்தியில்லை. ஏன் இவளைக்கடிந்துகொள்ள மனம்வரவில்லை? அவள் ஆட்டிவைக்கும் பொம்மையாக ஆய்விட்டோமே என்று நினைத்துக்கொண்டே புறப்பட்டான்.

அப்பொழுது போரடிக்காலமாதலால், மாடுகளைச் சுற்றியடிப்பதும், தூற்றிப் புடைப்பதும், போர் போடுவதுமான காட்சிகளைப் பார்த்துக்கொண்டே சென்றார்கள். களத்துப் பெண்கள், "ஐலேலோ" பாட்டை அனுபவித்துக்கொண்டே நடந்தார்கள். ஆட்கள் ஒருவருக்கொருவர்,

"அடேய் சின்னையன் வராரு".

"கூட ஒரு பொண்ணு வருதே, யாருடா அது?"

"அதுதான் பெரிய ஐயன் தங்கச்சி மவ. இவருக்குத்தான் கட்டுப்போறாவ."

"என்னடா என்னமோ சாமியாரா போப்பறாரு என்றாங்களே"

"அடபோடா, இப்படி எத்தினி சாமியாரா பாத்திருக்கு" என்ற பேச்சுக்களை இவர்கள் கவனிக்கவில்லை.

இருட்டும் சமயம் ஆய்விட்டபடியால் இருவரும் வீடு திரும்பினார்கள். வரும் வழியில் ஒரு சிறிய வாய்க்கால் ஜலம்வற்றிச் சகதியாக இருந்தது. அதைத் தாண்டவேண்டும். ராஜு தாண்டி வந்துவிட்டான். லலிதா அந்தப் பக்கமே நின்றுகொண்டிருந்தாள்.

"லலி! தாண்டி வா" என்றான்.

"என்னால் முடியாது. உங்கள் கையை நீட்டுங்கள்; பிடித்துக்கொண்டு தாண்டுகிறேன்"

பக்கத்தில் கிடந்த ஒரு கிளையை எடுத்து நீட்டிப் "பிடித்துக்கொண்டு வா!"

"கிளை ஒடிந்தால் சகதியில் விழவா? முடியாது".

"என்னை ஏன் இவ்விதம் ஆட்டிவைக்கிறாய்?

"உங்களை ஆட்டிவைக்கக் குரங்காட்டியல்ல நான். இவ்விடமே நின்றுகொண்டிருக்கிறேன்; என் அப்பாவைக் கூட்டிவாருங்கள்"

என்ன செய்வான். நன்றாக இருட்டிவிட்டது. அவளைத் தனியேவிட்டுச் செல்லமுடியாது. அவளோ பிடிவாதக்காரி. வேறு வழியில்லை என்று நினைத்து வலதுகையை நீட்டினான்.

"தேவி! இக்கையைப்பிடிக்கும் பாக்யம் என்றும் நிரந்தரமாகட்டும்" என்று வேண்டிக்கொண்டே அவன் கையைப்பற்றிக்கொண்டு தாண்டினாள். அவளுடைய அழுத்தமான கைப்பிடிப்பு இருவர் மனத்திலும், ஓர் மின்வெட்டு, ஓர்வித உணர்ச்சி. உண்டாக்கியது. ராஜுவின் கை அவள் கையை விடுவிக்க மறுத்தது. சற்று நேரம் அப்படியே நின்றார்கள். லலிதா மெதுவாக அவனை நிமிர்ந்து நோக்கினாள். அச்சமயம் அவனும் திரும்பவே, கண்கள் சந்தித்தன. ராஜு சட்டென மறுபுறம் திரும்பிக்கொண்டு, அவள் கையை உதறிவிட்டு, 'லலி, வா போகலாம்' என்று நடந்தான். போகும்பொழுதே, "இதென்ன, நாம் இப்படி மானத்தைப் பலிகொடுத்து விடுகிறோமே. இவளை மறக்கமுடியாதுபோலிருக்கிறதே" என்ற எண்ணங்கள் தோன்றலாயின.

இரவு எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தார்கள்.

"லலிதா! சாயங்காலம் எங்கெல்லாம் சுற்றினீர்கள்" என்றார் நாணுவய்யர்.

"வயல் வெளிகளெல்லாம் சுற்றினோம். ஆள்களெல்லாம் போர் அடித்துக்கொண்டிருந்தார்கள். எங்களை விழுந்து விழுந்து கும்பிட்டார்கள்"

"அந்தப்பெண்கள் பாட்டைக் கேட்டாயே, எப்படியிருக்கிறது?"

"உங்கள் ஊர் கோவில் மேளக்காரன் உச்சஸ்தாயியில்வாசிக்கும் அபஸ்வரத்தைவிட அவர்

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

கள் பாட்டுச் சுத்தமாக இருந்தது. மாமா இந்தஊரில் வேறுமேளக்காரன் கிடையாதா?" என்று கேட்டாள்.

வேறு கிடைப்பார்கள். ஆனால் இவர்களைப் போகச்சொல்ல முடியாது. இவர்களுக்கு வம்ச பரம்பரையாகத் தனி 'மான்யம்' உண்டு. அவர்கள் கோர்ட் வரையில் போகச் சட்டமிருக்கிறது. அநேகமாகக் கத்துக்குட்டிகள் வாசித்துப் பழகுவதினால் இந்த அபஸ்வரம்.

"ஐயோ. பாவம். ஒன்று அந்த ஸ்வாமிக்கு இவர்கள் வம்சவம்சமாக அபஸ்வரம் கேட்டுக் கேட்டு நல்ல சங்கீதமே பிடித்தமில்லாமல் போயிருக்க வேண்டும், அல்லது ஸ்வாமி கோவிலைவிட்டு ஓடிப்போயிருக்கவேண்டும். நம்ப பாதிரியார் சொல்லும்மாதிரி வெறுங் கல்லுத்தான் இருக்கவேண்டும்" என்றாள்.

"பாதிரியார்" என்றதும் எல்லோரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். ராஜுவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவசர அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு மாடிக்குச் சென்றுவிட்டான்.

சற்றுச் சந்தடி அடங்கியதும் ராஜு இருக்குமிடம் வந்தாள் லலிதா. புஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு இவளைப் பார்க்காததுபோல் உட்கார்ந்துகொண்டிருந்தான். இவனுக்கெதிரே உள்ள நாற்காலியின் சாய்மானத்தைப் பிடித்து நின்றுகொண்டு, "பாதிரியாரே" என்றாள். நிமிர்ந்து பார்க்கவில்லை.

"நான் சொன்னதற்காகக் கோபமா?" அபராதமுலு' என்று பாடினாள்.

சட்டெனக் கையிலிருந்த புஸ்தகத்தை மேஜைமீது வீசி எறிந்துவிட்டு, "என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்? என் மனத்தை ஏன் இப்படிச் சித்ரவதை செய்கிறாய்?" என்றான் வெறுப்பாக.

"யாரை யார் சித்ரவதை செய்கிறார்களோ அது அவரவர் ஹ்ருதயத்திற்குத் தெரியும். இன்றுடன் என்னுடைய தொல்லை விட்டுவிடும். அதைச் சொல்லவே இவ்விடம் வந்தேன்" என்றாள் துக்கம் நெஞ்சையடைக்க.

"என்ன?" என்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"நாங்கள் நாளைக்கு ஊருக்குப் போகிறோம்."

"ஏன்" என்றான்.

"ஏனென்றால் என் அப்பாவுக்கு லீவு முடிந்துவிடும். அவர் லீவு எடுத்துக்கொண்டது என் கல்யாணத்திற்காக."

"வரன் நிச்சயமாய்விட்டதா? உனக்கு இஷ்டமா?" என்றான் பதட்டத்துடன்.

"அதொன்றும் எனக்குத் தெரியாது. எனக்கு இஷ்டமானவரை நான் எப்படி அடைய முடியும்? பெற்றோர்கள் யாரை ஏற்படுத்துகிறார்களோ அவரைக் கட்டியழவேண்டும். பெண் ஜன்மந்தானே! இஷ்டப்படி நடக்கமுடியுமா? அதிலும் நான் ஒரே பெண். அம்மா மனத்தைச் சந்தோஷிக்கச் செய்யவேண்டும். ஆண் பிள்ளைகளாக இருந்தால் இஷ்டப்படி அதிகாரம் செலுத்தலாம் பாருங்கள். உங்கள் அம்மா உங்கள் இஷ்டப்படி நடக்கவில்லையா?"

சாயங்காலம் அவள் கையைப் பிடித்ததிலிருந்து மனம் ஒரு மாதிரியாக 'அவ்வின்பம் திரும்பக் கிடைக்குமா?' என்ற உணர்ச்சி ஒன்று அவனை அலைத்துக்கொண்டிருந்தது. இப்பொழுது அவள் சொல்லிய விஷயம், 'பிரிவு' என்பதை நினைக்கச் சொல்லமுடியாத வேதனை செய்தது. சற்றுநேரம் இருவரும் பேசவில்லை. பிறகு "லலி! குடிக்க ஜலம் கொண்டுவருகிறாயா?" என்றான்.

"சரி" என்று கீழே சென்றாள்.

அவனது தினசரி வாழ்க்கையே அவளுடன் பின்னியிருப்பதுபோலவும், அதைப் பிரிக்க முடியாதவாறு அவனறியாத ஓர் சக்தி பிணைக்கப்பட்டதுபோல் தோன்றிற்று. அவள் தன்னுடையவள் என்ற ஓர் சுவாதீனம் ஏற்பட்டது. அவளைப் பிரிந்தால் நாம் எப்படி இருப்பது என்ற வேதனை வாட்டிற்று. அவளைப் பிரியாமல் [illegible]க்கவேண்டுமானால் ஒரே வழிதான் உண்டு. ஆனால் 'பாதிரியாவது' என்று என்னும்பொழுது, 'பாதிரியார்' என்ற எண்ணம், லலிதாவின் முன், ஆடிக்காற்று முன் பஞ்சு போல் பறந்துபோயிற்று. "இதுதான் உண்மைக் காதல்போலும், என் லக்ஷ்யமே சிதைந்துவிட்டதே. இவளுடன் செல்லும் வாழ்க்கைப் படகில் கிடைக்கும் இன்பத்தைவிட அதில் என்ன திருப்தி ஏற்படப்போகிறது?" என்று நினைக்கும் சமயம், ஜலத்துடன் வந்தாள் லலிதா. வாங்கிக் குடித்தான். பிறகு "லலிதா! என்னைத் தனியாக விட்டுப் போக உனக்குச் சம்மதந்தானா? இந்த ஒரு மாதமும் எவ்வளவு இன்பகரமாகக் கழிந்தது."

"எனக்குச் சம்மதமில்லை, ஆனால் இப்படியே எந்நாளும் இருக்க முடியுமா? உலக வழக்கிலிருந்து விலகி நடக்கமுடியுமா?" என்று சிரித்தாள்.

"விலகி நடக்கவேண்டாம்" என்று அவனும் சிரித்தவாறே கூறினான்.

"நீங்கள் பேசுவதின் அர்த்தம் விளங்கவில்லையே" என்றாள்.

"விளங்கவில்லையா? குறும்புக்காரி! என் வாயினால் ஸ்பஷ்டமாக வரவேண்டுமென்கிறாய். சரி, என் வாழ்க்கைப் பத்திரத்தை உன் கையில் ஒப்புவிக்கிறேன். ஏற்றுக்கொள்ளுகிறாயா?"

"சரிதான், இப்பொழுதிருக்கும் மன நிலையில் கல்யாணம் செய்துகொண்டு, பின்னால், 'நீ வந்தால் வா! வராவிட்டால் போ! என்று பாதிரியாகக் கிளம்பினால் என் கதி என்னாவது? உங்களைப் பின்பற்ற என்னால் முடியாது. உங்கள் பெற்றோருக்கு மற்றொரு பிள்ளை இருக்கிறார். நான் ஒரே குழந்தை."

"லலி, இனி என் மனம் ஓரிடமும் செல்லாது. நீதான் குருவாக வந்து மனத்தைத் திருப்பி விட்டாயே. ஜோஸப்பினோடு சேர்ந்து நூல்களைப் படித்து மத ஆராய்ச்சி செய்யும் பொழுது அவன் சொல்வதே உண்மை எனத் தோன்றிற்று. இப்பொழுது உனக்காகக் கீதையைக் கவனமாகப் படித்ததில் 'சர்க்கரை ஒரே தித்திப்புத்தான், அதை அவரவர்களுக்குப் பிரியமான, பலகாரமாகச் செய்து சாப்பிடுவது போல் எங்கும் நிறைந்திருக்கும் பிரும்மம், ஒன்றுதான். அதை அவரவர்கள் மதாசாரப் படி, ரூபமாகவும், அரூபமாகவும் உபாசிக்கிறார்கள். அவரவர் கடமையை ஒழுங்காகச் செய்தால், நல்ல லக்ஷ்யம் தானே கிடைக்கிறது. இதற்கு மதம் மாறவேண்டிய அவசியம் இல்லை' என்பது, 'உள்ளங்கை நெல்லிக் கனி போல் தெரிந்துவிட்டதே; என்னை நம்பு" என்று எழுந்து அவள் கையைப் பிடித்தான். வெடுக்கெனக் கையை விடுவித்துக்கொண்டு பின் வராந்தாவிற்குச் சென்றுவிட்டாள்.

அவனும் அங்குவந்து "லலிதா!" என்றழைத்தான்.

பதில் பேசாமல் படியேறி மூன்றாவது மொட்டைமாடிக்குச் சென்றுவிட்டாள். பின் தொடர்ந்தான். பால்போல் நிலா பிரகாசித்தது. மண்டியிட்டுக் கைப்பிடி சுவரில் சாய்ந்து உட்கார்ந்து, இயற்கைக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் பின்னால் வந்து நின்றுகொண்டு "ஒன்றும் சொல்லாமல் வந்துவிட்டாயே, இன்னும் நம்பிக்கையில்லையா?"

சட்டென எழுந்து, தனது பின்னலை விடுவித்துக்கொண்டு, "இந்த நிலவில் பசேலென்ற வயல்களும், அடர்ந்த தோப்புகளும், கோவிலும், ஆன இயற்கைக்காட்சி மிகவும் மனோகரமாக இருக்கிறது. உங்கள் ஊர் மிக்க அழகானதே"

"என்ன, நான் கேட்பதற்குப் பதிலில்லை? என்னென்னவோ சொல்லுகிறாய்? என் ஹ்ருதயம் படும் வேதனையை நீ அறியவில்லை" என்று தழுதழுத்த குரலுடன் சொன்னான்.

மெள்ள அவனை நிமிர்ந்து பார்த்தாள். என்ன பதில்கிடைக்குமோ என்று அவனும் கூர்ந்து நோக்கினான். கண்கள் சம்மதம் தெரிவித்துவிட்டன. பிறகு "அம்மாடி! இந்த ஒரு நிமிஷ நேரத்திற்குள் பொறுக்கமுடியாமல், துடித்துவிட்டீர்களே. நான் இவ்வூருக்கு எவ்வளவு ஆவலுடன் வந்தேனோ, அவ்வளவும் ஏமாற்றமாக, பேப்பரில்வந்த உங்களது படத்தைக் கத்தரித்து வைத்துக்கொண்டு நான் இரவு பகல் பூஜித்து, வரம் கிடைக்குமென்று நம்பி இந்த ஒரு மாதமாக, உங்களது சொல்லம்புகளை ஏற்றுக்கொண்டு, லஜ்ஜையை விட்டு, வேசியைப்போல் நடந்து, என் லக்ஷ்யம் எவ்வாறாகுமோ என்ற கவலையால் அலைக்கப் பட்டு, 'வெற்றி கிடைத்தால் வாழ்வு. இல்லையேல் மெடிகல் காலேஜில் சேர்ந்துவிடுவது. கல்யாணம் அடுத்த ஜன்மத்தில்' என்ற முடிவுடன், நான்பட்ட மனக்கஷ்டத்தைத் தாங்களும் கொஞ்சம் அனுபவிக்கவேண்டுமென்றுதான் பதில் பேசவில்லை" என்றாள்.

"உனது முதல் பார்வையிலேயே எனது வைராக்கியத்தின் அஸ்திவாரம் கலகலத்துவிட்டது. உன் மோஹன ரூபமும், சாதுர்யப் பேச்சும் கட்டடத்தின் ஒவ்வொரு கல்லாக விழும்படி செய்யத்தொடங்கின. இல்லையேல், நீ வந்த அன்றே சொல்லாமல் செல்லநினைத்தேன். உன் விழி என்னை மடக்கிவிட்டது. என்போன்றவர்கள் வைராக்யமெல்லாம், உன்போன்ற மை விழியார்முன், ஆடிக்காற்றிலகப்பட்ட பஞ்சின் கதிதான்" என்று அவள் கையைப்பற்றி அருகி ழுத்தான்.

லலிதாவின்! பெண்மை வெற்றிகொண்டது. 'வெற்றி! வெற்றி!' என்று கொண்டாடுவோம் என்பனபோல், ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் கண்களைச் சிமிட்டின.

JABCO
FOUNTINK
— is ink at the best —

புண்ணும், பெண்ணும்

"ஸ்ரீரா"

1

படகு ஊர்ந்து சென்றது. விட்டு விட்டு அடித்த காற்று, படகில்மோதி ஒரு சலசலப்பை உண்டுபண்ணிக்கொண்டிருந்தது. பெருக்கு அதிகமில்லாவிடினும் கங்கை நித்ய ஆழ்வுடன் ஓடிக்கொண்டிருந்தது.

நவகுமாரன் கோலைக்கவனித்துப் போட்டுக்கொண்டே, நீலவிண்ணை நோக்குவதும் பின் திரும்புவதுமாக இருந்துகொண்டிருந்தான். அஸ்தமன ஸமயம். வானத்துமிளிரும் சுடர்கள் தன்னொளியை வீச ஆரம்பித்துவிட்டன. ஹிருதய தாபங்களின் எதிரொலிகள் கொழுந்துவிட்டு, அசைந்து, உயரச் சென்று அவ்வொளிகளுடன் இழைந்தன, என்று எந்தக் கவியும் கூறியிருப்பான்—இயற்கையின் உள்ளொளி அம்முறையில் அமைந்து நின்றது.

ஆக்ரா நகரத்து விலையுயர்ந்த மஸ்லின் அழகிய ரோஜா ஒன்றை மறைத்துக்கொண்டிருந்தது. படகிலிருந்த மற்றப் பிரயாணி மாலினி என்பவள். அவளது கூர்ந்த விழிகளின் முழு அழகையும் நவகுமாரனைத்தவிர மற்றவர் உணர்ந்திருக்கமுடியாது. அவளது மெல்லிய முன்மேனியில் இளமயிர்கள் அரும்பித்தவழ்ந்தன. ஜலப்பிரவாகம் அவளது கண்களை மயக்கிவிட்டது—அதையே உற்றுக்கவனித்துக்கொண்டிருந்தாள் அவள்.

அடிக்கடி இருவரதுகண்களும் சந்தித்துவிட்டு, மறுபடி போலிக்கோபத்துடன் பிரிந்துவிடும். நவகுமாரனது இதழ்களில் புன்னகை அரும்பும். மாலினி எதிர்ப்புன்னகை கொடுத்தாள் என்று சொல்லமுடியாது.

படகு கரை சேர்ந்தவுடன் மாலினி இறங்கி வேகமாக நடந்துவிட்டாள். நவகுமாரன் அவளது உருவம் மறையும் வரையில் நின்றுபார்த்திருந்தான். "பெண் தெய்வம்; பெண் தெய்வம்" என்று முணமுணத்தது அவனது வாய்.

2

வாழ்க்கைப்பாதையில் முட்கள் தைப்பது அதிசயமில்லை. எந்தக்காலத்தும் கஷ்ட நிஷ்டூரங்கள் இருப்பது ஸ்கஜம். உயர்ந்த பதவியிலிருப்பவர்கள் தாழ்ந்துவிடுவதும், அதற்கு நேர்மாறாக நடப்பதும் அதிசயமில்லை.

"முழு அந்தகாரம் வெளியே—அதோ, ஓரே ஒளிமயம்— நம்பிக்கை உண்டு! சிறு தணல் போலவல்லவா இருக்கிறது? ஆனாலும் இக்கருங்கடலில் அதனொளி எத்தன்மையாய்த் தோற்றுகிறது! பிரளயகாலத்தில் அமுதனை மிதக்கவைத்த ஆலிலைபோலவல்லவா தோற்றுகிறது! மனதுக்கு இப்பொழுதேயல்லவா சந்துஷ்டி உண்டாகிறது! இறகுகளில் வலி உண்டாகிறதே?—அதைச் சகித்துக்கொள்ளவேண்டியதுதான்-இன்னும் இவ்வளவு தூரந்தானே. இதோ நெருங்கிவிட்டது—இப்பொழுது பவனத்திற்குள் வந்துவிட்டேன்—என் ஜன்மம் சாபல்யமடைந்துவிட்டது. எல்லையை அடைந்துவிட்டேன்! கருங்கடலைக் கடந்துவிட்டேன்—இனி இதே ஒளிதான் என் முன்னே!—ஹா! இது என்ன? பலகணிபோலிருக்கிறதே?—ஐயோ! மறுபடி அந்தகாரமல்லவா?"—நம்பிக்கையுடன் ஒளியைத் தேடிவரும் வானப்புள்ளின் மனோநிலை இது—ஒளியில் அது நிற்பது வெகு சில நாழிகைள்தான். வாழ்க்கையும் இப்படித்தான். அநித்யம்! ஆனாலும் நடுநடுவே எவ்வளவு சந்துஷ்டி—எத்தனை நம்பிக்கை!—அதுவும் அநித்யம்தான்!

ஒரு காலத்தில் நவகுமாரன் ஷாஜஹான் சக்கரவர்த்தியின் களிமண்டபத்தில் கானமிசைத்து வந்தான். எவ்வளவோ சுகங்களை அநுபவித்துவந்தான். ஆனால் திடீரெனச் சக்கரவர்த்தியின் கோபவிஷம் அவனைத் தீண்டிவிட்டது. சமூகம்—அந்தப் பெரிய சமூகம்—அவனை விலக்கிவிட்டது. இப்போது கங்கைதான் அவனுக்கு ஜீவனம் கொடுக்கிறது. அவன் இப்போது படகோட்டி.

3

மறுநாள் அதேசமயம். மாலினி வந்தாள். இன்று அவள் தினத்தையும்விட அதிகமாக நூல்கொண்டு வந்திருந்தாள். அவளது தாய் நூற்ற நூலைக்கொண்டுபோய் அக்கரையில் முதலாளிவீட்டில் கொடுத்துவருவதற்கு அவள் தினமும் கங்கையைக்கடக்கவேண்டியிருந்தது. ஏதோ—கௌரவத்துக்குப் பங்கமில்லாமல் ஜீவனம் நடந்துவந்தது.

நவகுமாரன் படகை மிதக்கவிட்டு, அவளை ஏறிக்கொள்ளும்படி சைகை காட்டினான். அவள் ஏறி ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டாள். படகு மெதுவாக நகர்ந்தது.

"மஹேந்திரன் இன்று வந்திருந்தானா?" என்று பேச்சைத் துவக்கினான் நவகுமாரன்.

"வந்திருந்தான். தினமும் வந்துவிடுகிறான். அம்மாவைப் பார்த்துவிட்டுப் போவதாகச் சாக்குச்சொல்லுகிறான்" என்றாளவள். குரலில் நிஷ்டூரம் நிறைந்திருந்தது.

"கல்யாணம் நிச்சயமாகிவிட்டதா?" என்று கேட்டான் நவகுமாரன்.

"எப்படி நிச்சயமாக முடியும். அவனுக்கு ஒரு கண் குருடு. மஹா கோபிஷ்டன். எனக்குப் பிடித்தமில்லை. அழகாகப் படமெழுதுகிறான் என்பதற்காக அவனைக் கல்யாணம் செய்து கொள்ள முடியுமா? அன்று ஒரு நாள் எங்கள் வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு 'மாலினி, உன்னைப்பார்த்துப் படமெழுதப் போகிறேன். அசையாமல் உட்கார்ந்திரு' என்றான். கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்தேன். பாதியில் எழுந்து போய்விட்டேன். அவன் முன் நிற்பதற்கே எனக்குப் பிடிக்கவில்லை. கோபித்துக்கொண்டு படத்தைச் சுக்குநூறாகக் கிழித்துப்போட்டு விட்டுப் போய்விட்டான். தன் அண்ணாவின் பிள்ளை என்பதற்காகச் சலுகை கொடுக்கிறாள் அம்மா" என்று அடுக்கிக்கொண்டே போனாள் மாலினி. அவளது வதனத்தில் கோபமும், சோகமும் கலந்து ஊசலாடின. நவகுமாரன் வேறொன்றும் கேட்கவில்லை. படகு கரையை நெருங்கிவிட்டது. மாலினியைக் கண்கொட்டாமல் ஒருமுறை பார்த்தான் நவகுமாரன். அவள் தலையைக் குனிந்துகொண்டாள். படகு கரை தட்டிற்று. இறங்கி வேகமாக நடந்தாள் மாலினி.

4

மறுநாள். தினத்தையும்விட அன்று அழகாக இருந்தது மாலினியின் வதனம். "இயற்கையுடன் போட்டி போடுகிறாள். மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எதிரொலி கொடுக்காமல் சும்மா இருக்கிறாள். கல்நெஞ்சக்காரி!—அவளுமென்ன மானிடப்பிறவிதானே?—என்னவோ?" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான் நவகுமாரன். அவனது உள்ளத்தை அவள் கொள்ளைகொண்டுவிட்டாள். காதலின் தாபத்திற்குத்தான் எல்லை கிடையாதே!

"கங்கையின் சலனத்தை நம் மனோசலனத்திற்கு ஒப்பிடலாமல்லவா?" என்று பேச்சைத் துவக்கினான் நவகுமாரன்.

"தப்பு. கங்கையின் சலனம் ஆழ்ந்த தன்மையது. நம்முடையது வெறும் ஏமாற்றல். வெறும் கனவு. வினாடி நிற்கும் மின்னல். நமக்கே நம்மை முழுவதும் தெரிவதில்லை. ஒன்றிலும் நிற்காமல் பறப்பது. சுழலில் அகப்பட்டுக்கொண்டு, தெளிந்து எழுந்திருக்க முடியாது நம்மால்" என்று திருத்தினாள் மாலினி. மனோவேகத்தின் எல்லையைக் கடந்துவிட்டாள்.

"மனோபீஷ்டம் நிறைவேறாமல் கொந்தளிப்பு ஏற்பட்டு மயக்க வெய்யிலில் வற்றிவிடுகிறது. சிந்தனைசெய்து பார்த்தால் எல்லாம் ஒன்று தான்" என்றான் நவகுமாரன். அவனது மனம் தெளிந்து யோசனை செய்யவில்லை. ஏதோ தோன்றினதைச் சொன்னான்! அவள் பதிலொன்றும் சொல்லவில்லை.

படகு கரையை அடைந்துவிட்டது. சிறு பறவையொன்று தன் குட்டிச் சிறகுகளை வேகமாக அடித்துப் பறந்துசென்றது விண்ணின் குறுக்கே. அடிவான எல்லையில் வர்ணஜாலங்களை விரித்து நின்றன மேகக்கூட்டங்களின் சோபன வரம்புகள். அவைகளின் பிரதிபிம்பம் நீரினுள் கனவுக் கதிர்களைச் சேர்த்துநின்றது.

படகைக் கரையோரம் நிறுத்தி, மரக்கிளையொன்றில் கயிறு கொண்டு கட்டிவிட்டு, அதன் நடுவே உட்கார்ந்திருந்தான் நவகுமாரன். இருட்டிக் கொஞ்ச நாழிகையாகிவிட்டது. அன்று பௌர்ணிமைக்கு முதல் நாள். சந்திரிகையின் இளங் கதிர்கள் வானப் பரப்பில் மிதந்து சென்றன. நீரில் அதன் எழில் பன்மடங்கு அதிகமாக விகசித்தது. கோயில் மணியின் ஓங்கார நாதம் காற்றில் மிதந்து கீதமிசைத்துக்கொண்டிருந்தது. நவகுமாரன் ஆழ்ந்த யோசனையில் யாவற்றையும் மறந்திருந்தான். அவனுக்கு ஒன்றும் தெளியவில்லை.

மாலினி திரும்பிவந்து படகில் ஏறினாள். நவகுமாரன் கயிற்றை அவிழ்த்துவிட்டுக் கோலை எடுத்தான். படகு நகர்ந்தது. நவகுமாரனது உதடுகள் துடித்தன. உள்ளக் கொந்தளிப்பின் அம்சம் முகத்தில் பிரதிபலித்தது.

"உள்ளே வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை. மஹேந்திரனைத்தான் நீ வெறுக்கிறாய். என் மனம் உனக்கு அடிமையாகிவிட்டது. கட்டிலிருந்து தளர முடியவில்லை. நீ இல்லாமல் வாழ்க்கை நடக்காது போலிருக்கிறது" என்று உணர்ச்சி ததும்பப் பேசினான் நவகுமாரன். மாலினி மௌனம் சாதித்தாள். அவன் உள்ளப்போக்கு அவளுக்கு முன்னமேயே தெரியும்.

'மௌனம் சாதிப்பது சுலபம். காதல் என்பது மயக்கம் என்று சொல்லுகிறார்கள் தபஸிகள். சாகரத்தின் ஊற்று என்கிறார்கள். எனக்கு அப்படித் தோன்றவில்லை. அது தெய்வம்! அதைப் பூஜை செய்கிறது என் உள்ளம்" என்று அடுக்கிக்கொண்டே போனான் நவகுமாரன். குழந்தை உளறுவது போன்றிருந்தது அவனது பேச்சு.

"எனக்கு ஒருவரையும் மணப்பதாக உத்தேசமில்லை. இந்த ஆண் பிறவிகளைக்

கண்டாலே எனக்கு அளவிலா வெறுப்பு" என்று சுருக்கிச் சொன்னாள் மாலினி. அவளது முகத்திலும் ஒரு வெறுப்புத் தோன்றி மறைந்தது. உண்மையில் இம்மொழிகள் அவள் மஹேந்திரனைப்பற்றி வைத்திருந்த அபிப்பிராயத்தின் எதிரொலி பேரலையைத் தேக்கி எதிர்ப்பது போலிருந்தது அவளது மொழிச்சுவர். நவகுமாரனுக்குத் தலையில் இடிவிழுந்தது போன்றிருந்தது. அவன், அவள் இவ்வளவு கடூரமாய்ப் பேசுவாள் என்று எதிர்பார்க்கவில்லை. அடக்கமுடியாத கோபம் அவனது உள்ளத்தில் அலைமோதக் கிளம்பியது. அதை அடக்கிக் கொண்டான் பெருமுயற்சியுடன்.

"இயற்கையே சோபனத்துடன் கொந்தளித்து நிற்கிறது. கடைசியாக ஒரு முறை கேட்கிறேன் சொல்லிவிடு" என்று கெஞ்சுவது போல் கேட்டான் நவகுமாரன். "முடியாது" என்று முணமுணத்தாள் மாலினி.

"இத்தனை நாழிகை என் மனம் உனக்கு அடிமைப்பட்டிருந்தது; இப்போது நீ என் அடிமை என்பதை ஞாபகம் வைத்துக்கொள். நடு ஆற்றில் இருக்கிறோம்—நினைத்துப்பார், உன் உயிர் என் கையில் இருக்கிறது" என்று கூறிக்கொண்டே அவளை நெருங்கிவந்தான் நவகுமாரன்.

"என்னைக் கங்கைக்குப் பலிகொடுப்பேன் என்கிறீர்களா?" என்றுசொல்லிக்கொண்டே அவளும் எழுந்தாள்.

"நான் எப்பொழுதும் காரியங்களைப் பாதியாகச் செய்து நிறுத்துவதில்லை. நீ போன பிறகு நான் என்ன செய்வது? கங்கை விழுங்கப்போவது இரண்டுபேரையும்தான்" என்பவனாய்த் தன் கரத்தை நீட்டினான் நவகுமாரன். மாலினி திடீரென்று திரும்பி அவனது கரத்தை வெடுக்கென்று கடித்துவிட்டுத் தண்ணீரில் குதித்துவிட்டாள். படகு காற்றடித்து ஒதுங்கிச் சென்றது.

நீந்திச் சென்றுகொண்டிருந்த மாலினியைப் பார்த்துக்கொண்டே மௌனமாக நின்றான் நவகுமாரன். அவனது மனத்திரை புயலடித்துச் சுருங்கிவிட்டது. அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கண்களில் நீர் துளித்தது. கரத்தில் உதிரம் வழிந்தோடிற்று. அதைக்கூட அவன் பொருட்படுத்தவில்லை. திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டு, "கரை எவ்வளவு தூரம் இருக்கிறது தெரியுமா? விஷயம் தெரியாமல் சாஹஸம் செய்கிறாய். கணத்தில் மாறிவிட்டது என் எண்ணம். படகில் ஏறிக்கொள். அம்மாவுக்கு ஏக்கத்தைக் கொடுக்காதே. பொறுப்பொன்றிருக்கிறது" என்று போதித்தான் அவன். சற்று முன் அவன் பேசிய வார்த்தைகள் அவன் மனத்திரையில் கனவுபோலாகி மறைந்துவிட்டன. உணர்ச்சித் துடிப்பு நிகழ்ச்சி அலையில் மடிந்து விட்டது. முகமுழுதும் குப்பென்று வியர்த்தது.

மாலினியின் காதுகளில் இச்சொற்கள் விழுந்தன. நவகுமாரனது வார்த்தைகளில் உண்மை துளித்தது அவளுக்குத் தெரியாமல் போகவில்லை. "ஆனால்—மறுபடி அவரருகே செல்வதா?—ஆனாலும் உண்மை ஆன்மா அல்லவா அவருடையது" என்று ஏதேதோ உளறிற்று அவளது உள்ளம். கடைசியில் முடிவுக்கு வந்தது. கைகளையசைத்துப் படகை நோக்கி நீந்தினாள் மாலினி. கிட்ட நெருங்கியவுடன் ஒரு கை கொடுத்துப் படகில் தூக்கிவிட்டான் நவகுமாரன் அவளை.

அவனது கரத்திலிருந்த ரத்தம் இன்னும் வழிந்தோடிக்கொண்டுதானிருந்தது. அதை அவன் கவனிக்கவே இல்லை. சந்திரிகை சோகச் சுடரைப் பரப்பி மிளிர்ந்தது. அதன் அசைவில் குதூகலம் இல்லை. வாடைக்காற்று மூங்கில் தோப்புக்குள் புகுந்து ஊளையிட்டுக் கொண்டிருந்தது. கங்கையின் அசைவு தனிமையை விளக்கிற்று.

மாலினி அவனது கரத்தை நோக்கினாள். அவளுக்குத் தூக்கிவாரிப்போட்டது. கோபக் கனலின் முடிவு இதுதான் என்று அவளால் நினைக்கக்கூடப் பயமாயிருந்தது. துக்கம்

காந்திஜெயந்தி கதர் விற்பனை

தீபாவளி வரை

நீடிக்கப்பட்டிருக்கிறது.

28-10-43 முடிய

அகில பாரத சர்க்கா சங்கக் கடைகளிலும், அத்தாக்ஷி பெற்ற டெப்போக்களிலும் வாங்கும் ஜவுளிக்கு ரூபாயில் ஒரு அணா கமிஷன் கொடுக்கப்படும்.

அகில பாரத சர்க்கா சங்கம்,
தமிழ்நாட்டுக் கிளை.

நெஞ்சையடைத்துக்கொண்டது. விம்மினாள். புடவைத் தலைப்பிலிருந்து ஒரு பக்கத்தை அவசர அவசரமாகக் கிழித்து, நவகுமாரனது கரத்தில் ஏழெட்டுச் சுற்றுச் சுற்றினாள். தாயின் மனதுபோல் அவளுள்ளம் பொருமிற்று. நவகுமாரன் கையை விடுவித்துக்கொள்ளவில்லை. மௌனமாக நின்றான். தூரத்தில் தாரகையொன்று ஆகாயத்துக் கீழெல்லையை மிதித்து நின்றது.

5

மறுநாள் இருட்டி நான்கு நாழிகை இருக்கும். அறையில் தனியாக உட்கார்ந்திருந்தான் நவகுமாரன். கையில் கட்டியிருந்த துணியை இன்னும் அவிழ்க்கவில்லை. மனச் சோர்வு முகத்தில் பிரதிபலித்தது. ஜன்னலின் வழியே பூர்ண சந்திரன் தெரிந்தது. மரங்கள் அசைந்து கொடுத்துக்கொண்டிருந்தன. சோபனமான இரவு. தூரத்தில் கோயிலின் தீபம் ஒளித்தது. நவகுமாரனுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. கண்களைப் பொத்திக்கொண்டான்.

வாசற்படியருகே விம்மல் சப்தம் கேட்டது. அவன் திரும்பினான். மாலினி நின்றுகொண்டிருந்தாள். அவளது வலதுகரம் எதையோ பிடித்துக்கொண்டிருந்தது. "எதற்காக அழுகிறாய்? கையிலென்ன?" என்று கேட்டான் நவகுமாரன். பதிலொன்றும் வரவில்லை. கொஞ்சநேரம் கழித்து, "கை எப்படி இருக்கிறது? மஹாபாதகம் செய்துவிட்டேன். பச்சிலைகள் கொணர்ந்திருக்கிறேன்......" என்றாள் மாலினி. "மருந்தொன்றும் போட்டுக் கொள்வதாக உத்தேசமில்லை. மனப்புண் ஊன்றி ஆழ்ந்து ஆற்றமுடியாமல் போய்விட்டது. வெளிப்புண்ணைப்பற்றி என்ன கவலை?" என்றான் நவகுமாரன். குரலில் விரக்தி நிறைந்திருந்தது. "மன்னிப்புக் கிடையாதா? கடூரமாகப் பேசுகிறீர்களே? என்னைக் கொன்றுவிடுங்கள்" என்றாள் மாலினி. அவன் மௌனம் சாதித்தான். அவனது இமைகளினின்று நீர்த்துளிகள் உதிர்ந்தன.

மாலினி அவனை நெருங்கி, அவனது மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டு, விக்கிவிக்கி அழுதாள். "மாலினி, நீ குழந்தைதான்! உணர்ச்சியிருக்கிறது. அதை அடக்குகிறாய். அது பிசகு" என்றான் நவகுமாரன். சந்திரிகை ஜாலநடனம் செய்தது விண்ணின் குறுக்கே. அதைச் சுட்டிக்காட்டி, "சம்மதம்தானே?" என்று கேட்டான் நவகுமாரன். நாணத்துடன் கண்களைத் துடைத்துக்கொண்டே தலையசைத்தாள் பெண்தெய்யம். மரக்கிளையில் சிறகுகளை அடித்துக்கொண்டிருந்தது ஒரு பறவை. நவகுமாரன் அவளை அணைத்துக்கொண்டான்.

மேதாஸ்

"பாஸ்பரஸ் தைலம்"

(வெளி உபயோகத்திற்கு மட்டும்)

முடக்குவாதம், கீல்பிடிப்பு, சகலவித வலிகள்

இவைகளுக்கு

நிகரற்ற கைகண்ட மருந்து

பிரபல டாக்டர்களும், பொதுஜனங்களும் புகழ்ந்து அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ.,

மருந்து வியாபாரிகள்,

250, சைனா பஜார் (மாடி), சென்னை.

அக்குழந்தைகள்

218543

ரா. விழிநாதன்

●

ஹரிபுரம் என்ற கிராமம் கப்பிரோட்டிற்கு வெகுதூரத்தில் உள்ளது. வெளியூர்களுக்குப் போவது என்றால் மணல் வெளிகளையும். வயற்புறங்களையும் கடந்து கப்பிரோட்டை அடைந்தால்தான் பஸ்கிடைக்கும். ஹரிபுரம், ஸகதேவபுரம், ஜயபுருவா முதலிய இடங்களுக்குச்செல்லும் பிரயாணிகள் இங்கேதான் இறங்குவார்கள். ஆகையால் அந்த பஸ்ஸ்டாண்டுக்கருகில் பகல் வேளையில் சில சின்னஞ்சிறு கடைகள் திறக்கப்பட்டிருக்கும். வெற்றிலை, பாக்கு, சுருட்டு, முறுக்கு, மிட்டாய், பூரி, ஜிலேபி முதலியவைகள் அங்கே கிடைக்கும். சிறு முதலைக்கொண்டு வாழ்க்கையோடத்தைக் கரைசேர்க்கும் துணிவுள்ள சில கிராமவாசிகள் தாம் வெகுதூரத்திலிருந்து வந்து இங்கே கடைவைத்திருந்தனர். பஸ் லாரிகள் சாதாரணமாக இவ்விடம் ஒருமணி நேரமாவது நிற்பது வழக்கம். அதனால் யாத்ரிகர்களுக்கு-கிராமவாஸிகளான பிரயாணிகளுக்கு சிற்றுண்டியருந்தவும், சிறிது களைப்பாறவும் வசதி கிடைக்கும். அங்கு இரண்டு மூன்று கடைகள் நிரந்தரமாக நடக்கக் காரணமும் அதுவே.

சமீபத்தில் ஒரு கிணறு. ஆலமரமும் அரசமரமும் நிழல்தரும் தோட்டமாக விளங்கியது. இதுதான் அவிடத்திய நந்தவனம்-ஸௌந்தர்ய நகரம். நடுப்பகல்களில் வெயிலின் உஷ்ணம் தாங்காது. ஆகாயம், பூமி, நாற்றிசைகளிலும் ஒரே வெக்கையாக இருக்கும். நடுப்பகலில் ஹரிபுரம் முதலிய இடங்கள்போகும் பிரயாணிகள் இவ் ஆலமரத்தையும் அரசமரத்தையும் சரணடைவார்கள். இல்லையேல் பக்கத்திலிருக்கும் கள்ளுக்கடையையடைந்து இரண்டு மூன்றணாச் செலவில், ஸிம்லா, தார்ஜிலிங், மஞ்சூரி, உதகமண்டலம், இவைகளில் அனுபவிக்கும் ஆனந்தத்தை மிகவும் சுலபமாக எய்துவார்கள். இரண்டொரு பனைமட்டைகளைக்கொண்டு போடப்பட்டிருக்கும் ஒரு குடிசை. அதற்குள் மறைவாக வைக்கப்பட்டிருக்கும் பானைகளைக்காவல்புரியும்பொருட்டு நியமிக்கப்பட்டிருக்கும் ஈ ஊழியர்கள் ஆடல் பாடல் புரிந்துகொண்டு குடிகார ரஸிகர்களை வரவேற்ற வண்ணமிருப்பார்கள். மண்தரை, கள் சிந்தி நனைந்திருக்கும். மொந்தைகள் உடைந்து கிடக்கும். பாதி எரிந்துபோயிருக்கும் சுருட்டுக்களும் சாம்பலும் கீழேகிடக்கும். இவைகளின்மேல் வெறுக்கத்தக்க பச்சைநிற ஈக்கள் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும்.

இந்த ரோட்டிற்கு ஹரிபுரத்திலிருந்து இரு குழந்தைகள் எண்ணெயில் செய்த ஜிலேபியும், பூரியும் விற்கவரும். இதற்குமுன்பெல்லாம் இவைகளின் தகப்பன் வந்துகொண்டிருந்தான். ஆனால் அவன் இறந்தபின்னர் தமது பிதுரார்ஜிதமான வியாபாரத்தை விடாமல் இக்குழந்தைகள் பிடித்துக்கொண்டன. ஒருவனுக்குக் கிட்டதட்டப் பன்னிரண்டு வயது இருக்கும். மற்றவனுக்கு ஆறு இருக்கும். இரு குழந்தைகளும் மிகச்சோனி, பலமற்றவை. கட்டும் துணிக்கும் நாதியற்று அரைவயிறுண்டு இளைத்துத் துரும்பாயிருக்கும் சில குழந்தைகள், வாழ்க்கைச்சுமையைத்தாங்கமாட்டாமல் தெருவிலோ, தோப்புக்களில் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டோ, வயல்புறங்களிலுள்ள மண்ணாங்கட்டிகளைப்பொறுக்கி ஒன்றையொன்று அடித்துக்கொண்டும், திட்டிக்கொண்டும் இருக்குமே, அவைகளையொத்த குழந்தைகள் தாம் இவையும்.

இருகுழந்தைகளும் தினமும் ஜிலேபியும் பூரியும் நிறைந்த நாற்கோணமுள்ள தட்டு ஒன்றைத் தூக்கிக்கொண்டு கப்பிரோட்டையடையும். தின்பண்டங்களை விற்றுக்கிடைப்பதை எடுத்துக்கொண்டு மாலையில் வீடு திரும்பும். தட்டு எண்ணெய்தோய்ந்த அழுக்குக் கந்தையினால் மூடப்பட்டிருக்கும். எண்ணெயின் சிக்குவாஸனை 'குப்'பென்று நாற்புறமும் வீசும். இத்தட்டின் உதவியைக்கொண்டுதான் ஒரு குடும்பம் நடந்துவந்தது. சாலையின் ஓரத்தில் தின்பண்டங்களைவிற்று, மிகுந்ததை வீட்டிற்குக்கொண்டுவந்துவிடும். எவ்வளவு பசித்தபோதிலும் ஜிலேபியையோ, பூரியையோ எடுத்துத்தின்ன இவைகளின் மனம்துணியாது. தாயின் சிநேகம் நிறைந்த பயம்தான், இக்குழந்தைகளை நேரான பாதையில் பொய்ம்மையின்றிப் போகத் தூண்டிவந்தது. தாயுள்ளத்திலிருக்கும் பிரேமை, இச்சிறு ஹிருதயத்தை வாடவிடாமல் மலரவைத்திருக்கும். அவளிடமுள்ளபயம் இவைகளைப் பொய்ம்மையினின்று கண்டிக்கும். தாய் அருகில் இல்லாமல் வீட்டில் அமர்ந்திருந்தபோதிலும், குழந்தையுள்ளம், "தாய் பக்கத்துப்புதரிலிருந்தோ, ஆகாயத்திலிருந்தோ, கார்முகில்களின் மத்தியில் ஒளிந்துகொண்டோ, தங்கள் செய்கைகளைக் கவனித்து வருகிறாள், நாம் அவளை ஏமாற்ற முடியாது" என நினைக்கும்.

இவ்விரு குழந்தைகள் தாம் தாய்க்கு இரவு பகல், இஹலோகம்,—பரலோகம், துணிவு—

கடமை, அழுகை—சிரிப்பு, சுகம்—துக்கம், வாழ்க்கை—மோகம், முதலியவைகளாக விளங்கி வந்தன.

- 2

ஆனி மாதம் கடும் வெய்யில் வெக்கைக் காற்று! தீப்பொறி பறக்கும் சூரியனது கிரணங்கள்! உலையில் காயும் இரும்பைப்போல் தகிக்கும் பூமி! இதில் யார்தான் நிற்பார்! உலகமே சாயாதேவியைச் சரணடையத் துடித்துக்கொண்டிருந்தது. மண் ரோட்டிலுள்ள புழுதியை மூச்சுத் திக்குமுக்காடும்படி எழுப்பிக்கொண்டிருந்தது காற்று. அது உலகத்தையே புரட்ட நினைத்ததுபோலும்! வாயையும் இறக்கைகளையும் விரித்து மூச்சு வாங்கிய வண்ணம் மரக்கிளைகளில் பறவைகள் உட்கார்ந்திருந்தன. ஆகாயம் பழுப்பேறிக்காணப்பட்டது, இக் கடும் வெப்பத்தில்-முக்கண் படைத்த ருத்ரமூர்த்தியான நடராஜப்பெருமான், 'ஆனி'யின் உருவம் தரித்துப் பிரளய தாண்டவம்புரிவதுபோலத் தோன்றியது.

சிறிது சிறிதாகப்பொழுது அதிகரித்தது. 'பஸ்' ஒன்று வந்தது. சிறிதுநேரம் நின்றது. சில யாத்ரிகர்கள் இறங்கினர். சற்று ஆச்வாசப்படுத்திக்கொண்டு அது மறைந்தது. மற்றொரு பஸ். அது கல்யாணத்திற்குச் செல்லும் பிரைவேட் பஸ். அதுவும் சற்று நின்றது. இரு குழந்தைகளும் சில ஜிலேபிகளும் பூரியும் விற்றன. நடுப்பகல் நெருங்க ஆரம்பித்தது. மணி 11 அடித்தது. காற்றும் தனது கடமையை ஊக்கத்துடன் நிறைவேற்ற ஆரம்பித்தது. சாலையில் நடமாட்டம் வரவரக் குறைந்தது. கடைக்காரர்களும் நடுப்பகலைக் கழிக்க மரநிழலை அணுக ஆரம்பித்தனர். இரு குழந்தைகளும் இன்று முற்பகலே விடுபோக நினைத்தன. ஏனெனில் அவைகளுடைய அன்னை நோய்வாய்ப்பட்டிருந்தாள். அவளோ வீட்டில் தனியாயிருந்தாள், நோய்வாய்ப்பட்டிருக்கும் தாயைத் தன்னந்தனியாக வீட்டில்விட்டு எவ்வளவு நாழிகைதான் இங்கே தங்குவது? தாயும், இன்று மத்தியானம் வந்துவிடுங்கள் என்று கூறியிருந்தாள்.

பெரிய பையனது பெயர் ரங்கன். சிறியவன் பெயர் சுப்பன். பெரியவன் காசை எண்ணி, இடுப்புத்துணியின் ஒரு தலைப்பில் நன்கு முடிந்துகொண்டான். பிறகு தட்டைத்தூக்கிக்கொண்டு தன் தம்பியுடன் புறப்பட்டான். வயதில் முதிர்ந்த கடைக்கர்ரர்கள் இக்குழந்தைகளைச் சிறிதேனும் கவனிக்கவில்லை. ஒருவராவது தடுக்கவும் இல்லை. "இந்த வெய்யிலில் போகாதே; இது காலதேவனின் அக்னிக் கொப்பறை." என்று பரிவுடன் அறிவுறுத்துபவர் அங்கு யாருமே இல்லை. சிறிய குழந்தைகள்பால் தயை காட்டும் ஜீவனே அங்குக் காணோம். ரங்கன் தன் தம்பியின் கையில் ஒரு பூரியைக்கொடுத்துக் கூறினான்--"தம்பி! ஓடியா, வெய்யிலாப்போவுது பாரு. அம்மாவும் தேடிட்டிருக்கும். சட்டுன்னு ஓடியா?-" ஆவலுற்ற கண்களுடன், பூமியை நோக்கிய வண்ணம் சுப்பன் உற்சாகமாகத் தலையை ஆட்டி சம்மதத்தைத்தெரிவித்தான். கப்பிச் சாலையைத்தாண்டி வயல் வரப்பின் வழியே இரு குழந்தைகளும் நடக்கவாரம்பித்தன. ரங்கனது தலை புக்ஷணத்தட்டை சுமந்து நின்றது. சுப்பன், தன் இடுப்பில் தளந்து அவிழ்ந்து போன வேஷ்டியை ஒரு கையில் பிடித்துக் கொண்டும் மற்றொரு கையில் பூரியை எடுத்து ருசி பார்த்துக் கொண்டும் ரங்கன் பின்னே ஓடவாரம்பித்தான். பாவம்! இந்த ஆனிமாதக் கடும் வெய்யிலில், காலில் செருப்பில்லாமலும், தலைமறைவிற்குக் குடையற்றும் இரு குழந்தைகளும் சென்று கொண்டிருந்தன. வெகு தூரம் வரையில் பாலைவனம்போலொத்த தரிசு நிலங்கள். பசுமை கண்ணுக்கெட்டியதூரம்வரை தென்படவேயில்லை. சூரியனது கிரணங்கள் மழுபோல் காய்ந்துகொண்டிருந்தன. உஷ்ணக்காற்றுவேறு மண்ணையள்ளித்துவிக்கொண்டிருந்தது. 'வந்தேமாதரம்' பாடிய கவியால் சுஜலாம், ஸுபலாம், மயஜசீதலாம், சஸ்ய ச்யாமளாம், என்று வர்ணிக்கப்பட்டுள்ள பூதேவிக்கு இந்த அனாதைக்குழந்தைகள் பேரில் என்ன துவேஷமோ தெரியவில்லை, அனலைக் கக்கிக்கொண்டிருந்தாள்.

ரங்கன் வெகுதூரம்வரை தன் பார்வையைச் செலுத்தினான். பக்ஷிகளோ, பசுக்களோ, பசும் புல்லோ தென்படவேயில்லை. தரிசு நிலங்களின் மணல் வெளிமேல் சூரியன் தனது வெப்பத்தை வாரி இறைத்துக்கொண்டிருந்தான். மணல் பட்டாணிக்கடலைபோல் பொரிந்துகொண்டிருந்தது. வஸ்திரமற்ற குழந்தைகளின்மேல் மணலை அள்ளி வீசும் கைங்கரியத்தை வாயு பகவான் செய்துகொண்டிருந்தான். குழந்தைகளோ வெகுதூரம் போயாகவேண்டும். வயல்களைத் தாண்டினால் ஜகதீசபுரத்தின் மாந்தோப்பைக் காணலாம். அங்கே சில குடிசைகள் உண்டு. அதையும் கடந்து சென்றால் சகதேவபுரத்தின் பொட்டல். அதற்குச் சமீபத்தில்தான் 'கோஷி' என்ற நதி. அதில் மழைக்காலத்திலாவது ஜலம் ஓடுமா என்பதே சந்தேகம். கோஷியையும் தாண்டினால்......! அப்பா! ஹரிபுரத்தை நினைக்கவே மனம் பதட்டமடைகிறதே! ஆனால் இச்சிறு குழந்தைகளும் தங்கள் தங்கள் சின்னஞ் சிறுகால்களால் வாழ்க்கையின் பெரும் பாலைவனத்தைத் தாண்டும் பொருட்டு முன்னேறிக் கொண்டுதானிருந்தன.

'தாவமாயிருக்குது அண்ணே!'

கையிலிருந்த பூரியைக் காலிசெய்து உதட்டை நக்கியவண்ணம் மேற்கூறிய வார்த்தையைச் சுப்பன் ரங்கனிடம் கூறினான். ரங்கன் சுற்றுமுற்றும் பார்த்தான். வெகு தூரத்தில் தொடுவானத்திற்கப்பால், மங்கலாப் பசு

மைபோல் தென்பட்டது. ரங்கனின் மௌனத்தைக்கண்டு அழுகை கலந்த குரலில், "அண்ணே, தண்ணி வேணும்" என்றான் சுப்பன். ரங்கன் கடுகடுத்துக்கொண்டான். "எலே, பின்னாலேயே ஓடியாடா முணுமுணுக்காமே. முணுமுணுத்தே ஒதைவிளும். அதோ தெரியுது பாரு பச்சியா, அங்கே குளமிருக்குது போய் குடிச்சுக்கலாம் வாடா". அடக்கமுடியாத தன் தாகத்தை ஒருவிதமாக அடக்கிக்கொண்டு சுப்பன் அண்ணன் பின்னாலேயே சென்றான். அவனது கால்கள் கொப்புளித்துவிட்டன. கடும் வெய்யில்! தாள முடியாத தாகம்! வாயில் உமிழ்நீர்கூட வரண்டுவிட்டது! வரட்சி தாங்கவில்லை. எப்படி நடப்பான்? பாவம்! மூச்சு வேறு திணறவாரம்பித்தது. இருந்தாலும ரங்கனின் அதட்டல் அவனைப் பின்னோடு இழுத்துச் சென்றது. கூடியவரையில் சீக்கிரமாக வயல் வெளியைத்தாண்ட எண்ணினான். இரு குழந்தைகளும் முன்னேறிக்கொண்டிருந்தன. பசுமையாகத் தோன்றிய தோட்டமும் அவர்களுக்கு முன்னே போய்க்கொண்டே இருந்தது. அது கிட்டுவதாகத் தோன்றவில்லை. துர்ப்பாக்கியம் என்னும் மைதானம் விஸ்தீர்ணமாகத்தானே இருக்கும்! நம்பிக்கையைக் கைவிடாமல் அச்சமவெளியைத்தாண்ட முயலுவர் ஆற்றல் வாய்ந்த அறிஞர். சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு அந்த ஆற்றல் ஏது? ஆனால் ஆக்கியோனது சட்டம் குழந்தைகள் தாமே என்றெண்ணி விட்டுக்கொடுக்குமா? பச்சோந்தி நிறம் மாறுவதுபோல் மாறுபவையல்லவே அவனுடைய நியதிகள்!

பலமான காற்றடித்தது. அதன் மணல் அலைகளில் ஒருக்ஷணம் மூழ்கி மூச்சுத்திணறி திக்குமுக்காடின அக்குழந்தைகள். மெலிந்த விசனக் குரலில், "அண்ணே தண்ணி குடிக்காமே நடக்க முடியாதுபோலிருக்கண்ணே" என்றான் சுப்பன்.

ரங்கன் பொறுமை இழந்தான். வாடி வதங்கியிருக்கும் தனது இளைய சகோதரனைக்கண்டு துயருற்றுக் கூறலானான்: "தம்பி, அதோ பாரு, தோட்டம் தெரியுதில்லே, அங்கே போயிட்டம்னா தண்ணி கிடைச்சுடும். இங்கே தண்ணியைக் காணும் தம்பி. இதோத்தான் போயிடப்போறமே. இன்னொரு பூரி கூடத்தாரேன். வாடா தம்பி கொஞ்சம் வேவமா!"

சுப்பன் ஆவியிழந்தவன்போல காணப்பட்டான். அடி எடுத்துவைக்கச் சக்தியில்லை! 'தன் தலையில் தட்டு குடையாக உதவுகிறதே' என்றெண்ணி, தம்பியை அதன் நிழலிலே அழைத்துச்சென்றான் ரங்கன். ஆனால் ஆசை வார்த்தைகள் தாகத்தைத் தணிக்கும் சக்தி வாய்ந்தவனல்லவே! தனது தம்பியின் பலவீனத்தையறிந்த ரங்கன், 'தட்டைப் போட்டுவிட்டுத் தம்பியைத் தூக்கிச்சென்றால் என்ன' என்று யோசித்தான். ஆனால் தாயிடமுள்ள பயம் தட்டைவிட்டுச் செல்லத்துணிய விடவில்லை. தம்பி, தட்டு இவைகளுள் எது முக்கியமானது என்று நிர்ணயிக்கமுடியாமல் தவித்தது ரங்கனது குழந்தையுள்ளம். இரண்டையும் ரக்ஷிப்பதே தன் கடமை எனக்கருதினான். ஆகையால் முன்னே தம்பியும் பின்னே தட்டுடன் தானும் சென்றான் ரங்கன். திடீரென்று ஏதோ தடுக்கிக் குப்புற விழுந்துவிட்டான் சுப்பன். தட்டைக் கீழேவைத்துத் தம்பியைத் தூக்கி உட்காரவைத்தான். "அண்ணே, கொஞ்சம் தண்ணி வேணும்" என்ற குரல் சுப்பனது வாயினின்றும் எழுந்தது. ரங்கனுக்கும் நா வரண்டுவிட்டது. மணல்வெளியில் சூரியனது வெப்பம் தாங்கமுடியவில்லை. சுற்றுப்பக்கத்தில் கண் திறந்து பார்க்கவும் முடியவில்லை. ஆயப்பட்ட பஞ்சு வெய்யிலில் கிடந்தால் ஒளி வீசுமே, அதுபோலிருந்தது அம்மணல்வெளியும்! போதும் போதாதற்குக் காற்று மணலை அள்ளித் தூவ ஆரம்பித்தது. இதைப் பொருட்படுத்தாமல் ரங்கன் தம்பியைத் தூக்கி நிறுத்தி ஆச்வாஸப்படுத்தித் தட்டைத் தூக்கச்சென்றான். வெய்யிலின் தாபத்தில் ஜிலேபியின் எண்ணெய் கசிந்து தட்டை வழுவழுப்பாக்கி விட்டது. தாகமோர்பக்கம், தம்பியின் கஷ்டமோர்புறம்! அவசரத்தில் தூக்கிய தட்டு கை நழுவிக் கீழேவிழுந்தது. ஜிலேபியும், பூரியும் மணலில் உருண்டோடின. ரங்கன் ஆள் விழுங்கும் இம்மணல் வெளியைத் தாண்ட வெகு அவசரப்பட்டான். தட்டு, கீழே விழுந்து அவனது எண்ணத்தில் மண்ணைப் போட்டது. சுப்பன் உயிரற்ற கட்டைபோல் நின்றான். ரங்கனது கைகள் மிகவும் துரிதமாக வேலை செய்தன. ஜிலேபியும் பூரியும் தாயாரால் எண்ணி ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஒன்று குறைந்துவிட்டாலும் அடிபடவேண்டுமே என்ற பயம் அவனுக்கு. ஒன்றுவிடாமல் பொறுக்கி மணலைத்தட்டி, தட்டில் வைப்பது என்பது எளிய காரியமா? சுப்பன் "தண்ணீர் கொண்டாந்து தர மாட்டாயா அண்ணே!" என்று கெஞ்சியவண்ணம் கீழே உட்கார்ந்துவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சுப்பன் பிரக்ஞையற்றுவிட்டான். "என்னா தம்பி குந்திட்டே, எளுந்திரு. இதோத்தானே இருக்குது தோட்டம். இந்தா பூரி. இதைத் திண்ணுகிட்டே வாப்பா" என்று பரிவுடன் கூறித் தம்பியைத் தூக்கி நிறுத்த முயன்றான். ஆனால் முடிந்தால்தானே! கை நழுவியது. சுப்பன் குப்புற விழுந்தான். "அண்ணே தண்ணி" என்று மெலிந்த குரலில் கூறினான்.

ஆனிமாதம்! நடுப்பகல்! வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. ஆகாயம் தீக்குழம்பைக் கக்கிக்கொண்டு இருந்தது. ரங்கன் தட்டை வைத்துவிட்டு நம்பிக்கையிழந்து உட்கார்ந்தான். தம்பியை உட்கார்த்திவைத்தான். ஆனால் தலை நேர் நிற்கவில்லை. தொங்கவாரம்

பித்துவிட்டது. உதடு கறுத்தது. கை கால்கள் விறைக்கவாரம்பித்தன. இதைக் கண்ணுற்ற ரங்கன் முகவாய்க்கட்டையை நிமிர்த்தினான்! கைவிட்டதும் தலை தொங்கிற்று. ரங்கனுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. "சுப்பா தம்பி, சுப்பா" என்ற த்வனி நிதானமாக உச்ச ஸ்தாயியை அடைந்தது. கடைசியாக சுப்பனது வாயிலிருந்து "அண்ணே! தண்...ணி" என்ற மிகவும் மெலிந்த குரல் எழுந்து அடங்கி விட்டது. அவ்வளவுதான்! தம்பியை ரக்ஷிக்க முயன்றுகொண்டிருந்த அண்ணனும் மயங்கிக் கீழே விழுந்தான். ஆனி மாதம் தனது தூசிப் போர்வையின் உதவியைக்கொண்டு கபளீகரம் செய்துவிட்டது.

4

மாலைப் பொழுது. தபஸ்வினியைப்போல வேஷம்பூண்டு சந்தியா தேவி சோபையிழந்து ஹரிபுரத்தின் வயல் மேடுகளின் வழியே செல்லலானாள். வரண்ட காற்றுமட்டும் இடையிடையே பாம்புபோல் சீறிக்கொண்டிருந்தது. பக்ஷிகள் அசைவற்று மரக்கிளையில் அமர்ந்திருந்தன. வெய்யிலுக்குப் பயந்து குடிசைக்குள் சரண் அடைந்திருந்த கிராமவாசிகள் கண்ணை மருள விழித்துக்கொண்டு மாலைப் பொழுதைக்காண வெளிவந்தனர். மரங்களின் உச்சியில் பழுப்புநிற வெய்யில் விழுந்துகொண்டிருந்தது. கிராமத்துத் தெருக்களில் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு இரண்டொரு நாய்கள் குறுக்கும் நெடுக்கும் போய்க்கொண்டிருந்தன.

கிராமத்து முனையில் ஒரு சிறு குடிசை. அக்குடிசையின் ஒருபுறத்தில் கட்டிலொன்று போடப்பட்டிருந்தது. அதில் படுத்து இருந்த நோய்வாய்ப்பட்ட ஒரு மாது இங்குமங்கும் பார்த்து முனகவாரம்பித்தாள். "இன்றும் அதுங்களைக் காணோமே! எங்கே தங்கிடுத்துகளோ தெரியவில்லையே! பொறுக்க முடியல்லையே வலி! செத்துத்தொலையப்படாதா நானு! வரட்டும் சொல்லரேன். நல்ல சண்டித்தனம் பண்ணறதுக. சுப்பன் ரொம்ப விசமக்காரன். எங்கேயாச்சும் விளையாடிட்டிருப்பான். ரங்கனுக்குத்தான் வயசாயிடுச்சே வரவாண்டாம் வீட்டுக்கு? இங்கே நானு துடியாத் துடிக்கிறேன். அதுவபாட்டுக்கு எங்கேயோ தொலைஞ்சுடுத்துளே. நம்மை லச்சியம் பண்றதுகளா அதுவ."

நோய்வாய்ப்பட்டுள்ள அந்த ஸ்திரீ முனகிக் கொண்டே, அடுப்பைப் பற்றவைத்துச் சமைத்தாள். பிறகு வாசல்புறம் வந்து உட்கார்ந்து கொண்டு முனகவாரம்பித்தாள்"....இரண்டும் பசியோட வீட்டுக்கு வரும். ரங்கனுக்கு வயசாயிடுச்சு...ஆனா...சுப்பன்...தாளலியே...வலி... அடுப்பாண்டேபோய்......குடை...வான்:.. ஏன் இன்னிக்கி...இத்தனை...நாழியாவுது... தெரி... யலை...யே...ஐயோ...அப்பா...வலி..."

மாலைப்பொழுது இராப்பொழுதாக மாறியது. கிராமத்துக் கூரைகள்மேல் புகை பறப்பது காணப்பட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் தாள வாத்தியங்களுடன் இராமாயண ப்ரவசனம் சிவராம சாஸ்திரியார் வீட்டில் ஆரம்பமாகியது. மரங்களில் வௌவால்கள் கூட்டம்கூட ஆரம்பித்தன. தூசி நிறைந்த ஆகாயத்தினூடேயிருந்து நக்ஷத்திரங்கள் மங்லாகப் பிரகாசிக்கவாரம்பித்தன.

வியாதிக்காரியான அம்மாது சிறிது ஒலி கேட்டாலும் 'குழந்தைகள் திரும்பிவந்துவிட்டனவோ' எனப் பார்க்கப் பரபரப்புடன் வாசலையணுகுவாள். 'ஏன் திரும்பிவரக்காணோம்? இன்றுவரை இம்மாதிரி நேரம் கழித்து வந்தது இல்லையே, ஏன் இந்தத் தாமதம்?' எனக் கேள்விகள்மேல் கேள்விகள் கேட்டுக்கொள்வாள். இதற்கு யார் பதில் சொல்வது? காற்றிற்குப் பேசும் வன்மையிருந்தால், அல்லது நக்ஷத்திரங்கள் பேசும் சக்தி வாய்ந்தனவாயிருந்தால், அல்லது பூமிக்கே பேசும் திறமை உண்டென்றால், அல்லது ஆகாசம் பேசக்கற்றிருந்தால், எவ்வளவு ஸௌகரியமாயிருந்திருக்கும்! இவ்வளவையும் ஊமையாகச் சிருஷ்டித்த அந்தப் பிரம்மா, துர்ப்பாக்கிய தேவதைக்காவது பேசும் திறமை அளித்திருக்கக்கூடாதா? அளித்திருந்தால் மனித ஜாதிக்கு எவ்வளவு நன்மை—உபகாரம்—ஏற்பட்டிருக்கும்? இருந்தாலும் பிரம்மாவைக் குறைகூற நாம் யார்? நம்மால் ஆவதொன்றுமில்லை.

"மோஹன்லால் மஹ்தோ" என்ற ஹிந்தி கதை ஆசிரியர் எழுதியதைத்தழுவியது.

தைரியசாலி

கௌசி

வைத்தியக் கல்லூரியில் சந்துரு வந்துசேர்ந்து நான்கு நாள்கூட ஆகவில்லை. அதற்குள் அத்தனை பையன்களுக்கும் சந்துருவைத் தெரிந்துவிட்டது. எல்லோரும் அவனைப் புரளி செய்தவண்ணம் இருந்தனர். காரணம் சந்துரு ஜம்பம் பேசியதுதான். பட்டணத்தில் இருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளாமல் தம்முடைய வீரப்பிரதாபங்களையெல்லாம் அளந்து கொட்டிவிட்டான். அதுவும் யாரிடம்? முழு ஆளையே விழுங்கி ஏப்பம்விடும் கோபாலனிடம். கோபாலன் நினைத்தால் ஒரு பையனை சந்திசிரிக்க அடித்து விடலாம். அவனுக்குப் பையன்களிடம் அவ்வளவு செல்வாக்கு. சந்துரு அளந்து கொட்டின மறுநாளே கோபாலன் மற்றப்பையன்களிடம் பின்வரும் பிரசங்கம் செய்தான். “நம்ம காலேஜுக்குச்சந்துரு என்று ஒரு பயல் புதிதாக வந்திருக்கான். அவன் அசகாயசூரன். அவன் நள்ளிரவிலே தஞ்சாவூர் சாலையிலே மூன்று கள்ளர்களை அப்ளாம் நொறுக்கிறாப்போல் நொறுக்கித்தள்ளியிருக்கிறானாம்”. “என்ன! அப்ளாம் நொறுக்கிறாப்போலேயா?” என்று கேட்டான் அப்பாவி சோமு சரியாகப் புரிந்துகொள்ளாமல். “சும்மா இருடா பருப்புத்துவையல்” என்று மற்றவர்கள் நெருக்கினார்கள் சோமுவை. கோபாலன் தொடர்ந்து, “சந்துருவுக்குப் பிசாசுன்னா கொஞ்சம்கூட பயமே கிடையாதாம். அவன் ஊரிலே பிசாசு நடமாடுகின்ற இடத்திற்கு யாராவது காரியமாப் போகவேண்டியிருந்துன்னா சந்துருவைத்தான் அனுப்புவார்களாம். சந்துருவைக் கண்டால் பிசாசெல்லாம் நம்ம கையிலே ரவாதோசை படுகின்ற பாடு படுமாம்” என்றெல்லாம் சரடு திரித்தான். பையன்களெல்லாம், “இது சுத்த உடான்ஸ்” என்று சொன்னார்கள். சந்துருவையும் கேட்டுப் பார்த்தார்கள். சந்துருவாவது இந்தக் கதையெல்லாம் கோபாலன் சரடு என்று சொல்லியிருக்கலாம். அசட்டுச் சந்துரு ஜம்பத்துடன் அவ்வளவும் உண்மையென்று சவடால் அடித்தான்.

பையன்கள் கூடி சந்துருவின் தைரியத்தைப் பரிசோதிக்க முடிவுகட்டினார்கள். வெள்ளிக்கிழமையன்றுதான் அனாதைப் பிணங்கள் பரிசோதனைக்காக ‘அனாடமி’ தியேட்டருக்குக் கொண்டுவரப்படும். சனிக்கிழமையன்றுதான் அனாடமிப்பாடம். ஆதலால் வெள்ளிக்கிழமை இரவு பூராவும் பிணங்களைச்சோதனை அறையிலேயே வைத்திருப்பது வழக்கம். இது எல்லாப் பையன்களுக்கும் தெரியும். மாணவர்கள் சந்துருவைக்கலாட்டாசெய்ய எப்பொழுது வெள்ளிக்கிழமை வரும் என்று காத்திருந்தனர். வெள்ளிக்கிழமையும் வந்தது. அன்று மத்தியானமே மறுநாள் பரிசோதனைக்காக நான்கு பிணங்களும் வந்தன. வெள்ளிக்கிழமை சாயந்திரம் பையன்களெல்லாரும் ஹாஸ்டலுக்கு அடுத்த புல் தரையில் சந்துருவுடன் கூடினார்கள். அவர்களிடையே கோபாலன் கம்பீரமாக வீற்றிருந்தான். கோபாலன் சந்துருவைப் பார்த்து, “நீ நிஜமாகவே தைரியசாலியாடா சந்துரு” என்று கேட்டான். “அதற்கு என்ன சந்தேகம்” என்றான் சந்துரு அனாயாசமாக. “உனக்குப் பிசாசு, பிணத்திலெல்லாம் பயமில்லையே”. “பிசாசாவது கத்திரிக்காயாவது, மட்டையிலே பொடி இல்லாவிட்டால் பிசாசு கிட்டதான் நான் பொடி வாங்கிப் போட்டுக்கறது” என்றான் சந்துரு நிர்தாட்சிண்யமாக.

“பிசாசு பொடி போடுமா” என்று கேட்டான் அசட்டுச் சோமு.

“பட்டணம் பொடி போடாது. நெய்ப்பொடிதான் போடும்” என்றான் சந்துரு.

அதற்குள் கோபாலன், “அப்படியானால் உன் தைரியத்தை நாங்க பரிசோதிக்க உனக்கு ஆக்ஷேபம் இல்லியே” என்று கேட்டான்.

“கிடையவே கிடையாது. கொஞ்சம்கூடக் கிடையாது” என்றான் சந்துரு.

கோபாலன், “நம்ம சோதனை அறையிலே நான்கு பிணங்கள் நாளை எக்ஸ்பெரிமெண்டுக்காக வந்திருக்கின்றன. இன்று ராத்திரி பூராவும் அவை அங்கேதான் இருக்கும். இன்று இரவு 11 மணிக்கு நீ அங்குப்போகவேண்டும். உன் கையில் 4 பெயர்கள் எழுதிய சீட்டுகளைக் கொடுப்போம். கூடப் பசையும்கொடுப்போம். 4 சீட்டுக்களிலும் பசையைத்தடவிப் பிணங்களின் நெற்றியில் அவற்றை ஒட்டிவிடவேண்டும். பின்பு நீ திரும்பிவந்துவிடலாம்” என்றான். இந்தத் திட்டத்தை எல்லோரும் ஆமோதித்தனர்.

சந்துரு இந்தமாதிரி திட்டத்தை எதிர்பார்க்கவேயில்லை. அவன் வயிற்றுக்குள் இரண்டு மூன்று காண்டா மிருகங்கள் சண்டை செய்வது போல் இருந்தது.

“சோதனை அறையில் வெளிச்சம் இருக்குமோல்லியோ” என்று கேட்டான் சந்துரு ஹீனஸ்வரத்தில்.

"அதெல்லாம் ஒன்றும் கிடையாது. மெயின் ஸ்விட்ச்சை ஆப் செய்துவிடுவோம்" என்றார்கள். தூக்குமேடைமீது ஏறும் கைதிபோல் ஒரு சிரிப்புப் சிரித்துக்கொண்டு சரியென்று ஒப்புக்கொண்டான். சந்துருவுக்கு ஏண்டா இந்த ஆபத்தில் மாட்டிக்கொண்டோம் என்றிருந்தது. சாயந்திரம் ஹாஸ்டலில் சாப்பிடும்போது ஒருவரிடமும் பேசவில்லை. தனியாகத் தனது அறையில் உட்கார்ந்துகொண்டு யோசனை செய்தான். பிசாசுகள் உலாவுவது உண்மையா அல்லது புஸ்தகங்கள் சொல்வதுபோல் பொய்யா? அவனுடைய தாத்தா கிராமத்தில் மந்திரவாதியாக இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அவர் இரும்புக் கரண்டியால் பல பேய்களை அடித்திருக்கிறார் என்று ஊர் குடியானவர்கள் சொன்ன கதை நினைவுக்கு வந்தது. இரும்பு, கையிலிருந்தால் பேய்கிட்டே வராது என்பது கிராமத்தார்களின் நம்பிக்கை. ஹாஸ்டலில் கரண்டிக்கு என்னசெய்வது? ஹாஸ்டல் சமையல்காரர் மணி அய்யர் இப்போது இரும்புவிற்கும் விலையில் இரும்புக்கரண்டியை வைரக் கரண்டியைப்போல் பாதுகாக்கிறார். கடைசியில் குடையைத் தற்காப்பிற்கு உபயோகப்படுத்துகிறது என்ற முடிவுக்கு வந்தான்.

இதற்குள் மணி 11 அடித்துவிட்டது. சந்துருவுக்கு உடம்பு வியர்த்துவிட்டது. கை நடுங்கிற்று. வெட வெடவென்று நடுக்கத்துடன் நான்கு பெயர்கள் எழுதிய சீட்டுகளையும் பசையையும் வாங்கிப் பையில் போட்டுக்கொண்டான். கையில் குடையை எடுத்துக்கொண்டு சோதனை அறைக்குள் நுழைந்தான்.

மற்றமாணவர்கள் ஹாலின் கதவை மூடினர். அந்தப் பெரிய அறையில் சந்துரு தனியாக இருந்தான். கண்ணாடி ஜன்னல் வழியே வந்து சந்திர கிரணங்கள் கண்ணாடி பீரோவில் வீழ்ந்து உள் இருக்கும் பதார்த்தங்களை எடுத்துக் காட்டின. என்ன கோரம்! மண்டையோடுகளும் எலும்புக் கூடுகளும் இவனை ஆலிங்கனத்திற்கு வாவென்று அழைப்பது போல் இருந்தன. சடேரென்று "சீச், சீச்" என்று சப்தம் கேட்டது. சந்துரு நடுநடுங்கிவிட்டான். செவுத்துக்கோழியின் சப்தத்தைக் கேட்டு அவ்வளவு பயம். கடிகாரம் டிக், டிக் என்று அடிக்கும் சப்தம் பல்லாயிரம் மண்டையோடுகளின் மேல் பல் வரிசைகள் கீழ் பல் வரிசைகளில் மோதுவதுபோல் இருந்தது. மெதுவாக ஒரு அடி எடுத்துவைத்தான். இரண்டாவது அடியும் எடுத்துவைத்தான். சற்றுத்தூரத்தில் நான்கு பிணங்கள் துணியால் மூடப்பட்டுக் கிடந்தன. சந்துரு மார்பு பக் பக் என்று அடித்துக்கொண்டது. முதல் பிணத்தின் துணியை உருவினான். அதன் முகத்தைப் பார்க்காமலே பசையைத் தடவி, காகிதத்தை அதன் நெற்றியில் ஒட்டினான். இரண்டாவதுக்கும் ஒட்டியாகிவிட்டது! இதோ! மூன்றாவதுக்கும் ஒட்டியாகிவிட்டது. இன்னம் ஒன்றுக்கு ஒட்டிவிட்டால் சந்துரு தைரியசாலி என்ற பெயரும் 50 ரூபா சன்மானமும் பெற்ற மாதிரிதான், கோபாலனுக்கு 50 ரூபா நஷ்டம் வேறு!

. . .

நான்காவதற்கும் ஒட்டியாகிவிட்டது. இனிமேல் திரும்பவேண்டியதுதான். புகழுக்கும் பணத்திற்கும்! கதவை நோக்கித் திரும்பினான். என்ன ஆச்சர்யம்! வழியில் இன்னொரு பிணம் கிடந்தது. 5-ஆவது! அதன் நெற்றியில் சீட்டு ஒட்டப்படவில்லை. அதுமட்டுமா?

"என் சீட்டு எங்கே" என்று கோரமான குரலில் எக்காளச் சிரிப்புடன் கேட்டது அந்த 5-ஆவது பிணம். சந்துருவுக்கு மயக்கம் போடுவதுபோல் இருந்தது. சீட்டு ஒட்டியான பிணங்கள் நான்கு. சீட்டு ஒட்டாதது ஐந்து. "நான் ஆறாவது பிணம்" என்று எண்ணமிட்டான். "நான் ஆறாவது பிணம்" என்று அவனுள்ளே இருந்து ஒரு ஆவேசம் அவன் மூளையின் சுவரில் கதறியது. சந்துருவுக்குப் பயம் போய், பிரமை பிடித்தது. பிரமையில் வெறி பிறந்தது. இவ்வளவும் ஒரு வினாடிக்குள்ளே! வெறியுடன் பயித்தியம்போல் "நான் ஆறு" என்று கத்திக்கொண்டு குடையால் 5-ஆவது பிணத்தை அடிக்கத் தொடங்கினான். படார் படார் என அடிகள் படவே அது எழுந்திருந்தது. "நான் பிணமில்லை கோபாலன்! என்னை விட்டுவிடு நான் கோபாலன்" என்று கதறியது. இதெல்லாம் சந்துருவின் பீதியில் காதில் விழவில்லை. அவன் அடித்துக்கொண்டே துரத்தினான். கதவைத் தாண்டி வெளியே வந்தும் சந்துரு குடையால் அடிப்பதை நிறுத்தவில்லை. மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கட்டிப் பிடித்து நிறுத்தினர். அதற்குள் கோபாலன் வதங்கி வாடிவிட்டான். "போதுமப்பா போதும் இந்தா உன் 50 ரூபா, நீ தைரியசாலிதான்" என்று ஒப்புக்கொண்டான். மாணவர்கள் சந்துருவை மெச்சினர். பயத்தின் எல்லையைக் கடந்து பயித்திய நிலையில் இருந்துகொண்டு சந்துரு அடித்தான் என்று யார் கண்டார்கள்.

Edited & Published by N. R. Ramanujan, B.A., & Printed by S. Rangaswami, B.A.,
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam

உங்கள் ஆபீஸ், வியாபாரம்
குடும்பம் இவைகளுக்குச் சிறந்த
— அச்சுக்கூடம் —

காவேரி கலர் பிரஸ்

விதவிதமான எழுத்துக்கள்
கவர்ச்சியான வேலைப்பாடு

●

எல்லாவித ஜாப் வேலைகளும் குறித்த
காலத்தில் குறைந்த சார்ஜில் நேர்த்தி
— யாகச் செய்து கொடுக்கப்படும் —

●

பெஸண்ட் ரோடு, :: கும்பகோணம்

Regd. No. M. 4405.

CAUVERI.
19 OCT 1943

T. S. R.

டி. எஸ். ஆர்.

மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
நிகரற்ற தைலங்கள்

கோகுல் தைலம்
கோ-கோ நட் ஆயில்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத் திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி—மதராஸ்

T·S·R·&·CO.
PERFUMERS
KUMBAKONAM

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.